அமுதசுரபி

ஜனவரி 1992 ◆ பிரஜோத்பத்தி - தை ◆ மலர் : 44 ◆ இதழ் : 9

◆ ஆசிரியர் : விக்கிரமன் ◆ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா

◆ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்.

மேலட்டை அமைப்பு : ஜி.கே. மூர்த்தி

எங்கள் தமிழ்மொழி!
எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும்
வாழியவே!
—பாரதியார்.

வருடக்கணக்கு

சென்று போகும் ஆண்டிற்கு விடை கொடுத்து, வரும் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் வரவேற்பது நம் பண்பாடு.

சென்ற ஆண்டின் பற்று வரவை ஒருதடவை ஐந்தொகை போட்டுப் பார்ப்பதும் நம் வழக்கம்.

1991 - நினைத்தாலே சிலிர்க்கிறது. நெஞ்சில் தைத்த முள் அவ்வப்பொழுது வலியை எழுப்பி மறக்க முடியாத வேதனையை ஏற்படுத்துகிறது. இந்திராவின் திருமகன், நேரு பிரானின் பெயரன், கொடியவர்கள் சதியால் மனித வெடிகுண்டால் சிதறுண்டார். ஒரு முன்இரவுப் பொழுது தேசத்திற்குத் தலை குனிவை ஏற்படுத்திவிட்டது. கொலை செய்தவர்களையும், அதற்குத் திட்டமிட்டவர்களையும் புலனாய்வுத்துறை மிகவேகமாகத் துப்பறிந்து கைது செய்து வருகிறது. விரைவில் குற்றப் பத்திரிகை தயாராகிவிடும்.

பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் பல பெருந் தலைவர்கள் குரூரமாகக் கொலை செய்யப்பட்டனர். பாகிஸ்தானில் ஒரு தலைவரைக் கொன்றவனை அங்கு சூழ்ந்திருந்த கூட்டம் மறுகணமே அடித்துக் கொன்ற செய்தி நினைவுக்கு வருகிறது. அந்தச் செய்கை நியாயமன்று என்பது நமக்குத் தெரியும். அறநெறியுமாகாது.

நம் நாட்டில் கொன்றவர் யார், சதி செய்தவர் யார் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தும் புரிந்தும் சட்டப்படி விசாரித்து, நீதிமன்றம் ஏற்றிக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீது குற்றம் தெள்ளத் தெளிவான பிறகே நீதிபதி தண்டனை வழங்குகிறார். குற்றவாளிக்கு மேல் முறையீடு செய்யக் கடைசிவரை வாய்ப்பும் இருக்கிறது.

காந்திமகான் கொலை வழக்கு விசாரணையைப் பற்றி வரலாறு கூறுகிறது. ராஜீவைக் கொன்றவர்கள் சதி செய்தவர்கள் மீது விசாரணை நடத்தி உண்மைக் குற்றவாளிகள் விரைவில் தண்டிக்கப்படுவர்.



ரூ. 5,000- பரிசுபெற்ற
'நால் மனிதர்கள்'
கவிஞர் பாப்ரியா எழுதிய
தொடர்கதை ஆரம்பம்

✧

சிறுகதைப் போட்டியில்
ரூ. 3,000- முதல் பரிசு பெற்ற சிறுகதை :
ஜெயா வெங்கட்ராமன்
எழுதிய
விலை

✧

டாக்டர் கி. வேங்கடசுப்பிரமணியன்
இளைஞர்களுக்காக எழுதும்
நாளை நமதே
கட்டுரைத்தொடர்

✧

...ாடே, உலகமே அதை எதிர் ...ார்த்திருக்கிறது.

1991 ஆம் ஆண்டில் நடந்த ...ந்தத் துயரச் சம்பவத்தின் ...டிவு 1992 ஆம் ஆண்டின் ...ரலாற்று நிகழ்ச்சியாகப் ...பாகிறது.

மனித குலம் இன்னும் கற் ...ால நாகரிகமற்ற போக்கை ...நாக்கிச் செல்வதை எவ்வாறு ...டுப்பது?

மனிதரிடையே வெறித்தனம், ...ழிவாங்கும் மனப்பான்மை, ...ணவம், சட்டத்தை மதிக் ...ாமை, மனிதரிடையே வேற் ...மை பாராட்டுதல் இவை ...யல்லாம் நீங்குவதற்கு என்ன ...ழிவகை செய்யப் போகி ...றாம்?

நம் வேதங்கள், சாத் ...திரங்கள், அறநூல்கள், மகான் ...களின் போதனைகள், 'அன்பு ...நறியே எங்கள் வழி' என்ற ...றிக்கோளைக் கொண்ட சம ...ங்கள், தங்கள் சமயங்களின் ...ண்ணிக்கையை அதிக ...ாக்கப் பல வழி யுக்திகளைக் ...கையாளும் மதங்கள், புராணக் ...தை இதிகாசங்கள், பொன் ...மாழிகள் எல்லாம் சக்தி ...ற்றுப் போய்விட்டனவா?

மனிதப் பண்பை, நேய உணர்வை வளர்க்க அந்த உரங்கள் உதவவில்லையா?

மாமுனிவோர் வாழ்ந்த பொன்னாட்டில், அரக்கமனம் உள்ளவர்கள் அதிகம் வளர்வது ஏன்?

மூத்த அறிஞர்கள், பெரிய வர்கள், மடாதிபதிகள், தலை வர்கள், சமூகப் பெரியவர்கள், அரசியல்வாதிகள் மிக மிக அவசரமாகச் சிந்தித்துக் கலந்து பேசவேண்டிய கட்டா யம் ஏற்பட்டுவிட்டது.

1992 ஆம் ஆண்டு மற்றொரு புத்தன், ஏசு, காந்தி தோன்றி னால்தான் உலக மக்களிடையே அன்பு நெறி பரவி வேரூன் றுமா?

✸

சேதமில்லாத இந்துஸ்தானம்

கடந்த சில வாரங்களாகக் காவிரித் தண்ணீர் பிரச்னை செந்நீரைப் பெருக்கெடுக்கச் செய்கிறது. தமிழர் குருதி கர் நாடகக் கிராமங்களில் ஓடு கிறது. ஏழை எளியவர் வதைக் கப்படுகின்றனர்.

சாதுவான கர்நாடக மக்கள், அமைதி விரும்பும் தமிழ் மக்க ளுக்கு ஏன் தொல்லை தர வேண்டும்? அவர்களா அவ் வாறு செய்கிறார்கள்? அவர் களைத் தூண்டுகிறார்கள்.

ஒவ்வொரு மாநிலத்திலும் இப்படி ஏதாவதொரு காரணத் தால் கலவரம் ஏற்படுகிறது. கலவரத்தால் பாதிக்கப்படு பவர் அப்பாவி மக்கள்.

பேச்சு வார்த்தை, நடுவரின் முடிவு என்றெல்லாம் மருந் தளித்தாலும் நோய் முற்றி விடுகிறது. மதத்தால், மொழி யால் பாரத நாடு ஒன்று பட்டிருக்கிறது; ஒன்றுபட முடி யும் என்று எண்ணியிருந்தோம்.

ஒரே மதத்தைச் சேர்ந்தவர் களாயிருந்தாலும் மொழிப் பற்று வேற்றுமையை ஏற் படுத்தி விடுகிறது என்பதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

சரி; மதம், மொழி வேறுபட் டாலும் அரசியல்வாதிகளால் நாடு ஒன்றுபட்டு உயரும் என்று எண்ணியிருந்தோம். கனவாகி விடும் போலிருக் கிறதே!

காவிரித் தண்ணீர் பங் கீட்டுப் பிரச்னை சேதமில் லாத இந்துஸ்தானத்தைச் சேதப்படுத்திவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.

தென் ஆப்ரிக்காவிலும், பிஜித் தீவிலும், பர்மாவிலும், ஸ்ரீலங்காவிலும் இன்னலுற்ற தமிழினத்திற்குத் தாய்த்திரு நாட்டிலும் துன்பமா? துயரமா?

பிரிவினையை வரவேற்கும் ஓநாய்களின் தொங்கவிட்ட நாக்கை வெட்டிவிட ஒற்றுமைத் தேவன் தோன்றுவானா?

1992 ஆம் ஆண்டு தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்தும் ஆண்டாக மாறுமென எதிர் பார்ப்போமா?



திறமைக்குப் பரிசு

ஒப்பற்ற வழுவூர் நடனப் பாரம்பரியத்தின் இளம் குருத்து ஸ்ரீநிதி ரங்கராஜன் அவர்கள், அளவான அழகான அபிநயங் களுடன், நுட்பமாகப் பின்னப் பட்ட ஜதிகளுக்கு 'அசர' வைக்கும் வகையில் ஆடி அனைவரையும் வியக்க வைப் பார். மெய்சிலிர்க்க வைக்கும் அற்புத 'முகபாவங்கள்'. அப் பழுக்கற்ற சுத்தமான, கலப் படமேயில்லாத 'நிருத்யம்'. நட னத்துடன் ஒன்றிப் பார்ப் போரை மீண்டும் பார்க்க வைக்கும் அளவிற்கு அற்புத மாக ஆடும் ஓர் இளம் நாட்டியமணி இவர்.

ஈடு இணையற்ற நாட்டிய அரசி திருமதி கமலாவிடம் முதலில் பயின்று, பிறகு வழுவூர் பள்ளிக்குப் பெருமை சேர்க்கும் கலைமாமணி சுவாமி மலை திரு. எஸ்.கே. ராஜரத்னம் அவர்களிடம் நடனம் பயின் றவர். திருமதி கமலாவைப் போலவே இவரும் தன்னுடைய மூன்றாவது வயதில் ஆட ஆரம்பித்து சென்னை கிருஷ்ண கான சபையின் முதலாவது நாட்டிய கலா மாநாட்டின் தொடக்க விழாவில் 'இளம் குழந்தை மேதை'யாக அங்கீ கரிக்கப்பட்டுப் புகழ் பெற்றவர். கலைத்துறையில் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களுக்கு அளிக்கப்படும் 'ஸ்காலர் ஷிப்'பை இந்திய அரசாங் கத்தின் மூலம் நடனக் கலைக் காகப் பெற்றவர்.

உலக குழந்தைகள் ஆண்டை யொட்டிய 'யூத் மெரிட் அவார்டை' சென்னை ரோட்டரி சங்கத்தின் மூலமும், 'சிறந்த குழந்தைக் கலைஞர்' பரிசை ஸ்ரீனிவாச காந்தி நிலையத்தின் மூலமும் பெற்றவர்.

அமரர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் நினைவாக வழங்கப் பெறும் சிறந்த இளம் நடனக் கலைஞர் பரிசை, 1986 ஆம் ஆண்டு மியூசிக் அகாடமியின் ஆண்டு விழாவில் வென்று சிறப்புப் பெற்றார். தமிழிசைச் சங்கம், மயிலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸ் சொசைட்டி, இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டி, ப்ரும்ம கான சபை, தியாக ப்ரும்ம கான சபை இவற்றின் முக்கிய விழா நிகழ்ச்சிகளில் ஆடிய பெருமையுடன், தென் மண்டல கலாசார மையத் தொடக்க விழாவில் தமிழகத் தின் சார்பில் மறைந்த பாரதப் பிரதமர் அமரர் திரு. ராஜீவ் காந்தியினால் தேர்வு செய்யப் பட்டுத் திருவையாற்றில் ஆடி மக்களை மகிழ்ச்சியில் திக்கு முக்காடச் செய்தவர் இவர்.

சங்கீத நாடக அகாடமியின் 'யுவ உத்ஸவ்' விழாவிற்காக சிம்லாவிலும், 'நிருத்ய பிரதிபா' விழாவிற்காக டில்லியிலும் ஆடியிருக்கிறார். இவற் றுடன் போபாலில் 'உஸ்தாத் அலாடீன்கான் சங்கீத அகாடமி, யின் அழைப்பின பேரில் நடன நிகழ்ச்சி அளித்திருக்கிறார்.


சென்னைத் தொலைக்காட்சி நிலையம் 'பாபநாசம் சிவன்' அவர்களின் நூற்றாண்டு விழா விற்காகத் தயாரித்த சிறப்பு ஒளிபரப்பில் 'என்ன தவம் செய்தனை' பாடலுக்கு இவர் செய்த சிறப்பான அபிநயங் களை மறக்க முடியாது. தன் அழகான முகபாவங்களி னாலும், சிறப்பான மென்மை யான அபிநயத்தின் மூலம் குழந்தைக் கண்ணனின் வெவ் வேறு திருவிளையாடல்களை அவர் சித்திரித்த விதம் ரசிகர் களின் மனதைக் கொள்ளை கொண்டதை எவ்வாறு மறக்க முடியும்?

கலைத்துறையின் புகழ் வாய்ந்த மேதைகளான 'கிரிஜா தேவி', 'பீம்சென் ஜோஷி', 'ரவிசங்கர்', 'ஜாகீர் ஹுஸ்ஸைன்' ஆகியவர்களுடன், மிக்க கௌரவமாகக் கருதப்பட்டு வரும் 'டோவர் லேன் மியூசிக்' மாநாட்டில் இந்த இளம் நாட்டிய மணி 1991 ஆம் ஆண்டு ஜனவரியில் கலந்து கொண்டு சிறப்பிக்கப் பெற்றதைப் பெறும் பேறாகக் கருகிறார் இவர்.

பள்ளியிலும், கல்லூரியிலும் கலை விழாக்களிலும் கலந்து கொண்டு பல பரிசுகளை அடைந்த இவர், மத்திய தொலைக்காட்சி நிலையத்தின் 'சயன்' என்ற சிறப்பு நடன நிகழ்ச்சியில் மீராவின் பாட லுக்கு ஆடிய ஒடிஸிக் கலைஞ ருடன், ஆண்டாள் பாசுரங் களுக்கு அழகாக அபிநயித்து ரசிகர்களைச்சொக்க வைத்தார். 'ஸ்ரீநிதி' என்றாலே அவருடைய அற்புதமான முகபாவங்கள் மட்டுமே நினைவில் வரும் என்ற அளவிற்கு லயித்து ஆடக்கூடிய இவர் இப்பொழுது டாக்ட

ருக்குப் படித்துக் கொண்டிருக் கிறார். பரதக் கலையின் உன்னத வளர்ச்சிக்குப் பாடுபடு வதைத் தன் உயிர் மூச்சாக நினைக்கும் இந்த இளம் கலைஞருக்கு ஸ்ரீராம் நிறு வனங்கள் வழங்கும் திறமை சாலிகளுக்கான மிக உயர்ந்த பரிசான "SHRIRAM AWARD FOR EXCELLENCE IN DANCE" விருதும் 50 கிராம் வெள்ளிப்பதக்கமு பத்தாயிரம் ரூபாய் பொற்கிழ யும் அவருக்கு அளிக்கப்படு கின்றன.

∴



யுவ கலா பாரதி

சில மாதங்களுக்கு முன் ராணி சீதை அரங்கத்தில் இராமலிங்கர் பணி மன்றத் தினர் நடத்திய நடன நிகழ்ச்சி யில் ஓர் அற்புதத்தைக் கண்டு களிக்கும் வாய்ப்புக் கிட்டியது. அருட்பெருஞ்ஜோதி வள்ள லாரின் "கோடையிலே இளைப் பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவே,

என்ற இந்த வரிகளுக்கு வடிவம் கொடுத்து நிஜமாகவே அந்த அரங்கினுள் கடும் கோடையை நாம் உணரும்படி ஓர் இளம் நடனமணி அற்புதமாக அபிநயித்தார். அவரே குமாரி சுஜாதா சீனிவாசன் அவர்கள். அன்று அவர் காட்டிய 'நவரஸ பாவங்கள்' மிகுந்த பாராட்டைப் பெற்றன.

அழகிய முகமும், கொடி போன்ற நடனத்திற்கேற்ற உடல்வாகும் பெற்றிருக்கும் இந்த இளம் நடனமணி, நாட்டிய வானில் ஓர் ஒப்பற்ற இளம் தாரகை. 'சுஜாதாவின் நடனம் என்றாலே கண்களுக்கு ஒரு விருந்து' என்றும், 'நடனத் தில் படுசுட்டி, தலைசிறந்த நடனமணியாகப் பரிமளிக்கப் போகும் இவர் ஆடவே பிறந் தவர். முகபாவங்கள் அவ் வளவு உசத்தி, அதை அற்புத மாக முகத்தில் பிரதிபலிக்கச் செய்யும் ஆற்றல் மிக்கவர்' என்று தலைசிறந்த விமர்சகர் களால் புகழப்பெற்ற இவர், தன் புகழுக்குப் பெருமை சேர்க்கும் பல விருதுகளோடு, இந்த வருடம் 'பாரத் கலாசார் நிறுவனம்' அளித்த 'யுவ கலா பாரதி' விருதினைப் பெற்றிருக்கிறார். அவரைச் சந்தித்து வாழ்த்த அவர் இல்லத்திற்குச் சென்றபோது, ஒரு செதுக்கிய சிற்பம் உயிர் கொண்டு வந்ததைப்போல் என்னை வரவேற்று தன் அனுபவங்களை என்னிடம் பகிர்ந்துகொண்டார்.

வணக்கம், இந்த ஆண்டு 'யுவ கலா பாரதி' பட்டம் பெறும் உங்களுக்கு இதயம் கனிந்த வாழ்த்துகள். குறிப்பாக இந்தத் துறையைத் தேர்ந் தெடுத்தது எதனால் என்று கூற முடியுமா?

சுஜாதா: இசையிலும், நாட்டி யத்திலும் மிகவும் ஆர்வமுள்ள குடும்பத்தில் பிறந்தவள் நான் என் பெற்றோர் இசையில தேர்ச்சி பெற்றவர்கள். ஆகவே இயற்கையாகவே என்னு இந்தக் கலைகளில் மிக் ஆர்வம் இருந்தது. நான் ந னத்தைத் தேர்ந்தெடுத்தேன்.

முதன் முதலில் எந்த வ தில் நடனம் கற்க ஆரம்பி தீர்கள்?

சுஜாதா : நடனம் பயில ஆரம்பிக்கும்போது எனக் வயது ஆறு. முதலில் 'சரஸ்வ கான நிலையத்தில்' சேர்ந் பயின்றேன். அதன் பின் புக பெற்ற பரதநாட்டியக் கலைஞ திருமதி சித்ரா விஸ்வேஸ்வர அவர்களிடம் ஆறு வருடங்க பயின்றேன். 1977 ஆம் ஆண் என் அரங்கேற்றம் ந பெற்றது. அதன் பின் 'ஸ்கால ஷிப்' கிடைத்தது. தொடர்ந் கலைமாமணி ஸ்வாமிமலை திரு. எஸ். கே. ராஜரத்ன பிள்ளை அவர்களிடம் நடன கற்றேன். தற்போது உடுப் திரு லக்ஷ்மி நாராயணனிடமும் திருமதி கலாநிதி நாராயண அவர்களிடமும் பயிற்சியை தொடர்ந்து வருகிறேன்.

நீங்கள் முக்கியமாகப் ப கேற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி கூறமுடியுமா?

சுஜாதா : சென்னையில் மிக் கௌரவம் வாய்ந்ததாகக் குறி பிடப்படும் 'மியூஸிக் அகாடெமி யின் 61 ஆவது ஆண்டு இ விழா நிகழ்ச்சிகள், 'சங் நாடக அகாடெமி' டில் 'கஜுராஹோ நாட்டிய விழா 'மஹா கும்பமேளா' அல பாத், 'காளிதாஸா அகாடெ உஜ்ஜயினி, National centre for Performing Arts, பம்பாய் தச விழா மைசூர், பரதநாட்டி

மஹோத்ஸவம், (பம்பாய்) ஆகியவை மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகள்.

நீங்கள் எவ்வளவோ முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டிருக்கிறீர்கள். குறிப்பிடத்தக்க அனுபவமாக எதையாவது குறிப்பிட விரும்புகிறீர்களா?

சுஜாதா : கட்டாயம் சொல்கிறேன். 'மியூஸிக் அகாடெமி'யில் மறைந்த முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசாக அளிக்கப்பட்ட விருதினை முதன் முதலாக நான் பெற்றேன் என்பது குறித்து எனக்கு மட்டிலா மகிழ்ச்சி. அதுபோல் 'கஜுராஹோ நாட்டிய விழா'வில் பங்கெடுத்துக் கொண்ட நாட்டியக் கலைஞர்களில் அந்த ஆண்டு (1987) வயதிலேயே மிகவும் சிறியவள் நான்தான். என்னுடன் ஒரே ஹோட்டலில் தங்கியிருந்த புகழ்பெற்ற ஒடிஸி நடனக் கலைஞர் 'சம்ஜுக்தா பாணிக்ரஹி' அவர்களும், குரு 'காளிசரண் மஹாபாத்ரா' அவர்களும், என் நிகழ்ச்சி முடிந்ததும் என்னைப் பாராட்டிப் பேசியதை என்னால் மறக்கவே முடியாது. அதேபோன்றே இன்னொரு அனுபவம், நான் கிருஷ்ணகான சபாவில் நடன நிகழ்ச்சி நடத்தியபோது எனக்குக் கிட்டியது. என் நிகழ்ச்சிக்கு வந்திருந்த ஒப்பற்ற நடன அரசி திருமதி கமலா அவர்கள் என்னை மிகவும் பாராட்டியதோடு, தன்னுடன் வெளிநாட்டிற்கும் வந்து ஆடுமாறு அழைத்ததை நினைத்து இன்றும் பரவசமடைகிறேன்.

மறைந்த இசைமேதை பாபநாசம் சிவன் அவர்கள் கிருதிகளைத் தொகுத்து 'கார்த்திக் பைன் ஆர்ட்ஸ்'க்காக நான் ஆடியபோது, நிகழ்ச்சிக்கு திருமதி எம்.எஸ்.எஸ். அவர்களும், மறைந்த சங்கீத வித்வான் அமரர் டி.கே.ஜெயராமன் அவர்களும் வந்திருந்து நிகழ்ச்சி முடிவடையும் வரையில் இருந்து என்னைப் பாராட்டி, ஆசீர்வதித்தனர். 'பாபநாசம் சிவன் கிருதிகள் மிகவும் பக்திரஸம் நிரம்பியவை. காதால் கேட்டு இது வரை அனுபவித்த அந்த இசையை, அப்படியே 'பாவ பூர்வமாக' நீ ஆடியதை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்று டி.கே.ஜெயராமன் அன்று கூறியதை என்னால் எப்படி மறக்க முடியும்?

அதேபோல் 'காஞ்சி காமகோடி சங்கீத சேவா ட்ரஸ்ட்' மற்றும் திருவாரூர் 'சரஸ்வதி வாக்கேயக்காரர் ட்ரஸ்ட்' அழைப்பின் பேரில் 'முத்துஸ்வாமி தீக்ஷிதர்' விழா நிகழ்ச்சிகள் திருவாரூரில் நடைபெற்றபோது, என் நடனத்தைக் காண அந்த ஊரே திரண்டு வந்து என் நடனம் முடிந்தவுடன் திருவாரூர் பல ஆண்டுகளுக்குப் பின் இன்றுதான் உண்மையில் 'திருவாரூராக'க் காட்சி அளிக்கிறது. எவ்வளவு ஆண்டுகளுக்குப் பின் பரத நாட்டியத்தைப் பார்க்கிறோம்' என்று ஜனங்கள் என் நாட்டியத்திற்கு கோலாகலமான வரவேற்பும், பாராட்டும் அளித்தது மனதை நெகிழ வைத்தது. எட்டயபுரம் தீக்ஷிதர் சமாதிக்கு முன் ஆடியபோது அங்கு இருந்த எல்லா ரசிகர்களும் திரளாக வந்திருந்து மகிழ்ச்சி வெள்ளத்தில் என்னை மூழ்க வைத்தனர். அங்குதான் 'பரத நாட்டியத் திலகம்' என்ற பட்டம் எனக்குக் கிடைத்தது. இந்த அனுபவங்களை என்னால் மறக்கவே முடியாது.

நடனத்தைத் தவிர வேறு ஏதாவது கற்றுக் கொள்கிறீர்களா?

சுஜாதா : மிருதங்கம் வாசிக்கக் கற்று வருகிறேன். சிறுவயதில் இருந்தே யாராவது மிருதங்கம் வாசிக்கும்போது அவர்கள் கையையே பார்த்துக் கொண்டிருப்பேன். அவ்வளவு ஈடுபாடு எனக்கு. பெண்கள் வாசிக்க முடியாது என்று பொதுவாக ஓர் அபிப்ராயம் இருந்து வருவதால் தயங்கினேன். பிறகு கும்பகோணம் திரு நாராயண ஸ்வாமி அவர்கள் மிருதங்கப் பள்ளியில் சேர உத்தேசித்து அவரைச் சந்தித்தபோது எனக்கு மிகவும் ஊக்கம் அளித்தார். முதலில் தயங்கிய அவரே இப்போது என் ஆர்வத்தைப் பார்த்து என் பாடங்களுடன் கடினமான தாள நுணுக்கங்களையும் எனக்குக் கற்றுத் தருகிறார்.

குறிப்பிடும்படி வேறு ஏதாவது நிகழ்ச்சியில் ஆடியிருக்கிறீர்களா?

சுஜாதா : இத்தாலிய பிலிம் ஸ்டேட்கார்ப்பரேஷன் ஆதரவில் ஒரு குழு இந்தியாவிற்கு வந்து 'டான்ஸ் ஆப் சிவா' என்று ஒரு டாக்குமெண்டரி தயாரிக்கிறார்கள். அந்தக் குழு தமிழ் நாட்டின் புகழ்பெற்ற கோயில்களில் உள்ள சிற்பங்களைப் படம் பிடித்து அதனுடன் நாட்டியத்தை இணைத்து தயாரிக்கிறார்கள். தஞ்சை 'ப்ரஹதீஸ்வரர் கோயில்' சிற்பங்களுடன், நான் அதில் சிவனை உருவகப்படுத்தி ஆடியிருக்கிறேன். இதை ஒரு பெரும் பேறாகக் கருதுகிறேன்.

இந்த இளம் வயதில் பெரும் முக்கிய நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டதோடு பல விருதுகளைப் பெற்றிருக்கும் நீங்கள் மென்மேலும் இந்தத் துறையில் 'ஆல்' போல் தழைத்துப் பல்கிப் பெருகி பல விருதுகளைப் பெற வாழ்த்துகிறேன். வணக்கம்.

சுஜாதா : வணக்கம்.

— கே. இந்திரா

25 ஆண்டுகளுக்குமுன் 'அமுதசுரபி' (ஜனவரி '67)

1967 ஆம் ஆண்டின் ஜனவரி (பராபவ - தை) மாத 'அமுதசுரபி' அன்றைய புத்தாண்டின் புதுப்பொலிவுடன் இன்றளவும் புன்னகைக்கிறது என்றால் அதற்குக் காரணம், 88 பக்கங்களில் 20 பக்கங்கள் விளம்பரங்களுடன் ஒன்பது சிறுகதைகள், ஏழு கட்டுரைகள், மூன்று சிறப்புப் பகுதிகளுடன் ஒரு தொடர்கதை வேறு! எப்படி சார் முடிந்தது?)

ஒன்பது கதைகளும், ஏழு கட்டுரைகளும், மூன்று சிறப்புப் பகுதிகளும் - நவரசங்களாக, வானவில்லின் வர்ண ஜாலங்களாக, முக்கனிகளின் சுவையாகத் திகழ்கின்றன.

தொடர்கதையும் தொய்வில்லாத அருவி!

ஆரம்ப, உயர்நிலை, கல்லூரி ஆசிரியர்களுக்கான சிறுகதைப் போட்டியினை அறிவித்து அவர்கள் எழுதத் தூண்டுவதற்கான ஒரு வாய்ப்பினைத் தந்து - அதில் ஒன்பது கதைகளைத் தேர்வு செய்து முடிவுகள் அறிவிக்கப்பட்டிருப்பது இதழின் வளர்ச்சிக்கு ஒரு மறுமலர்ச்சி. (இதன் வாயிலாகத்தான் 'அய்க்கண்' (மு. அய்யாக்கண்ணு, காரைக்குடி) எழுத்துலகிற்குப் பிரவேசித்தாரோ?)

வெளி நாட்டின் பக்கமும் 'அமுதசுரபி'யின் பார்வை திரும்பி - டிஸ்னிலாண்டு என்ற விந்தை உலகைப்படைத்து இன்றளவும் உலகப் புகழ் பெற்றுத் திகழும் வால்ட் டிஸ்னியின் வரலாறும், சாதனைகளும் பற்றிய கட்டுரை மிகச் சிறப்பான படைப்பு!

மார்கழித் திங்களில் எங்கு நோக்கினும் பாவைப் பாடல்களின் மங்கல முழக்கம் கேட்டு மகிழ்ந்த நமக்கு ஆண்டாள் பற்றிய தெய்வத் தம்பதிகள் கட்டுரை பல இனிய செய்திகளை எடுத்துக் கூறி நம்மை ஆன்மிகத்தில் ஆழ்த்தி முத்தெடுத்து மகிழ்விக்கிறது.

மிளகு பற்றிய ஒரு பக்கக் கட்டுரை மிளகைப்போல சிறிதானாலும் மிளகைவிடக் காரத்தில் கரம் நிறைந்தது. நிவேதனத்தின் மகிமையை குமாரி டி.என். சி. விஜயலட்சுமி சிறப்பாக ஓரங்க நாடக வடிவில் விளக்கியிருக்கிறார்.

அடுத்த இதழில் சாண்டில்யன் அவர்களின் 'பல்லவ திலகம்' சரித்திரத் தொடர் அறிவிப்பு நம்மை எதிர்பார்க்க வைப்பது ஆனந்தம்.

அறுபதே காசுகளுக்கு அட்டைப் படத்தின் நுனியில் இருந்து, கடைசிப் பக்க (ஹெர்குலிஸ் சைக்கிள் விளம்பர) முடிவு வரை விரவியுள்ள அத்தனை அம்சங்களும் பேரானந்தம்! ●

—என். ஆர். கே.

இளம் இசைக் கலைஞர்களுக்குப் பொன்னான வாய்ப்பு!

நல்ல குரல் வளம்,
இசை ஆர்வம் -
இன்று நமது நாட்டில் வளரும் இளம் பயிர்களான ஆயிரக்கணக்கான இளம் இசைக் கலைஞர்களுக்கு உண்டு.

அதே சமயம் இசை உலகில் அறிமுகம் கிடைத்து முன்னுக்கு வரவேண்டும் என்ற தணியாத தாகமும் இளம் கலைஞர்களுக்கு உள்ளது.

அவர்களுக்கெல்லாம் ஓர் அறிமுகத்தை (Exposure) ஏற்படுத்தித் தரும் வாய்ப்பை சென்னை ஆடியோ ஃபைன் கேசட் உற்பத்தியாளர்கள் ஏற்படுத்தித் தருகிறார்கள்.

உங்கள் திறமைக்கு வடிகாலாகவும், அத்திறமையைப் பரந்த இசை உலகுக்கு அறிமுகப்படுத்தி உங்கள் எதிர்கால இசை வாழ்க்கைக்குச் சிறப்பான அஸ்திவாரம் அமைத்து நீங்கள் மேன்மேலும் சிறப்படையவும் ஆடியோ ஃபைன் நிறுவனத்தார் காத்திருக்கிறார்கள்.

வளரும் இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கும் முறையில், இதுவரை யாருமே செய்ய முன்வராத புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்திச் செயல்படுத்த இருக்கிறார்கள்.

அவர்களுடைய பிளாங்க் கேசட்களை வாங்கி, இசைக் கலைஞர்களின் இசையைப் பதிவு செய்து, கேசட் வாங்கிய பில்லுடன் ஆடியோ ஃபைன் நிறுவனத்தாருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

தேர்ந்த இசை நிபுணர்கள் மூலம் தகுதியான திறமையைத் தேர்வு செய்து, பரந்த இசை உலகுக்குக்கலைஞர்களை அறிமுகப்படுத்தும் வாய்ப்பை ஆடியோ ஃபைன் நிறுவன நிர்வாக இயக்குநர் திரு.வி. டி.வி. சர்மா அவர்கள் உதவி செய்யக் காத்திருக்கிறார்.

இளம் இசைக் கலைஞர்களே, பொன்னான வாய்ப்பு நாடி வந்துள்ளது; பயன் படுத்திக் கொள்ளுங்கள்! ⁂

எனது மரணவீடு

தீர்ப்புச் சொன்னது யாரடி தேவி?
திரும்பத் திரும்பத் தோற்றுப் போனது காதலின் நீதி!
வாழ்க்கை என்றொரு யாத்திரை - அங்கு
யாரும் இல்லை வழித்துணை!
கற்றை இருட்டில் கனத்த தலைச்சுமை - இந்த
ஒற்றையடிப் பாதை முடிந்தால்
சாவின் அரண்மனை!
நேற்றும், இன்றும் கரைந்தது கனவில்!
'நாளை' வருமடி கண்ணீர் மழையில்
சிறகை அசைத்துப் பறந்த பறவை,
'சிலுவை' சுமந்து விழுந்தது மண்ணில்...
திராட்சைத் தோட்டம் போட்டது பருவம்...
"ரத்ததானம்" கொடுத்தது இதயம்!
ஜீவநதியின் அலையைத் தொட்டேன்;
பாலவனத்தின் மணலாய்ச் சுட்டது!
தேக்குமரத்தின் நிழலில் நடந்தேன்;
தூக்குக்கயிற்றின் "முடிச்சில்" விழுந்தேன்!
மனதில் உன்னைச் சுமந்து வந்து - இந்த
மரணவீட்டில் தூங்குகின்றேன்!
கல்யாண மாலை கட்டத்துடித்தாய் - என்
"கல்லறை" மேலே மலர்கள் வைத்தாய்!
தீர்ப்புச் சொன்னது யாரடி தேவி?
திரும்பத் திரும்பத் தோற்றுப் போனது காதலின் நீதி.

கவியரசு நா காமராசன்






ஜெயா வெங்கட்ராமன்


வேம்பத்தூர் லலிதா


வித்யா சுப்பிரமணியன்

மயிலையில் இலக்கியப் பரிசு மழை

ஆண்டுதோறும் டிசம்பர் ாதம் சென்னையில் இசை ழை பொழியும். இந்த ஆண்டும் வழக்கம்போல் இசை மழையுடன் இலக்கியப் பரிசு மழையும் பொழிந்தது. இந்த டிசம்பர் மாதக் கூடுதல் பெருமைக்கு அமுதசுரபி தனது இலக்கிய அன்பர்களைச் சென்னையிலுள்ள மயிலாப்பூருக்கு அன்புடன் வந்து சிறப் பிக்குமாறு அழைப்பு விடுத் திருந்தது.

22.12.91 அன்று 'அமுதசுரபி' இலக்கிய மாத இதழ், இரு பத்திரண்டு எழுத்தாளர்களுக்கு மொத்தம் முப்பத்து ஏழாயிரம் ரூபாய் பரிசளித்துக் கௌர விக்க ஒரு விழாவை பாரதிய வித்யா பவன் அரங்கில் நடத்தியது.

பம்பாய் வெங்கட் தன் இனிய குரலில் இறைவணக்கம் பாட, விழா இனிது தொடங் கியது. அமுதசுரபி ஆசிரியர் டாக்டர் விக்கிரமன் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றுப் பேசும்பொழுது, அமுதசுரபி இலக்கிய விழா எடுத்த அன்றைய தினத்தின் சிறப்புகளை எடுத்துரைத்தார். "திருவாதிரைத் திருநாள் இது. சிதம்பரத்தில் நடராஜப் பெரு மானின் ஆருத்திரா தரிசனம் இன்று. சோழ மன்னன் ராஜேந் திரன் பிறந்த நாள். இத்தனை சிறப்புகளுடன் மறுமலர்ச்சித் தமிழிலக்கியப் படைப்பாளி களுக்குப் பரிசளித்துக் கௌர விக்கும் பொன்னாளாகவும் இந்த நாள் அமைந்தது மிகவும் பொருத்தமானது" என்று கூறி னார். அருட்செல்வர் நா. மகா லிங்கம் அவர்களைத் தலைமை யேற்று விழாவைச் சிறப்புற நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

அருட்செல்வர் நா. மகா லிங்கம் அவர்கள் தமது தலைமையுரையில் தமிழ் எழுத் தாளர்கள் உலக இலக்கியத் தரத்திற்கு ஏற்ப அற்புதமாக தமது படைப்புகளைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நன்கு ஆராய்ந்து எழுதப்பட வேண்டிய பல விஷ யங்கள் தமிழகத்தில் இருப்ப தாகவும், அதனைச் செய்ய முன் வருவோருக்குத் தாம் எல்லா வகையிலும் ஒத் துழைத்து ஆதரவு தரத் தயா ராக இருப்பதாகவும் அறிவித்த போது, அரங்கம் மகிழ்ச்சியில் ஒலி எழுப்பிற்று.

தலைவரின் உரைக்குப் பின் எழுத்தாளர்களுக்குப் பரிசளிப்பு நடைபெற்றது.

சுஜாதா பிலிம்ஸ் லிட்., அமுதசுரபி இணைந்து அளிக்கும் பாரதி இலக்கியப்பரிசு, ரூபாய் ஐயாயிரத்தை டாக்டர் திமுத்துக் கண்ணப்பர் எழுதிய "பாரதியும் சமயமும்" என்ற புத்தகத்திற்கும், போட்டிக்கு கையெழுத்துப் பிரதியாக வந்திருந்த பாரதி ஆராய்ச்சிக் கட்டுரைகளான டாக்டர் இரா. இரகுபதி எழுதிய "உரைநடை வளர்ச்சியில் பாரதியின் பங்கு" மற்றும் திருவனந்தபுரம் கமலா பத்மகிரீசுவரன் எழுதிய ஒப்பாய்வுக் கட்டுரையான "பாரதியும் புஷ்கினும்" என்ற கட்டுரை ஆகிய ஒவ்வொன்றுக்கும் ரூபாய்இரண்டாயிரத்து ஐந்நூறு வீதம் பாரதி இலக்கியப் பரிசான ரூ. 10,000 பகிர்ந்து அளிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு படைக்கப்பட்ட சிறந்த தமிழ் நாவல்கள் – மூன்று புத்தக வடிவில், ஒன்று கையெழுத்துப் பிரதி – ஆக நான்கு நூல்களுக்கு தலா ரூ. 5,000 /– வீதம் இருபதாயிரம் பரிசளிக்கப்பட்டது.பாவண்ணன் எழுதிய "சிதறல்கள்", வையவன் எழுதிய "மணல் வெளி மான்கள்" பாலகுமாரன் எழுதிய "சுக ஜீவனம்" ஆகிய மூன்று நூல் வடிவில் வெளி வந்த புதினங்களும், "பாப்ரியா" எழுதிய "நூல் மனிதர்கள்" என்ற கையெழுத்து நாவல் பிரதியும் பரிசினைப் பெற்றன.

இந்தப் பரிசுகள் அனைத்தையும் ஜி.வி. பிலிம்ஸ் அதிபர் திரு. ஜி. வெங்கடேஸ்வரன் அவர்கள் திருக்கரத்தால் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

அமுதசுரபியும் ஃபார்மாகேர் பி.லிட்., ஸ்தாபனமும் இணைந்து நடத்திய சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற எழுத்தாளர்களுக்கு ஃபார்மாகேர் – வெல்வெட் ஷாம்பு' நிறுவனத்தின் நிறுவனர் ஸி.ஏ. ராஜ்குமார் அவர்களின் அன்னை திருமதி ஹேமா சின்னிகிருஷ்ணன் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

திருமதி ஜெயா டி.எஸ். வெங்கட்ராமன் எழுதிய "விலை" என்ற சிறுகதை முதல் பரிசான ரூபாய் மூவாயிரம் பெற்றது. இரண்டாம் பரிசுத் தொகையான ரூ. 2000 /– இருவருக்குச் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. வேம்பத்தூர் லலிதா எழுதிய "ஜாதிகள் இல்லையாடி பாப்பா"வும், திருமதி வித்யா சுப்ரமணியம் எழுதிய "அகல்யா"வும் இரண்டாவது பரிசுகளைப் பகிர்ந்து கொண்டன.

இதேபோல மூன்றாம் பரி– தொகையான ரூபாய் ஆயிர தங்க சிவராசன் எழுதிய "மூ– விடும் வேர்கள்" என– கதைக்கும், ஃபிர்தௌஸ் ர– குமாரன் எழுதிய "உழை– பவனும் பண்டிகையும்" என– கதைக்கும் ரூபாய்ஐந்நூறு வீத சமமாகப் பகிர்ந்தளிக்க– பட்டது.

மூன்றாவது பரிசு பெற்– பத்து சிறுகதைகள் பற்– விவரம் தனியாக 'அமு– சுரபி'யில் வெளியிடப்படும்.

பரிசு பெற்றவர்களை பாராட்டி சென்னை எண்ணெ– சுத்திகரிப்பு நிறுவனத்தி–





முதசுரபி' இலக்கிய விழா
ந்த தமிழ் நாவல்கள், பாரதி இலக்கிய நூல், கதைகளுக்குப் பரிசளிப்பு

னா .·.பிலிம்ஸ் லிட் – 'அமுதசுரபி' இணைந்து அளிக்கும் "பாரதி இலக்கியப் பரிசு" பெற்றவர்கள்

டாக்டர் தி. முத்துக்கண்ணப்பர் – "பாரதியும் சமயமும்"	பரிசு	ரூ.5,000
டாக்டர் இரா. இரகுபதி – "உரைநடை வளர்ச்சியில் பாரதியின் பங்கு" (கையெழுத்துப் பிரதி)	பரிசு	ரூ. 2,500
திருவனந்தபுரம் கமலா பத்மகிரீசுவரன் – "பாரதியும் புஷ்கினும்" (கையெழுத்து ஒப்பாய்வு நூல்)	பரிசு	ரூ. 2,500
) இல் படைக்கப்பெற்ற சிறந்த தமிழ் நாவல்கள் நான்கிற்குப் பரிசு		
ரதா பிலிம்ஸ் லிட். – 'அமுதசுரபி' இணைந்து அளிக்கும் நாவல் பரிசு)		
பாவண்ணன்' எழுதிய நாவல் – "சிதறல்கள்"	பரிசு	ரூ.5,000
வையவன்' எழுதிய நாவல் – "மணல்வெளி மான்கள்"	பரிசு	ரூ.5,000
பாலகுமாரன் எழுதிய நாவல் – "சுக ஜீவனம்"	பரிசு	ரூ.5,000
'பாப்ரியா' எழுதிய நாவல் (கையெழுத்துப் பிரதி) – "நூல் மனிதர்கள்"	பரிசு	ரூ.5,000
	ஆக மொத்தப் பரிசு	ரூ.30,000

ர்மா கேர் பி லிட்., – அமுதசுரபி இணைந்து சிறந்த சிறுகதைகளுக்கு அளிக்கும் பரிசு

ஜெயா டி.எஸ். வெங்கட்ராமன் –	"விலை"	முதல் பரிசு	ரூ. 3,000
வேம்பத்தூர் லலிதா –	"ஜாதிகள் இல்லையாடி பாப்பா"	இரண்டாம் பரிசு	ரூ. 1,000
வித்யா சுப்ரமணியம் –	"அகல்யா"	இரண்டாம் பரிசு	ரூ. 1,000
தங்க சிவராசன் –	"மூச்சுவிடும் வேர்கள்"	மூன்றாம் பரிசு	ரூ. 500
கபிர்தௌஸ் ராஜகுமாரன் –	"உழைப்பவனும் பண்டிகையும்"	மூன்றாம் பரிசு	ரூ. 500
மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறுகதைகள் ரூ. 100 வீதம்		பரிசு	ரூ. 1,000
		ஆக மொத்தப்பரிசு	ரூ. 7,000

மன் திரு. ஹெச். கிருஷ்ண
த்தி அவர்கள் ஓர் அருமை
ா இலக்கியச் சொற்பொழி
ற்றினார். ஆங்கிலம், சம்ஸ்
தம் ஆகிய மொழிகளி
ந்து இலக்கிய மேற்கோள்
டன் அவர் பேசியது அனை
ரயும் கவர்ந்தது என்பது
ப்பிடத்தக்க ஒன்றாகும்.
பேச்சினிடையே, எம்.
.எல். நிறுவனம், 'அமுத
ரியுடன் இணைந்து சிறந்த
வியல் நூலுக்கு முதல்
சாக ரூபாய் ஐயாயிரமும்,
ண்டாம் பரிசாக ரூபாய்
ாயிரமும் வழங்கி இலக்
த் தொண்டு புரியும் என அறிவித்தார். 'அமுதசுரபி' மீது இலக்கிய அன்பர்கள் காட்டிய ஆர்வத்திற்கு மேலும் உற்சாகம் ஊட்டும் வகையில் இந்த அறிவிப்பு அமைந்திருந்தது என்று சொல்லலாம்.


சென்னை அக்கௌண்டன்ட் ஜெனரலும் சிறந்த இலக்கிய எழுத்தாளருமான திரு. எஸ். சத்யமூர்த்தி பேசும்பொழுது இத்தகைய இலக்கிய விழாக்கள், இலக்கிய ஆர்வம் உள்ளவர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்று கூறி, விழா எடுத்த அமுதசுரபி, ஸ்ரீராம் டிரஸ்ட் ஆகிய நிறுவனங்களைப் பாராட்டினார். மேலும், தமிழ் எழுத்தாளர் நலநிதிக்கு ஐந்து லட்சம் ரூபாய் திரட்டித் தர இருப்பதாகவும் அறிவித்தார்.

விழா மேடையில் அமர்ந்திருந்த அனைவருக்கும் அமுதசுரபி பதிப்பாளரும், ஸ்ரீராம் குரூப் நிறுவனங்களின் துணைத் தலைவருமான திரு.ஏ.வி.எஸ். ராஜா அவர்கள் சால்வை போர்த்தி, சந்தன மாலை அணிவித்துக் கௌரவித்தார்.

— ஜனகன்

போட்டோ : யோகா

குடும்பத்தலைவி திருமதி. தேரசம்மா இன்று ஒரு சிறுதொழில் அதிபர்



இந்தியன் வங்கியின் புதிய தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின் உதவியால் அவர் கனவு நனவாகியது.

ஆர்வத்துடிப்புடன் கல்லூரிக்குச் சென்று, அதே வேகத்துடன் கல்வியை முடித்துப் பட்டங்கள் பெறுவதுடன் பல பெண்களுக்கு வாழ்க்கை லட்சியம் முடிவு பெற்று விடுகிறது. பிறகு, திருமணம், குடும்பம், குழந்தைகள் என்ற ஒரு வட்டத்துக்குள்ளேயே சுற்றிவரத் தொடங்கி விடுகிறார்கள்.

ஆனால் தெரசம்மாவைப் பொறுத்தமட்டில் அப்படியில்லை. இந்தியன் வங்கியின் ''புதிய தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்'' தன் கனவுகள் நனவாக உதவும் ஒரு துணையாக இருப்பதைக் கண்டார். அது அவருடைய லட்சியக் கனவை ஊக்குவித்தது. தொழில் வாழ்க்கையில் வெற்றி பெற உதவியது.

மோட்டார் வாகனங்களுக்கான ஃபில்டர்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி அனுபவம் பெற்றிருந்தவர் தெரசம்மா. சொந்தமாக ஃபில்டர்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட விரும்பினார். புதிய தொழில் முனைவர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்தியன் வங்கி அவருடைய கனவுகள் நனவாகும் வகையில் 45 நாள் பயிற்சி பெற உதவியது. சிறந்த முறையில் வழிகாட்டியது. ஆலோசனைகள் அளித்தது. நிதியுதவி பெறவும் வகை செய்தது. இன்று ஒரு வெற்றிகரமான தொழிலுக்கு அவர் உரிமையாளராக இருக்கிறார். ஓராண்டுக்குள்ளாகவே அவருடைய நிறுவனம் பல முன்னணி மோட்டார் வாகனத் தயாரிப்பாளர்களுக்கு ஃபில்டர்களை வினியோகிக்கிறது.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயான அந்தக் குடும்பத் தலைவி இந்தியன் வங்கியுடன் தொடர்பு பெற்றுள்ளதில் பெருமிதம் அடைகிறார்.

இந்தியன் வங்கியுடன் நீங்களும் உங்கள் கனவுகளை பகிர்ந்து கொள்ளுங்கள் — அவை நனவாவதைக் கண்டு மகிழுங்கள்.

இந்தியன் வங்கி

உங்கள் செல்வச் செழுமைக்கு உதவும் வங்கி

31, ராஜாஜி சாலை, சென்னை 600 001.

ADWAVE/IB/4069 TAM

மலர் பிரசாதம்

பரீட்சைக்குப் போகப் பயம் : பரீட்சை என்றால் அனைவருக்கும் பயம் ஏற்படுவதுண்டு. இலண் டனில் ஓர் உயர் பதவியிலுள்ள டாக்டர் தன் 50ஆம் வயதில் ஒரு பரீட்சை எழுதினார். அந் நாட்டு முறைப்படி ஒவ்வொரு கட்டத்தைத் தாண்டவும் ஒரு பரீட்சை எழுதவேண்டும். வாழ்க்கையில் பல உயர்ந்த பரீட்சைகளைத் தலைமை வகித்து நடத்திய இவருக்கு (Examination fever) பரீட்சைக்குரிய பயம் வந்து விட்டது. அதனால் மாணவர்களுக்குப்பயம் ஏற்படுவது சகஜம்.

இந்தப் பயத்திலிருந்து விடுதலை பெற தைரியம், நம்பிக்கை, சாந்தி ஆகியவை முதன்மையான மலர்கள். ஒளி, செயலில் பயமின்மை, வெற்றி, செயல்திறன், நிஷ்டை ஆகிய மலர்களும் பெரிதும் பயன்படும்.

பரீட்சை என்றால் உடலே நடுங்கும் கெட்டிக் கார மாணவர்களும் உண்டு. குறிப்பாக அவர் களுக்கும், பொதுவாக மற்ற மாணவர்களுக்கும் பயன்படும் முறை ஒன்றுண்டு. வகுப்பில் பாடம் நடந்தால் ஒழுங்கான மாணவர்கள் தினமும் வீட்டில் வந்து அதைப் படிப்பது வழக்கம். படிப்பது புரிந்துவிட்டால்மனம் திருப்திப் படும். அத்துடனில்லாமல் படித்த பாடத்தை மனப் பாடம் செய்யாமல் அப் பாடத்தில் வரக்கூடிய கேள்விக்குப்பதிலை ஒருமுறை எழுத முயற்சி செய்தால், புரிந்தால் மட்டும் எழுதமுடியாது என்பது விளங்கும். எனவே பரீட்சை சமயத்தில் மாணவர்கள் பதிலை மனப்பாடம் செய்வார்கள். பயத்தை அழிக்க, படித்த பாடத்தை மீண்டும் எழுதினால், தெளிவாக எழுதும் வகையில் புரிந்துகொண்டால், பாடம் மனதில் பதியும். தினமும் அன்றாடப் பாடங்களை அதுபோல் எழுதிப் பழக்கம் செய்து கொண்டால், பரீட் சைக்குப் போகுமுன் பயம் மறைந்துவிட்டதைக் காணலாம். மனப்பாடம் செய்தாலோ, அல்லது படித்துவிட்டுப் போனாலோ, பதில் நினைவு வருமா என்ற சந்தேகம் உள்ளூர இருப்பதால் பயம் ஏற்படுகிறது. எழுதிப் பார்த்தவுடன், பாடம் மனத்தில் பதிவதுடன் எழுதிய கை உடலின் பகுதியான கை - பாடத்தை நினைவு வைத்திருப்பதால், உடலிலிருந்து பயம் விலகி விடுகிறது. இனி பரீட்சைக்கு என்றால் பய மில்லை என்ற நிலை ஏற்படும். அத்துடன் உடலில் உள்ள மனம் (Subconcious) விழிப்படைய உதவும் மலர் ஒன்றுண்டு. அம் மலரை அன்னைக்குச் சமர்ப்பித்து அதில் ஒன்றைத் தன்னுடன் பரீட்சைக்கு எடுத்துச் சென்றால் பயம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

பயம் மாறி தைரியம் வரவேண்டும் என்று பிரார்த்தனை செய்தால் தைரியத்தைக் கொடுக்க எருக்கம் பூவும், மாற்றத்தை ஏற் படுத்த மரமல்லிகையும் பயன்படும். அருளில் நம்பிக்கை உள்ளவர்க்கு அருள் எனும் பருத்தி ரோஜா அருளால் பயத்தை அழித்துவிடும்.


கணவன் - மனைவி பூசல் : நல்நோக்கம், சுமுகம், சண்டையின்மை, பூசலை அழிக்கும், மேலும் கட்டுப்பாடு, அற்புதம், விட்டுக் கொடுக்கும் குணம் ஆகிய மலர்கள் பூசலை அறவே அழிக்க உதவும்.

ஒருவர் மற்றவரைத் தன் ஆதிக்கத்திற்குள் வைத்துக்கொள்ள வேண்டும் என்று முயலும் பொழுது எழும் பூசல்களே நிரந்தரமாக நிற்பவை. கணவனுக்கு இக் குணம் இருப்ப தாகத் தெரிந்து அதை மாற்ற அவன் மனம் இடம் கொடுத்தால், மலர்களின் உதவி தேவைப்படாமல், பிரார்த்தனையும் இல்லாமல் அன்னை அந்த வீட்டில் சுமுகத்தை ஏற்படுத்தி விடுவார். மாறிய மனம் மணம் வீசும் மலர். மனைவிக்கு இதுபோன்ற நோக்கம் இருப்பது தனக்கே 'தெரியவந்து, மனத்தளவில் வெட்கம் ஏற்பட்டுத்திருந்த விரும்பினால் வீட்டில் சுமுகம் ஏற்படுவதோடல்லாமல், சந்தோஷம் நிறையும். அடக்கம் என்ற மலர் இந்த சந்தோஷத்தை அபரிமிதமாக்கிக் கொடுக்கும்.

இது தவிர, தன் அபிப்பிராயத்தை வலி யுறுத்திப் பேசும் பழக்கம் இருந்தால் அது பூசலை விளைவிக்கும். அது சந்தோஷத்தைக் கலைக்குமே தவிர பூகம்பத்தைக் கிளப்பாது. பழக்கத்தை விட்டுவிட முன்வந்தால் நிலைமை மாறும். பகுத்தறிவு என்ற மலர் இங்கு பயன் படும்.

கணவனுக்கும் மனைவிக்கும் பூசல் ஏற்படும் முக்கியமான இடங்களில் ஒன்று , ஒருவருடைய குடும்பத்தைப் பற்றி மற்றவர் தெரிவிக்கும் அபிப்பிராயம். இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியது. இதற்காக இம் முயற்சியை எடுப்பவர்களுக்கு மென்மை என்ற மலர் பயன் படும். இதைத் தவிர்க்க முயலும்பொழுது பேச்சின் தரம் உயர்வாக இல்லாவிட்டால், தவிர்க்க முயல்வதை மீண்டும் உயிர்ப்பிக்க நேரும். இதற்கு ஒரு சிறப்பான வழியுண்டு. எதிர்மறையான கருத்தை உடன்பாடாகப் பேசும்

கர்மயோகி



பழக்கம் ஆங்கிலத்தில் உண்டு. பிறர் மனம் புண்படவே கூடாது என்ற பண்பில் வளர்ந்த மொழி ஆங்கிலம். இடித்துரைக்கும் பழக்கம் நிறைந்த இடத்தில் நம் அன்றாடப் பேச்சு உருவாகியிருப்பதால் ஒருவர் பேசுவது மற்ற வரின் தலையில் அடிப்பதுபோல் இருப்பது நம் நாட்டுப் பழக்கம். உதாரணமாக நீ சொல்வது முட்டாள்தனம் என்று நாம் பேசுமிடத்தில், ஆங்கிலேயர்கள் பல அபிப்பிராயங்களில் இது ஒன்று என்பார்கள். அப்படிச் சொல்லும் பொழுது வேகம் குறைந்துவிடும். மனம் புண்பட வழியிருக்காது. அதைவிடச் சிறந்த முறை அவர்கள் சொல்வதில் நாம் ஏற்றுக்கொள்ள ஏதும் கருத்திருந்தால் அதை மட்டும் பாராட்டிப் பேசுவது நல்ல பண்பாகும். கணவனும் மனைவியும் மற்றவர் இனிக்கப்பேச வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டால் பூசல்கள் மறைந்து போகும். No Quarrels சண்டையின்மை என்ற மலர் நாம் செய்யத் தவறுவதைச் சரிசெய்து நேராக்கித் தந்துவிடும்.

வக்கிரமான புத்தியுள்ளவர் : இவர்களால் ஏற்படும் தொந்தரவு அழிய முக்கியமான மலர்கள் உண்மை (Sincerity) நல்நோக்கம், அன்பு மேலும் ஒளி, இனிமை, திருவுருமாற்றம் ஆகியவை பயன்படும்.

ஒரு நேரம் வக்கிரபுத்தியிருந்தாலும் மற்ற நேரங்களில் அவர்கள் தன் குணத்தை விட்டுவிட முயலுவதுண்டு. அவர்களே இம் மலர்களை அர்ப்பணித்து தன் வக்கிரமான குணம் அழிய வேண்டும். நல்ல குணங்கள் உற்பத்தியாக வேண்டும் என்று செய்யும் பிரார்த்தனை மனத்தின் உண்மையை வெளிப்படுத்துவதால் அன்னை விரைந்து செயல்படுவார்கள்.

கோபத்தில் குழந்தையை அடித்துவிட்டு பிறகு வருத்தப்படுவதுண்டு. அவசரத்தில் பிறர் மனம் புண்படும்படி பேசிவிட்டு பின்னர் என்ன செய்வது என்று தவிப்பவருண்டு. ஒருவகையில் மனிதன் கெட்டவனாக இருந்தாலும், மற்றொரு வகையில் நல்ல குணம் இருப்பதால், அந்த நல்ல குணத்தின் மூலம் தான் திருந்த முயற்சி செய்வது தெய்விகம் பொருந்தியது.

மற்றவரை மட்டமாக நினைப்பது, சந்தேகப் படுவது, பிறர் சொல்வதை ஏற்றுக்கொள்ள மறுப்பது, எவரும் தன் ஆதாயத்திற்காக மட்டுமே பிரியப்படுவார்கள் என நினைப்பது, மற்றவர் கோபத்தைக் குத்திக் கிளறுவது, அவர்களுடைய குறையைச் சுட்டிக்காட்டுவது, அவர் பின்னால் கேலியாகப் பேசுவது, மற்றவ ரெல்லாரும் அறிவில்லாதவரென நினைப்பது, முக்கியமானவரிடம் விஷயத்தை மறைப்பது, பிறர் செய்வதற்கெல்லாம் பின்னணியாக ஒரு மறை பொருள் இருப்பதாக நினைப்பது, பேசுவது, அவர்களையே கேட்பது, அவர் என்று பேசவேண்டிய இடத்தில் அவன் என்று பேசுவது, உலகமே தன்னை ஏமாற்ற முனை கிறது என்று கற்பனை செய்வது, எதையும் பணத்தால் நிர்ணயிப்பது, மரியாதைக் குறைவாகப் பேச மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுப்பது போன்ற பழக்கங்கள் உள்ளவர்கள் குடும்பத்தில் இருந்துவிட்டால், ஆபீசில் உடன் வேலை செய்பவராகவோ, மேலதிகாரி யாகவோ அமைந்துவிட்டால் நம் வாழ்வு இரு ளடைந்து விடும். மனம் தொடர்ந்து புண்படும்.

அவர்களுக்குரிய குணத்திற்கு எதிரான தன்மையுடைய மலர்கள் அவர்கள் போக்கை மாற்றிக் கொடுக்க உதவும். நம்மிடம் உள்ள எந்த குணம் நம்மை அவருக்கு பலியாக்குகிறது என்று கண்டு அந்த குணத்தையும் அதற்குரிய மலர் மூலம் மாற்றிக் கொள்ளலாம்.

மேற்சொன்ன குணங்களையும் அவற்றால் நாம் பாதிக்கப்படாமலிருக்கும் வகையில் உத வும் மலருக்கு அன்னையிட்ட பெயரையும் கீழே தருகிறேன்.

குணம்	மலரின் பெயர்
பிறரை மட்டமாக நினைப்பது	- பெருந்தன்மை
சந்தேகம்	- நம்பிக்கை
பிறர் சொல்வதை ஏற்றுக் கொள்ள மறுப்பது	- விட்டுக் கொடுக்கும் குணம்
ஆதாய மனப்பான்மை	- பெருந்தன்மை
கோபத்தைக் கிளறுவது	- இனிமை
பின்னால் கேலியாகப் பேசுவது	- உண்மை (Sincerity)
மற்றவர்கட்கு அறிவில்லை என நினைப்பது	- விவேகம்
விஷயத்தை மறைப்பது	- வெளிப்படை யாகப் பேசுதல்
பிறர் செயலில் பின்னணியைக் காண்பது	நேர்மையாகச் - செயல்படுதல்
மரியாதையில்லாமல் பேசுவது	- கீழ்ப்படிதல்

எதையும் பணத்தால் நிர்ணயிப்பது	-மேன்மக்களுடைய பெருந்தன்மை
பிறருக்கு மரியாதைக் குறைவாக பேசக் கற்றுக் கொடுத்தல்	- தன்னலமற்ற தன்மை

அன்பில்லாதவர் : அன்பைச் செலுத்தவோ, பெற்றுக் கொள்ளவோ முடியாதவர் பெற்றோராகவோ, உடன்பிறந்தவராகவோ, கணவனாகவோ, மனைவியாகவோ அமைந்து விட்டதால் வாழ்க்கை நரகமாகிவிட்டாலும், வெறிச்சென்று ஜீவனற்று களையிழந்து பொட்டல் காடாகவோ பாலைவனமாகவோ மாறிவிடும்.

இவர்களால் நம் வாழ்வு சீரழியாமலிருக்க உதவும் மலர்கள் பிரியம், பாசம், புன்னகை ஆகும். மேலும் தீவிரம், ஆறுதல், அர்ப்பணம் ஆகியவையும் உதவும். அவர்களே மாறப் பிரியப்பட்டால் இம் மலர்களுடன் மாற்றம் என்ற மலரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

உணர்ச்சி பொங்கும் சுபாவமுள்ள தாயாருக்குப்பாராமுகமான மகள் பிறந்துவிட்டால், தாயாருக்கு வேதனையால் தலைவெடித்து விடும் போலிருக்கும். தாயார் மடியில் படுத்துக் கொள்ள பிள்ளைகள் 15 வயது வரை பிரியப் படுவர். அவர்களுடைய தாயாருக்குக்குழந்தை உள்பட எவரும் தன்னைத் தொடுவது பிடிக்காவிட்டால் குழந்தை மனம் கருகிவிடும். ஆரோவில் நகரத்தில் 21 வயது அமெரிக்கப் பெண்ணுக்கு உடல்நலம் குன்றிய பொழுது மற்றொரு பெண்மணி தன் மடியில் அவரைப் போட்டுக்கொண்டு மருந்து கொடுக்க முன் வந்தார். அவர் மடியில் படுத்தவுடன் அப் பெண்ணுக்கு எல்லாம் சரியாகிவிட்டது. மருந்து கூடத் தேவையில்லை. 'இதுபோல் என் தாய் மடியில் படுக்க நான் இதுநாள் வரை ஏங்கினேன். ஒருநாள் கூட என் தாய் அனுமதித்ததில்லை' என்று கதறி அழுதார்.

மரம் போன்ற கணவனுக்கு நெகிழ்ந்த நெஞ்சமுள்ள மனைவி வாய்த்தால், எதிரே மனைவியைக் கண்டால் அவனுக்கு எரிச்சல் வரும். ஏன் சும்மா வந்து தொந்தரவு செய்கிறாய் என்பான்.

கெஜட் பதவி அதிகாரி ஒருவர். திறமையும் நேர்மையும் மிக்கவர். அவரால் எவருக்கும் தொந்தரவு வராது. பிறர் கேட்காமலேயே மற்றவர்களுக்குத் தன்னால் செய்யக்கூடிய உதவியைத் தானே முன்வந்துகேட்டுச்செய்யும் பழக்கமுள்ளவர். செல்லுமிடமெல்லாம் சிறந்த பெயர் எடுத்தவர் ஆனால் அவர் சிரித்து எவரும் பார்த்ததில்லை. இவரால் சிரிக்கவே முடியாதோ என்று மற்றவர்கள் வியந்ததுண்டு. பண்பு நிறைந்த உள்ளத்திலிருந்து புன்னகை புறப்படாத நிலை. இவருடைய மனைவி, மக்களுடைய நிலை என்ன? புன்னகை என்று ஒரு மலருக்கு அன்னை பெயரிட்டுள்ளார். அம் மலர் இவரையும் சிரிக்க வைக்கும் திறனுடையது.

இளமையில் கொடுமை, வறுமைக்கு ஆளானவர்களுக்குப் பொதுவாகப் பாசமிருக்காது, வளர்த்தவர்கள் பாசமாக இருந்தாலும், இறக்கும் தருவாயிலும் அவர்கள் அழைப்பை ஏற்றுக்கொஞ்ச நாழிகை அவர்களைப் போய்ப் பார்க்கத் தயங்கி, அவர்கள் மனம் புண்படச் செய்தவருண்டு. பாசம் என்ற மலர் இவ்வுள்ளங்களிலும் பாசத்தை உற்பத்தி செய்யும்.

உடல்நலம் குன்றி நெடுநேரம் படுக்கையில் இருப்பவருக்கு அருகில் ஒருவர் இருந்தால் தேவலை என்றிருக்கும். ஒருவர் மாறி ஒருவர் தவறாது அருகில் இருந்த குடும்பத்தில் பிறந்தவர் வாழ்க்கைப்பட்ட இடத்தில் அருகில் எவரும் வராவிட்டால் அவருக்கு நோயைவிட, மனம்தான் புழுங்கித் துடிக்கும். அர்ப்பணம், ஆறுதல் என்ற மலர்கள் அவர் குறையைப் போக்கும்.

இவை பொதுவான பரிகாரங்கள், ஏன் ஒருவர் பாசமற்றிருக்கிறார் என அறிந்து அதை மலர்களால் மாற்றினால் நிரந்தரமாக நல்வாழ்வு அமையும். கொடுமைப்பட்டவருக்கு நம்பிக்கை போய் விட்டிருக்கும். அவருக்கு நம்பிக்கை என்ற மலர் அடிப்படையை மாற்றிக் கொடுக்கும். அதனால் ஏற்பட்ட வறண்ட சூழ்நிலைகள் மாறி சுமுகமான நிலை அமையப் பெறும்.

பொறுப்பற்றவர் : குடும்பத்தலைவர் பொறுப்பற்றவராகிவிட்டால், அக் குடும்பம் நாசமாகிவிடும். பிள்ளை சிறு வயதிலேயே பொறுப்பில்லாமலிருந்தால், பெற்றோருக்கு மனம் கிலேசமடையும். கணவன் பொறுப்பாக இருந்தால் மனைவி பொறுப்பில்லாமலிருந்தால், குழந்தைகளின் எதிர்காலம் இருள் அடையும்.

கட்டுப்பாடு, மனமாற்றம், கவனம் இவர்களுக்குரிய மலர்கள், உண்மை, நெறியாக செயல்படுதல், அற்புதம், சத்தியவாக்கு ஆகியவையும் பயன்தரும். பல குடும்பங்களில் இது போன்ற நிலை ஏற்படுவதுண்டு. அவரே முன்வந்து தன்னை மாற்றிக்கொள்ள முயற்சி செய்யவில்லை என்றால்,மேற்சொன்ன மலர்களை அன்னைக்குச்சூட்டி அவருடைய பொறுப்பின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் பிரார்த்தனை செய்தால் பலன் தெரியும். தகப்பனார்

பொறுப்பில்லாததால் மகளுக்குத் திருமணம் தடைப்படுகிறது;மகன் கட்டுப்படமாட்டேன் என்கிறான், வேலை செய்யும் ஆட்களால் விரயம் ஏற்படுகிறது, உறவினர்களின் எதிரில் மரியாதை இல்லாமலிருக்கிறது என்று ஒவ்வொரு காரியத்திலும் யார் பாதிக்கப்படுகிறார்களோ, எந்த வகையில் பாதிக்கப்படுகிறார்களோ அதற்குரிய மலர்களைத் தெரிந்து பயன்படுத்தினால் பலன் தெரியும். வீட்டில் ஒருவர் பொறுப்பில்லாமலிருந்தால்,மற்றவர்கள்அதைத் தங்களுக்குப் பயன்படுத்திக்கொண்டு தாங்கள் பாதிக்கப்படும் இடத்தை மட்டும் சுட்டிக் காட்டுவார்கள். தகப்பனார் அடிக்கடி வேலையை விட்டு மாறுகிறார். அதனால் குடும்பம் பாதிக்கப்படுகிறது என்றால், அதே காரணத்தால் அவர் வீட்டில் அதிகம் தங்குவதில்லை என்பதால் காலேஜ் படிக்கும் பையன் அந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஊர் சுற்றுகிறான். தகப்பனாருக்குப் பொறுப்பில்லை எனும்பொழுது பையனிடம் நாம் எதை எதிர்பார்க்கலாம் என்பது பொது. மாறாக, பையன் பொறுப்பாகப் படிக்க ஆரம்பித்து தகப்பனாரால் ஏற்பட்ட குறையை நிவர்த்தி செய்ய முற்பட்டால், அவனுடைய பிரார்த்தனை அன்னைக்கு உடன் கேட்கும். மலர்கள் அபரிமிதமான பலன் தரும்.

மகன் இந்த வயதிலேயே பொறுப்பில்லாமலிருப்பதால் அவன் எதிர்காலத்தைக் கட்டிக் காக்க முற்படும் பெற்றோர் உண்டு. இரு அண்ணன், தம்பிகள். 120 ஏக்கர் நிலம். அண்ணன் இறந்துவிட்டார். அவருக்கு ஒரே பையன். ஊதாரி, தம்பிக்கு ஒரே பெண். தம்பி அண்ணன் மகனைப் பற்றிக் கவலைப்பட்டார். அவன் வயதுக்கு வந்தவுடன் அவனை அழைத்து உன் பங்குக்கு 60 ஏக்கரைப் பிரித்துக் கொடுத்துவிடுகிறேன் என்றார். பெரும் தன்மையான குடும்பம் என்பதால் பையன் பிரிவினை தேவையில்லை என்றான். என் பெண்ணுக்குரிய 60 ஏக்கரை அவளுக்குக் கொடுப்பதற்குப்பதிலாக அவளுக்கு 30 ஏக்கரும், உனக்கு 90 ஏக்கரும் கொடுக்கப் பிரியப்படுகிறேன். ஆனால் உன் ஆயுசுக்கும் உனக்கு சொத்தை விற்க உரிமை கிடையாது என்று எழுதி உன் பிள்ளைகள் மட்டும் உரிமையை அனுபவிக்க நீ சம்மதிக்க வேண்டும். பெருந் தன்மையால் 40 வருஷங்களாக அந்தச் சொத்து இன்றும்கூட அழியாமலிருக்கிறது.

இதுபோன்ற பெற்றோர்கள் அநேகர். பிள்ளையின் பொறுப்பற்ற தன்மையை ஈடுகட்ட மற்றவர் ஒருவர் நல்லெண்ணத்தால் செய்யும் முயற்சிக்கு மலர்கள் தரும் பலன் அபரிமிதம்.

கணவனால் கைவிடப்பட்ட மனைவி : பாசம், ஆசிர்வாதம், பக்கபலமான துணை ஆகிய மலர்கள் கணவனை மனைவியுடன் சேர்க்கும். நம்பிக்கை, சத்தியவாக்கு, அற்புதம், நட்பு, பிரார்த்தனை, ஆறுதல் ஆகியவை மேலும் பலன் தரும்.

மலர்கள் தங்கள் பங்குக்குரியதைத் தவறாது செய்யும். இப் பிரச்னையில் வேறுபல அம்சங்களும் உள்ளன. மனைவியால் கைவிடப்பட்ட கணவன்மார்களும் உண்டு. ஆனால் குறைவு இருவருக்கும் பிரச்னை ஒன்றுதான்.

கணவன் கைவிட்ட காரணம் மனைவியின் குறைகளாக இருக்கும். கணவனுடைய குறையாக இருக்கும். அல்லது வேறு பிரச்னைகளாகவும் இருக்கும். குறை தன் மீதிருந்தாலும், கணவன் மீதிருந்தாலும் அவற்றிற்குரிய குறிப்பிட்ட மலர்கள் பிரச்னையை எளிதில் உடனடியாகத் தீர்க்கும்.

பொறுப்பில்லாத கணவன் ஊர் சுற்றுவதை மனைவி கண்டித்ததாலும், கணவனுடைய வாழ்விலுள்ள குறைகளை மனைவி கண்டு கொண்டதாலும், தாயார் பேச்சுக்கு இணங்கி கணவன் கொடுமைப்படுத்துவதாலும், திருமணம் ஆன பிறகு அதிக நகையை மனைவி கொண்டு வர வேண்டுமென்பதாலும், சொன்னபடி நகைகளைப் போடவில்லை என்பதாலும், வறட்டுப் பிடிவாதத்திற்காகவும் இதுபோன்ற பல காரணங்களுக்காக கணவன் மனைவியைத் தள்ளி வைப்பதுண்டு.

மனைவி வாயாடி என்பதாலும், கணவன் வீட்டாரைக் குறைத்துப் பேசி அவமானப் படுத்துகிறாள் என்பதாலும், எப்படியும் கணவனை அவன் வீட்டிலிருந்து பிரிக்க வேண்டும் என்று முயலுவதாலும், அடம் பிடித்துக் காரியத்தைச் சாதிக்கலாம் எனத்தாயார் சொல்லிக் கொடுத்ததை நம்புவதாலும், தனக்குள்ள குறைகளை மறைக்க வேறு பிரச்னைகளைக் கிளப்புவதாலும், எப்படியாவது தன்கட்சி ஜெயிக்க வேண்டும் என்று படாதபாடு படுவதாலும் கணவனும் மனைவியும் பிரிந்ததுண்டு.

இருவரில் ஒருவர் தன் தவற்றை உணர்ந்து திருந்துவதே சிறப்பு. மனம் மாறிப் பின், நிலைமை மாறாமலிருந்தால், மலர்கள் அதைப் பூர்த்தி செய்யும்.


கணவனை விட்டுப் பிரிந்தது ஒருவகையில் சௌகரியமாகப் போய்விட்டது என்ற எண்ணமுடைய பெண்ணும் இருப்பதுண்டு. அந்த எண்ணத்தை அடிமனத்தில் வைத்துக் கொண்டு, வெளியில் அவருடன் சேர முயற்சி செய்யும் பெண் தன் உள்மனத்தை மாற்றிக் கொண்டால் பிரார்த்தனை பலிக்கும். மலர்களால் அற்புதம் நிகழ்வதைக் காணலாம்.

அடக்கம், கீழ்ப்படிதல், தன்னலமற்ற தன்மை, ஆசையை விட்டொழித்தல், விட்டுக் கொடுக்கும் குணம், ஆன்மிகப் பேச்சு, சுமுகம், பெருந்தன்மை, வெளிப்படையாகப் பேசுதல், ஆகிய மலர்கள் இச் சூழ்நிலையிலுள்ளவர்க்குப் பயன் படும்.

வேலையில்லாதவர் : நம்பிக்கை, தொழில், அதிர்ஷ்டம் என்பவை பலன் கொடுக்கும். உற்சாகம், நிரந்தரம், முறைப்படுத்திய செயல், பூர்த்தி, எதிர்காலம், வீரச் செயல், விடுதலை, சத்தியவாக்கு, செயல்திறன் ஆகிய மலர்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

வேலை இல்லாத ஆண்கள், பெண்கள் அன்னைக்குப் பிரார்த்தனை செய்வதால் உடன் வேலை கிடைப்பது பெரும்பாலோர் அனுபவம். வேலை கிடைக்காததற்குச் சில காரணங்கள் இருப்பதுண்டு. சோம்பேறிக்கு வேலை செய்யப் பிடிக்காது. வேலைக்கு முயல்வான். கிடைத்தால் வேலை செய்ய வேண்டுமே எனப் பயமிருக்கும். எளிமையான வேலையும், பெரிய சம்பளமும் வேண்டும் என்று வேலைக்குப் போவதற்கு முன்பே மனம் நாடும். அவர்களுக்கு 8,10 வருஷமாக வேலை கிடைக்காது. மனம் மாறும் வரை நிச்சயமாகக் கிடைக்காது. வேலைக்குப்போக விருப்பமாகப்பாடுபடுவான். ஆனால் 24 வயதிலும் தன் பொருள்களை ஒழுங்காகவோ, பத்திரமாகவோ வைத்துக் கொள்ளத் தெரியாது. எந்தத் திறமையுமில்லை என்ற நிலையில் பலர் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் தம் உண்மை நிலையை அறிந்து, ஏற்றுக் கொண்டால், பிரார்த்தனையால் உடனே பலன் அடைவார்கள். மனம் மாறிய பின், மலர்கள் அதிகப் பலன் தருவதைக் காணலாம். மனம் மாறவும் மலர்கள் பயன்படும்.

பக்திக்கும், நம்பிக்கைக்கும் பலன் ஏராளம். குறிப்பான மனநிலை தடையாக இருந்தால், அதை மாற்றிக் கொண்டால் பலன் உடனடியாகக் கிடைக்கும். மலர்கள் பலன் தருவதுடன், நம் மனநிலையை, சூழ்நிலையை மாற்றவும் பயன்படும்.



[அடுத்த இதழில் மலர்ப் பட்டியல்]

அடையாளம்

ராஜலட்சுமி சுந்தரம்

பேராசிரியரின் அறைக்குள் அவள் எட்டிப் பார்த்தாள். யாரும் இல்லை. கையிலிருந்த சாப்பாட்டுக் கூடையை சுவர் ஓரமாக இருந்த பெஞ்சின் மீது வைத்தாள். புடைவைத் தலைப்பால் கழுத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டே அறைக்கு வெளியே போடப்பட்டிருந்த பெஞ்சில் சென்று அமர்ந்துகொண்டாள்.

எதிர் அறையில் சில போலீஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தனர். அங்கிருந்த எழுத்தரும் அவர்களிடமிருந்து ஏதோ செய்திகளைக் கேட்டுப் பதிவு செய்வதில் முனைந்திருந்தார். அறைக்கு வெளியே இரண்டு மூன்று பெண்கள். ஒருத்தி இளம் வயதுக்காரி. வயது முப்பதுக்குள்தான் இருக்கும். சமீபத்தில் ஏதோ விபத்தில் கணவனை இழந்திருக்கிறாள் என்பதை அவர்கள் பேச்சிலிருந்து புரிந்து கொள்ள முடிந்தது.

"போஸ்ட்மார்ட்டம் சர்டிபிகேட் கொடுத்தீங்கன்னா ஆபீஸ்லே கொடுத்துப் பணம் செட்டில் பண்ண சௌகரியமா இருக்கும் சார்" என்று அவன் அண்ணன் போன்ற ஒருவன் எழுத்தரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான். கணவனை இழந்தாலும் ரொக்கப் பணத்தோடு வருகின்ற நாத்தி என்ற ஒரு சிறு சலுகையால், அண்ணி போன்றவள் அந்தப் பெண்ணை வெகு பாதுகாப்பாக அணைத்துக் கொண்டிருந்தாள்.

பெஞ்சில் அமர்ந்திருந்த குழலி இதை எல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள். நெற்றியில் வைத்திருந்த "ஸ்டிக்கர்" பொட்டைத் தடவிப் பார்த்துக் கொண்டாள். கழுத்திலிருந்த அழுக்கேறிய மஞ்சள் கயிற்றையும் அவள் கைவிரல்கள் நெருடத் தொடங்கின.

"இதற்கு ஏதேனும் ஓர் அர்த்தம் உண்டா? செத்தும் பெண்டாட்டிக்குப் பணம் வரும் வகையில் வாழ்ந்த கணவனுக் கல்லவா மரியாதை வேண்டும் உலகில். என் புருஷனைப் போன்றவனுக்காக இந்தக் கயிற்றைச் சுமக்க வேண்டுமா?" என்ற வகையில் அவள் எண்ணங்கள் ஓடின.

"என்ன குழலி... ஏன் நீ வந்தே? சாப்பாட்டுக்காரன் வரல்லியா?"

குரல் கேட்டுத் திரும்பினாள். அவள் டாக்டரம்மா வேகமாக உள்ளே நுழைந்து கொண்டிருந்தாள். சட்டென்று எழுந்து கொண்டவள், டாக்டரம்மா பின்னாலேயே நடந்து அறைக்குள் நுழைந்து ஓரத்தில் இருந்த மேசையின் மீது தான் கொண்டு வந்திருந்த இலையைப் பரப்பி பாட்டிலிலிருந்து நீரை எடுத்துத் தெளித்தாள்.

மேலே போட்டிருந்த தீடித்த வெள்ளைக் கோட்டைக் கழற்றி நாற்காலியின் முதுகின்மேல் பரப்பிய டாக்டரம்மா, "கொஞ்சம் பொறு குழலி. பத்து நிமிஷம் ஆகட்டும். பிறகு சாப்பிடுகிறேன். இன்னிக்குச் செய்த கேஸ் கொஞ்சம் பயங்கரம். கொஞ்ச நேரம் உக்காந்தாத்தான் மனசு சரிப்படும்" என்றாள். நாற்காலியில் சற்றுப் பின்னால் சரிந்து பாதி படுத்திருப்பதைப் போல சாய்ந்து கொண்டாள். நெற்றி முழுதும் பொடித்தூவலாய் வியர்வைத் துளிகள்.

பிணம் அறுக்கும் அறை எவ்வளவுதான் குளிர்பதனப் படுத்தப்பட்டிருந்தாலும், அங் கிருந்து கல்லூரி அறைக்கு நடந்து வந்ததில் உடல் வியர்த்துப் போயிற்று.

நகரத்தின் சில காவல் மருத்துவரில் டாக்டரம்மா ஒருத்தி. மருத்துவக் கல்லூரி யின் சட்டஞ்சார்ந்த மருத்துவப் பிரிவின் பேராசிரியை டாக்டர் மீனாட்சி என்றால் காவல் துறையைச் சார்ந்த அனை வருக்கும் தெரியும்.

வீட்டில் சமையல் செய்து வரும் குழலிக்கும் சற்றேறக் குறைய மீனாட்சியின் வயது தான் இருக்கும். இந்த வயது வித்தியாசமின்மை அவர்கள் இருவரையும் சற்றே நெருக்க மாகப் பழக உதவியது. ஆதரவற்ற நிலையில் தன்னிடம் வேலைக்கு வந்த குழலியை மீனாட்சி சமையல் வேலையில் அமர்த்தி, அவள் ஒரே மகனை யும் புறநகர்ப் பகுதியில் இருந்த ஒரு சேவைப் பள்ளியில் சேர்த்துப்படிப்பைத் தொடரச் செய்தாள். இந்த நன்றி குழலி யின் மனத்தின் அடித்தளம் வரை வேரூன்றியிருந்ததால் அவள் 'டாக்டரம்மாவிற்காக' எதையும் செய்யத் தயா காததொரு மனப்பாங்கை வளர்த்துக்கொண்டிருந்தாள்.

"ஏம்மா... சாப்பாடு கலந்து தான் கொண்டு வந்தேன். ஸ்பூனால் வாயில் போடவா?"

மீனாட்சி பதில் பேசவில்லை. அவள் மூடியிருந்த கண்களை இலேசாகத் திறந்து குழலியைப் பார்த்தாள். சாய்ந்த நிலையி லேயே, "குழலி... மனிதன்

பிறந்துவிட்டால் சொந்தம், உறவுன்னு நம்மைச் சுத்திப் பல மனிதர்கள் கடைசி காலத்திலே நம்மோடு இருக்கும்படி வாழறதுதான் சிறப்பு. இல்லையா? உயிரோடு இருக்கும்போது பல பேர் நம்மோடு இல்லாவிட்டாலும் உயிர் போயிட்டபோது யாருமே இல்லாமல் இருப்பதைப் போலக் கொடுமை வேறில்லை" என்றாள் மீனாட்சி. குழலி மௌனமாகவே உட்கார்ந்திருந்தாள்.

அன்றைய "கேஸ்" எதுவோ அம்மா மனத்தைப் பாதித்திருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள்.

"ஆமாம்மா. போகும்போது நமக்காக இரண்டு சொட்டுக் கண்ணீர் விடவாவது நாலுபேர் வேண்டாமா அம்மா? அப்படி இல்லாத வாழ்க்கை என்ன வாழ்க்கை?" என்றாள்.

மீனாட்சி, "குழலி... டிபன் பாக்ஸில் ஸ்பூனைப் போட்டுக் கொடு. நான் இப்படியே சாப்பிடுகிறேன்" என்று கூறவும், குழலி காரியரைப் பிரித்து சாம்பார் சாதத்தோடு முட்டைக் கோஸ் பொரியலையும் வைத்து ஒரு ஸ்பூனைப் போட்டு நீட்டினாள். மீனாட்சியும் சாப்பிட்டுக் கொண்டே விவரிக்க ஆரம்பித்தாள்.

"நாலு நாள் முன்னாலே ஓர் ஆளை, நாலு பேர் கொண்டு வந்து அட்மிட் செய்திருக்காங்க. விடாத பேதின்னும் காய்ச்சல்னும் கொண்டு வந்திருக்காங்க. டாக்டருங்க பரிசோதனையின்போது, ஒரு வேளை 'எய்ட்ஸ்' வியாதியா இருக்குமோன்னு சந்தேகப்பட்டு இரத்தமெல்லாம் டெஸ்டுக்கு எடுத்து அனுப்பியிருக்காங்க. நேத்து ரிஸல்ட் 'எய்ட்ஸ்' நோய் தான்னு நிருபணமாகி வந்தது. ராத்திரியே அவன் செத்தும் போயிட்டான். கொண்டு வந்து சேத்தவங்க கொடுத்த விலாசத்திலே போய்ப் பார்த்தா அது பொய்யான விலாசம். இது யாருன்னு தெரியல்லே".

"மேடம்... மார்ச்சுவரி முழுவதும் சுத்தம் செய்தாச்சு. கொஞ்சம் தீ கணப்பும் வெச்சுட்டோம்" என்றபடி வந்து நின்றான் சிவகுமார். மீனாட்சியிடம் பணிபுரியும் அட்டெண்டர்.

"சரி... நாம் உபயோகித்த துணியையெல்லாம் எரிச்சிடச் சொல்லு. உறுப்புகளை எல்லாம் பார்மாலின்லே போடச் சொல்லு. நீ போய் நல்லாக் குளிச்சிடு. சிவகுமார் போய் விட்டான்.

"ஏம்மா... இது போலீஸ் கேஸா?" கேள்வியிலிருந்து குழலி தேறிவிட்டாள் என்றெண்ணிக் கொண்டாள் மீனாட்சி.

"ஆமாம். ஆள் யாரென்று தெரியவில்லை. செத்தது சாதாரணமாகவா அல்லது ஏதாவது விஷம் இருக்குமா என்பதற்காகத்தான் கேஸ் வந்தவுடனே போலீஸுக்குத் தகவல் சொல்லியிருப்பாங்க. எல்லாத்துக்கும் மேலே இப்போ இது "எய்ட்ஸ் நோய்"னு நிருபணம் ஆகியிருக்கு. நிச்சயமா போஸ்ட் மார்ட்டம் செய்யணும்" என்ற மீனாட்சி சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்தாள்.

கை கழுவி அவள் மீண்டும் இருக்கையில் அமரவும், ஒரு காவலர் சில போட்டோக்களைக் கொண்டு வந்து அவள் முன் வைத்தார்.

"அடையாளம் தெரியாதவங்களை போஸ்ட் மார்ட்டம் செய்யணும்னா போலீஸ் முதல்லே பாடியை போட்டோ எடுத்திடுவாங்க. பிறகுதான் நாங்க இங்கே போஸ்ட் மார்ட்டம் செய்வோம். போலீஸ், பேப்பர்லே போட்டோவை வெளியிட்டு யாராவது வந்து விசாரிக்கிறாங்களான்னு காத்திருப்பாங்க" என்று சொல்லிக் கொண்டே காவலர் கொடுத்த புகைப்படங்களின் மீது பார்வையை ஓடவிட்டாள்.

"பி.ஸி. ஒண்ணு செய்யுங்க. இந்தக் கேஸ் 'எய்ட்ஸ்'னு நிருபணம் ஆகியிருக்கிறதாலே நீங்க இந்தப் போட்டோவைக் காண்பித்து நகரத்திலே இருக்கிற இம்மாதிரிக் குற்றங்கள் நிகழ்கிற பகுதிகளிலே எல்லாம் விசாரிங்க. அபய நிலையத்திலே இருக்கிற பெண்கள் கிட்டே விசாரிங்க. நிச்சயமா இந்தப் பழக்கங்கள் இருக்கிறவர் மாதிரிதான் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்டிலே ஓரளவு தெரியுது" என்று மீனாட்சி சொல்லவும் குழலியின் மனம் வியப்பில் விரிந்தது.

"அம்மா... இந்த நோயைப் பத்தி இப்பவெல்லாம் ரொம்ப சொல்லுறாங்களே. அந்தப் பழக்கம் உள்ளவங்களுக்குத் தான் அது அதிகமா வருமா?" என்றாள் வியப்புத் தாங்காமல்.

"ஆமாம்" என்று மீனாட்சி சொன்னதும், காவலர் போட்டோக்களைக் கையில் எடுத்த போது கைதவறி அவை கீழே விழுந்து சிதறவும் தன் காலடியில் வந்து விழுந்த ஒரு போட்டோவைக் குனிந்து பொறுக்கி எடுத்தாள் குழலி. அவள் இயற்கையிலேயே தைரியசாலி. இறந்தவனின் போட்டோ என்றாலும் பயப்படாமல் அதைக் கையிலேடுத்துப் பார்த்தாள். மீண்டும் பார்த்தாள். உற்று உற்றுப் பார்த்தாள். கண்களைக் கசக்கிக் கொண்டு ஜன்னலருகில் சென்று மதியச் சூரிய ஒளியிலும் பார்த்தாள்.

"அண்ணே! அந்தப் போட்டோக்களையும் கொடுங்க" என்று வாங்கி அனைத்தையும் பார்த்தாள். எலும்புக் கூடாய்க் கிடத்தப்பட்டிருந்த உடம்பு. கன்னப் பகுதிகளில் பள்ளத் தாக்குபோல் குழி விழுந்திருந்தன. முன் பற்கள் கன்னம் ஒட்டியதில் சற்றே தூக்கலாகத் தெரிந்தன. இடப்பக்க நெற்றியில் அந்தத் தழும்பு...

குழலிக்குப் பளிச்சென்று கண்ணில் அந்தக்காட்சி ஓடியது.

கட்டிய மனைவியையே... வேறு இழிவான தொழிலுக்கு அழைத்தபோது அவள் தள்ளி விட்டதில் கீழே விழுந்து அம்மியில் நெற்றி இடித்து... ரத்தம் கொட்டி... புண் ஆறு வதற்கு ஒரு வாரம் ஆயிற்று. குழலியின் மனம் கனத்தது.

சிரித்து ஏமாற்றிக்கல்யாணம் செய்தது... பல மாதங்கள் தலை மறைவாகி விட்டது... நீண்ட நெடுஞ்சாலைகளில் தொலை தூரத்திலிருந்து வரும் லாரி டிரைவர்களைப் பெண்களிடம் அழைத்துச் செல்வதையே தொழிலாகக் கொண்டது... இவள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் சுற்றியது... தான் ஒரு குழந்தைக்குத் தாயானது.. அதுவும் பெண் குழந்தை. இவளையும் தொழிலுக்கு அழைத்தபோது இவள் தள்ளி விட்டது... பின் நாள்தோறும் இவளை அடித்துத் துன்புறுத் தியது... கடைசியில் ஒருநாள் ஒரு டிரைவர் இவளைத் தவறாக அணுகியவுடன் பொறுக்காமல் போதையில் இருந்த அவனது தலையில் கட்டையால் அடித்துவிட்டுப் பெண் குழந்தையையும் தூக்கிக் கொண்டு இரவோடு இரவாக பஸ் ஏறியது... அதே பஸ்ஸில் வெளியூர் கோர்ட்டுக்குச்சென்று திரும்பிக் கொண்டிருந்த டாக்டர் மீனாட்சியிடம் புகலிடம் கிடைத்தது... என்று அவள் மனத்தில் திரைப்படக் காட்சி களாக ஓடின.

ஒருகணம் 'அவன் என் கணவன்தான்' என்று கூறி ஈமக்கிரியைகள் செய்வோமா?' என்றெண்ணினாள். ஆனால் மீனாட்சி சற்றுமுன், இது மிக பயங்கரமான நோய். இவன் படுத்திருந்த படுக்கையிலிருந்து வார்டு சுவர்கள், கிடத்தப்பட் டிருந்த பிணக்கிடங்கு அனைத் துமே தீவிரமுறையில் சுத்தி



கரிக்கப்பட வேண்டும்" என்று கூறியது நினைவில் தட்டியது. கழுத்துக் கயிறும் கொஞ்சம் அவளை இடித்தது. சட் டென்று...

"அண்ணே... இந்த ஆளு சொந்தக்காரங்களை எனக்குத் தெரியும். நான் பிறகு அவுங்க ளுக்குச் சொல்லியனுப்புறேன். நீங்க போலீஸ் முறைப்படி அந்த ஆளை அடக்கம் செய் துக்கங்க. அம்மா சொன்னாப் பல இந்த வியாதியிலே செத்ததுனாலே எரிச்சிடுங்க. அவுங்க சொந்தக்காரங்க சார்புலே இந்தப் பணத்திலே எள்ளும் வாய்க்கரிசியும் போட் டுடுங்கண்ணே. உலகத்திலே யாருமே அனாதையாப் பொறக் கிறதில்லே. ஆனா அவுங்க நடத்தையாலே தன்னையே அனாதையா ஆக்கிக்கிடறாங்க. அதுனாலே அடையாளம் காட்ட முடியாத நிலைக்கு ஆளாயிட றாங்க.

ஆனா... இந்த ஆளு பொண் டாட்டி புள்ளெய நடுவீதிலே நிறுத்தினவென். நான் அ பொண்டாடடிக்கி இந்த யத்தை எழுதிடறேன்" எ வாறே முன்றானை முடி லிருந்து கசங்கிய ஒரு ஐம் ரூபாய்த் தாளை நீட்டினா காவலர் வெளியேறினார்.

குழலி... மெல்ல வா கதவைச் சாத்தினாள். க தில் கிடந்த அழுக்குக் க றைக் கழற்றினாள். மீனா யின் காலில் விழுந்தா "அம்மா! இது அந்த கட்டினது. இந்தச் செ எனக்குத் தெரியத்தான் இ ணிக்கு சாப்பாட்டுக்கு வரலிலே போலிருக்கு. கட சித்தம். உங்களுக்கு சங்க வரக்கூடாதுன்னுதான் போ காரருகிட்டே நான் உண் யைச் சொல்லலே..." எ போது மீனாட்சியின் கண் கலங்கின.

இனி குழலியின் வாழ்வுக் அவள் மகள் மாத்திரமே அடையாளம்.



அமைதி நிறைந்தது என்று நதப்படும் அந்த இடத்தில், மைதி மிகுந்த நேரம் என ப்பப்படும் இரவிலே, கவிந்து ந்த அமைதியின் ஊடாக, வ்வளவோ ஒலிகள் குழம்பி ச்சம் தருவதை ராமலிங்கம் ணர்ந்தான்.

உயரமான மலைமுடி அது.

அதன் அடிவாரத்திலிருந்து தற்கென அமைந்த கரடு ரடான பாதை வழியே ஐந்து மல் தூரம் நடந்து வர பண்டும் அந்த இடத்துக்கு.

அங்கே ஒரு கோயில் ருந்தது. சிறிய கல் கட்டடம். லைநம்பி என்று பெயர் பெற்ற தய்வம் யாரால் எந்தக் ாலத்தில் அங்கு அமைக்கப் ட்டதோ தெரியாது. ஆனால் தற்கு தினசரி பூசை உண்டு. தற்கென ஒரு பூசாரியும் ண்டு.

பூசாரி நாலைந்து நாள் ளுக்கு ஒரு தடவை கீழே ாய், மலை அடிவாரக் ராமத்திலிருந்து தனது சாப் ாட்டுக்கும் தெய்வ பூசைக்கும் தர தேவைகளுக்கும் அவசிய ான பொருள்களை எடுத்துக் காண்டு உயரே வருவார். காயில் அருகிலேயே ஒரு மடம் ருந்தது. அதில் அவர் தங்கி ருப்பார். சமையல் எல்லாம் அங்கேதான். குளிப்பதற்கும் குடிப்பதற்கும் வசதியாக மிக அருகிலேயே சிற்றாறு ஒன்று சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது.

அந்த ஆற்றின் ஓட்டமும், சற்றுத் தள்ளி ஒரு பள்ளத்தில் நீர் விழுகிற ஒலியும், அதற்கும் அப்பால் காடுகளினூடே நெளிந்து செல்லும் ஆறு ஒரு மலைமுடியிலிருந்து மற்றொரு பகுதிக்கு அருவியாக இறங்கும் தடதட ஓசையும் எப்போதும் ஏதோ ஒரு பின்னணி இசை போல் கேட்டுக்கொண்டே இருக்கும்.

இப்போது நள்ளிரவில், ஓசைகள் எல்லாம் கனத்து, தனித்தனி சத்தங்களாகவும், ஒன்றோடு ஒன்று குழம்பியும் ராமலிங்கத்தை அச்சுறுத்தின.

இனம் புரிந்து கொள்ள முடியாத வண்டுகளின் ரீங்காரமும், இரவுப் பறவைகளின் கூச்சலும் சதா கேட்டுக்கொண்டே இருந்தன. அமைதியற்றுச் சுழலும் காற்றின் கூப்பாடுவேறு.

தன்னந்தனியாக மலைநம்பி கோயிலுக்குள், இரும்புக் கம்பிகளாலான கதவின் பின்னே குறுகுறுவென்று உட்கார்ந்திருந்த ராமலிங்கம் உண்மையான பயம் எப்படி இருக்கும் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்துகொண்டிருந்தான்.

அவனுக்குத் துணையாக மலைநம்பி சிலையைத் தவிர அரிக்கன் லாந்தர் ஒன்றும் இருந்தது. மிகச் சிறிதாக ஒளி சிந்தும் வகையில் அதன் திரி உள்ளுக்கு இறக்கி வைக்கப்பட்டிருந்தது.

'இப்படி ஓர் ஏற்பாட்டுக்கு நான் ஒப்புக்கொண்டது மடத்தனம்' என்று ராமலிங்கம் எண்ணலானான். துணிச்சலான காரியம் என்றும், புதுமையான சோதனை என்றும் முதலில் அவன் நினைத்தது அசட்டுத் தனமேயாகும் என்று இப்போது அவனுக்குப் பட்டது.

நிலைமை இவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்று உண்மையின் ஒரு சிறு துணுக்கு தெரிந்திருந்தால் கூட, அவன் விபரீதமான இந்த விளையாட்டுக்கு - வேடிக்கைப் பேச்சாக ஆரம்பித்து வினையாக மாறிவிட்ட பந்தயத்துக்கு இணங்கியிருக்கவே மாட்டான்.

அறியாத்தனமாக மாட்டிக் கொண்டாயிற்று. இனி என்ன செய்வது? இரவு முழுவதும் அந்த இடத்தில் இருக்க வேண்டியதுதான். வேறு வழி கிடையாது.

விளையாட்டாக ஆரம்பித்த விவகாரம்தான் அது. ராமலிங்கமும், அவனைப் போன்ற கவலையில்லாத - வாலிப முறுக்கேறிய - இளவட்டங்கள் சிலரும் மலையடிவாரக் கிராமத்துக்கு வந்தார்கள். மலைமீது உல்லாசமாக ஏறினார்கள். கரடுமுரடான பாதையும், ஒருபுறம் அதலபாதாள மாய்க்காட்சி அளித்த பள்ளங்களும், மறுபுறம் நெடிதுயர்ந்த கற்சுவர் என ஓங்கி நின்ற பகுதிகளும், மரங்களும், இனிய ஒலி எழுப்பியவாறே ஓடும் தண்ணீர்ச் சங்கிலிகளும், மொத்தமான இயற்கையின் கம்பீரமான எழிற் கொலு முழுதுமே அவர்களுக்கு உற்சாகம் தந்தன.

சுற்றி நெளிந்து வளைந்து சென்ற பாதை வழியாக மேலே

மேலே ஏறிச் செல்வது சிரமமாக இருந்த போதிலும், அவர்களுக்கு மலை உச்சியின் நம்பி கோயிலும், ஆறும், சுற்றுப்புற இயற்கைச் சூழலும் உள்ளக் கிளர்ச்சி தந்தன.

நாகரிக உலகத்தின் அர்த்தமற்ற அவசரமும் வேகமும் ஆழமற்ற பரபரப்பும் இல்லாத சூழ்நிலை அவர்களுக்கு இனிய தாய், அற்புதமாய், சுகம் தருகிற நலமாய்த் தோன்றியது. எப்போதும் இங்கேயே இருந்து விட முடியுமானால்?

இப்படி ஒரு நினைப்பு சிலரது உள்ளத்தில் சலனமிட்டது. ராமலிங்கம் அந்த ஆசையை வாய்விட்டுச் சொன்னான்.

அந்த விதமாக, தன்னந் தனியே, பகலையும் இரவையும் நாலைந்து நாள்கள் மலைமீது ஓட்டிவிட்டு, பிறகு கீழிறங்கி ஊருக்குள் வருகிற பூசாரி இச்சூழ்நிலை வாழ்க்கையைப் பெரிதுபடுத்தவில்லையே!

வயிறு என்று ஒன்று மனிதனுக்கு இருப்பதாலும், அதன் தொல்லையைச்சகித்துக் கொள்ள முடியாமல், அதனுடைய பசிக்கு அடிக்கடி ஏதாவது கொட்டிக் கொண்டே இருக்க வேண்டிய கட்டாயம் நீடிப்பதனாலும், ஏதேனும் ஒரு தொழிலைப் பிழைக்கும் வழியாகக் கொள்ள வேண்டும் என்ற தூண்டுதலினால் பூசைப் பணியை மேற்கொண்டிருந்த நபர் அந்தப் பூசாரி. அவன் இயற்கையின் சந்நிதியிலே மனம் லயித்து, இன்பமாக ஆனந்த அனுபவம் பெறமுடியாது தான். இவ்வாறு ராமலிங்கம் சொன்னான்.

மலைமீது, காட்டுச் சூழலில், தன்னந்தனியாக இரவு நேரத்தைக் கழிப்பதற்கு மிகுந்த துணிச்சலும், பொறுமையும், மனவலிமையும் வேண்டும் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். அப்படி ஒரு இரவைக் கழிப்பது கூட விசேஷமான அனுபவமாக அமையுமே! இப்படி வள
பேச்சு பந்தயத்தில் வ
நின்றது.


சவாலை ஏற்றுக்கொ
செயல்புரிய யாரும் தயா
இல்லை. ராமலிங்கம் அ
இசைந்தான். பூசாரிகூட
லாத இரவில் தங்கியி
ஒப்புக்கொண்டான்.

அன்று அந்த நாளாக வ
வாய்த்தது.

இரவு நெருங்கும் முன்
பூசாரியும் மற்றவர்களே
சேர்ந்து கீழே இறங்க
டார். சில தினங்களு
வேண்டிய உணவுப் பொ
களையும் பூசைச் சாம
களையும் அடிவாரத்தில் உ
சிற்றூரில் சேகரம் செ
கொண்டு, மறுநாள் ப
பன்னிரண்டு மணி சுமாரு
தான் அவர் திரும்ப வ
சேர்வார்.

நண்பர்கள் ராமலிங்கத்
காகச் சிற்றூரில் காத்தி

வல்லிக்கண்ணன்



நாகச் சொல்லி விட்டுப் போனார்கள். கடைசி நேரத்தில் கூட அவன் மனசை மாற்றப் பெரிதும் முயன்றார்கள்.

'வேண்டாம் பிரதர்! ஏன் இந்த பயங்கரமான சோதனை? ஒன்றில்லாவிட்டால் ஒன்று விபரீதமாக நேர்ந்து விட்டால் என்ன செயய முடியும்? நீயும் எங்களோடு வந்துவிடு' என்று சிலர் சொன்னார்கள்.

'அவர்களோடு போனோ இல்லையே!' என்று இரவில் தனியாகக் கோயிலுக்குள் உட்கார்ந்திருந்த ராமலிங்கம் எண்ணினான். ஆனால் சாயங்கால வேளையில் அவன் முரட்டுப் பிடிவாதமாக, 'இதில் என்ன விபரீதம் வந்துவிடப் போகிறது! பூசாரி தினம் இந்த இடத்தில் தங்கியிருக்க இல்லையா? நான் ஒருநாள் ராத்திரி தங்கியிருந்தால், செத்தா போவேன்?' என்று சொல்லி அவர்களை அனுப்பி விட்டான்.

'தின்ற கொழுப்பும் தீபாளி மப்பும்' என்பார்களே! அது மாதிரியான கொழுப்பும் அகம்பாவமும் அறிவு மந்தமும் தான் என்னை அப்படிப் பேசத் தூண்டியிருக்கும்' என்று ராமலிங்கம் இப்போது நினைத்தான்.

'இப்ப மணி என்ன இருக்குமோ தெரியவில்லை. விடிவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் காத்திருக்க வேண்டுமோ?' என்று அவன் மனம் குறுகுறுத்தது.

கைக்கடிகாரம் அவசியமான தேவைகளில் ஒன்று என அவன் எண்ணியதில்லை. இப்போது நேரம் அசையாது கனத்த சுமையெனத் தலைக்குமல் அழுத்துவது போன்ற உணர்வு வளர்கையில், 'சே, நேரமே போகமாட்டேன்கிறதே!' என்ற எண்ணம் கம்பளிப்பூச்சியாய் அரிக்கையில், 'நாமும் ஒரு வாட்ச் வாங்கினோமில்லையே! இந்தச் சமயத்தில் ஒரு கடிகாரம் இருந்தால் மணி தெரிந்து தொள்ள எவ்வளவு சவுகரியமாக இருக்கும்!' என்ற நினைப்பு மீண்டும் மீண்டும் அவனுள் குமிழியிட்டது.

அது முன்னிலவுக் காலம். உருவம் இல்லாத ஏதோ ஒரு முகத்தின் பெரும் சிரிப்பு போல, வானவெளியில் தொங்கிக் கிடந்த அம்புலி மறைந்துவிட்டது.

நிலவு சிதறிக் கிடக்கையில் மலைமுடிகளும், மரங்களும், மேடு பள்ளங்களும் ஒருவாறு பார்வைக்குப் புலனாகிக் கொண்டிருந்தன. மேற்குத் தொடர்ச்சி மலை என்ற நீண்ட மலைத்தொடரின் தெற்குக் கடைசிப் பகுதி அது. பெரும் மலையின் மிடுக்கும் கம்பீரமும் குறைந்து காணப்பட்ட பகுதி தான் மலைநம்பி கோயில் இருந்த இடம். ஆயினும் அது கூடப் பெரியதாய், வியப்பு எழுப்புவதாய், அச்சம் தரக் கூடியதாய், உயர் முடிகளையும் கிடுகிடு பள்ளங்களையும் இருண்ட காடுகளையும் பெற்றிருந்தது.

நிலவு மறைந்துவிட்ட பின்னர் எல்லாம் இருள் மொத்தையாய்க் கண்களை உறுத்தின. வான மண்டலம் எல்லையிலாப் பூக்காடுபோல் நட்சத்திரங்களால் ஒளிபெற்று விளங்கியது. அங்குமிங்குமாகச் சில சில புதர்கள் விண்மீன்கள் போல் மினுக்கிய மின்மினிகளை அடுக்கடுக்காய் சுமந்து, தனிச் சிறப்புடன் திகழ்ந்தன. ஒற்றை மின்மினிப் பூச்சிகள் ஒளிப் பொட்டுகளாய் மிதந்து திரிந்தன.

'இரவு அமைதி நிறைந்தது இல்லை. ராத்திரி நேரத்து மலைப் பிரதேசமும் பூரண அமைதி கொண்டிருக்கவில்லை. எத்தனையோ சத்தங்கள்! இனம் புரியாத பூச்சி வகைகள் எழுப்புகிற விதவிதமான ஒலிகள் எத்தனை?' என்று ராமலிங்கம் எண்ணினான்.

அவ்வேளையில்கூட மெய் சிலிர்க்க வைக்கிற கோர ஒலி ஒன்று காற்றில் மிதந்து வந்தது. மரங்களில் இலைப் பாதுகாப்பினுள் ஒதுங்கியிருந்த பறவைகள் பயந்து கத்தின. குரங்குகள் கூச்சலிட்டன. இருட்டின் ஆழத்திலிருந்து பல ரகமான அலறல்கள் சிதறி வெடித்துப் பரவுவது போல் ஒலிகள் குழம்பி மிதந்து வந்தன.

காற்றும் வலுப்பெற்றுக் கொண்டிருந்தது. வெளவால்களும் சிறகடித்து விஷ்விஷ் என ஓசையிட்டவாறு மலை நம்பி கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிந்தன.

குளிரும் கொசுக்கடியும் அவனைப்பாதித்தன. நேரம் நகர்ந்தது.எனினும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

மலையின் வேறு பகுதியில், காற்றினால் மோதி உராய்ந்து கொண்டிருந்த மூங்கில் மரங்களில் நெருப்புப் பற்றியிருக்க வேண்டும். காற்று அதை மேலும் விசிறி, பெருந்தீயாக வளர்த்தபடி சுழல்வதாகத் தோன்றியது. அதனால் எழுந்த சுவாலை உயர்ந்த மரங்களின் மீது வெளிச்சம் பூசியது. அதை ராமலிங்கம் உணர முடிந்தது. மலைத் தீ அவன் அடிக்கடி கேள்விப்பட்டது உண்டு.

தீ காரணமாகத்தான் பறவைகளும் மிருகங்களும் அமைதி இழந்து கத்துகின்றன என்று அவன் நினைத்தான். கண்களை மூடியவாறு உட்கார்ந்திருந்தான். அவன் கைகள் கதவுக் கம்பிகளைப் பற்றி யிருந்தன.

ராமலிங்கத்தின் மனம் வீணான எண்ணங்களில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது.

— முன்பு பயங்கரக் கொள்ளைக்காரன் ஒருவன் இந்த மலைக்காடுகளில்

த்து வந்தான். எப்போ
வது கீழே போய் ஊர்
ில் கொள்ளையடிப்பான்.
ண்டும் இங்கே வந்து விடு
ன். மேற்கு மலைக்காடுகள்
வனுக்கு வீடு மாதிரி என்று
ரும் சொல்வார்கள். ஒரு
த்தியர் இருந்தார். மூலிகை
ளைத் தேடி அவர் மலை
நாள் கணக்கில் அலை
ர். கரடி, கடுவாய் போன்ற
ங்களை அவர் சந்திக்க
ந்தது பற்றியும் கதை
தயாகச் சொல்வார்.
– அவர்கள் எல்லாரும் பய
றி. தனியாக, மலை மேலே
முது போக்கவில்லையா?
இதை நினைக்கவும் அவ
பலவீனத்தின்மீது அவ
கு வெறுப்பு ஏற்பட்டது.
– இப்படியா பயந்து
ங்கிக் கொண்டிருப்பான்
சன்? இவ்வளவுக்கும் நான்
ட்ட வெளியில் இருக்க
லையே. பாதுகாப்பான
டத்துக்குள், கம்பிக் கத
துப் பின்னாலே தானே
க்கிறேன்?
இப்படி எண்ணவும் அவ
கோழைத்தனம் மீது
கமும், தன் பேரிலேயே
பரிதாப உணர்வும் அவ
கு உண்டாயிற்று.
– கட்டடம் என்றால்தான்
ா? பெரிய பாம்பு ஒன்று
கே வந்தால் நான் என்ன
ய முடியும்?
இப்படி நினைக்கவும்
ன் உடல் சிலிர்த்தது.
க்கிட்டுக் கண்களைத் திறந்
.
அப்போது மெய்யாகவே
னை நடுங்க வைக்கும் ஒரு
சி பார்வையை இழுத்தது.
ரு பாறை மேலிருந்து
ப்புப் பந்து ஒன்று ஒரு
த்தில் பாய்ந்தது. குதித்த
அது ஓடிவந்தது. அது
வாக இருக்கும் என்று
து கொள்ள முடியாத
ய், கொள்ளிவாய்ப் பிசாசு
து இதுவாகத் தான்



"பையன் மகா சாது. நீ எப்ப டைவர்ஸ் கேட்டாலும் உடனே சம்மதம் சொல்வான்..."

– சுதர்ஸன்

இருக்க வேண்டும் என்று திகைப்புற்றான். அதையே பார்த்தபடி இருந்தான்.

நெருப்புப் பந்து சிறிது நேரம் தென்படாமல் இருந்தது. பிறகு அவன் இருந்த கோயிலை நோக்கி ஓடிவந்தது. விசித்திரமான நெருப்புக் கோளமாகத் தோன்றியது அது. காற்றினாலும், ஓடிவரும் வேகத்தாலும் தீ திகுதிகுவென எரிந்தது. அது என்ன?

ராமலிங்கத்தின் உள்ளம் பதை பதைத்தது. பயம் அவனைக் கவ்வி உலுக்கியது.

அவனது பீதியை அதிகரிக்கும் விதத்தில், நகர்ந்து வந்த தீக்கோளத்திலிருந்து கோரமான, வேதனை மிகுந்த கதறல் தொடர்ந்து எழுந்தது. துயருற்று அலறும் கத்தலாகவும், சகிக்க முடியாத வேதனை தூண்டிய மிருக அலறலாகவும், தெளிவற்ற ஊமைக் குரலாகவும் எழுந்த அந்தக் கூப்பாடு சூழ்நிலை அமைதியைக் குதறிக் கிழித்தது. அக்கூச்சலும் பயங்கரமான தீப்பிழம்பும் கோயிலை நோக்கியே வந்தன.

ராமலிங்கத்தின் உடல் வெடவெடத்தது. அவன் பயந்து நடுங்கினான். அவனுடைய அச்சம் தெளிவற்ற ஓலமாய்ப் பீரிட்டது. அவன் கத்தியவாறு கண்களை மூட முயன்றான். ஆயினும் நெருப்புப் பந்தம் என்ன செய்கிறது என்று பார்க்க வேண்டும் என்ற உந்துதலினால் கண்கள் திறந்து விழித்தன.

அப்போது அந்தத் தீயின் மத்தியில் ஒரு முகம் தோன்றியது. மிருக முகம்போல் தெரிந்தது.

பயம், எலியைப் பூனை உலுக்குவதுபோல அவனை உதறிக் குதறியது. அவன் செயல்திறமற்ற சிறு குழந்தை போல நடுங்கி, பலமாய் கத்தினான். அவன் முகம் விகாரமாயிற்று. கைகளும் கால்களும் வலிப்பு நோய் கண்டவை போல் இழுத்தன. பயத்தினால் ஓலமிட்டபடி அவன் தரையில் புரண்டான்.

தீயில் எரிந்து கருகிக் கொண்டிருந்த மிருகமும் பயங்கரமாகக் கத்தியது.

ராமலிங்கம் தன் உணர்வு இழந்தான்.

விடிந்து சில மணி நேரம் சென்ற பிறகு பூசாரியும் அவன் நண்பர்களும் அங்கு வந்து சேர்ந்தார்கள்.

அங்கே அவர்கள் பார்வையில் பட்டவை –

கோயிலினுள் கட்டையாய்க் கிடந்த ராமலிங்கமும், வெளியே தீயில் கருகிக் கிடந்த ஒரு மிருகத்தின் அரைகுறை உடலும்தான்.

மிருகத்தின் சடலத்தை நன்கு கவனித்த பூசாரி, 'ஒரு கரடி எப்படியோ மூங்கில் காட்டுத் தீயில் சிக்கி, தீப்பிடித்து ஓடி வந்திருக்கிறது. உடம்பெல்லாம் எரிந்து கருகி இங்கு வந்து செத்து விழுந்திருக்கு. பாவம்' என்றார்.

மலைநம்பி சிலை அருகே உயிரற்றுக் கிடந்த ராமலிங்கத்தைப் பார்த்து அவர் பெருமூச்செறிந்தார். 'பாவம், பயந்து பயந்து, அந்தப் பயத்துக்கே பலியாகி இருக்கிறான் இவன்' என்றுசொன்னார்.

அனுதாபப்பட்டபடி நின்றார்கள் அவன் நண்பர்கள். ❀

சித்தர் தமிழ்

வாசக அன்பர்கட்குப்புத்தாண்டு வாழ்த்துகள். சிறப்பான பொங்கல் வாழ்த்துகள்!

விழாக்கள் நிறைந்த திங்கள் இது.

மலைபோல் வருதுயரும் பனிபோல் விலகும் என உலகுக்குணர்த்தும் உன்னத காலம்!

அனுபவிக்க வேண்டும் என்ற துடிப்பு இந்தக் காலத்தில் ஆன்மாவுக்கு ஏற்படும். ஆயின் மும்மல மாயை அதைப் புகைபோல் மறைத்திருப்பதால் அது தன் சுயஒளியைத் தற்செயலாக இழந்திருக்கிறது. இந்த நேரத்தைப் பார்த்து அடங்கியிருந்த ஐம்புலன்களும் ஆர்ப்பரிக்கின்றன. அரசர், மது மங்கை, மயக்கில் இருப்பின் நாட்டில் கொலை கொள்ளை பஞ்சமாபாதகங்கள் தலை விரித்தாடுவது போன்று.

ஆன்ம அருள் ஒளி வீசும் நம் தாய்நாட்டில் மார்கழி அதிகாலைக் குளியலும், வழிபாடும் நடைபெறும்.

மதுரை செல்பவர்கள் இக் காலத்தில் விண்ணுலகில் இருக்கின்றோமா என்ற இன்ப மயக்கத்தை இத் திங்கள் காணலாம். காலை 3.30 முதல் 5.30க்குள் அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயில் சென்று பார்க்கவும்.

மேலை நாடுகளில் உலகின் இன்பங்களை எல்லாம் ஒட்டு மொத்தமாக அனுபவித்துவிட வேண்டும் என்ற ஏக்கத் துடிப்பு புத்தாண்டு தினத்தில் காணலாம்.

எத்தனை சாலை விபத்துகள், குடி போதையில்! ஐந்து புலன்களும் கட்டவிழ்த்து விடப்பட்ட வேட்டை நாய்கள் போல் பாய்ந்து சென்று தம் வெறியை நுகரும். அதனால் விளக்கில் வீழ்ந்து மாளும் அந்துப் பூச்சிகள்போல் ஆயிரக்கணக்கில் மடிவர்.


எனவே புலனடக்கமே ஞானம் என்பர் சிலர். அது முதற் படியே. அடக்கினால் அவை பின் வெடிக்கும். தாமும் அவை அடங்கவேண்டும். இதைச் சிறந்த முறையில் விளக்குபவர் சித்தர் திருவள்ளுவர்.

திருவள்ளுவர்

இவர் மெய்யுணர்தலுக்குத் தம் திருக்குறளில் தனியே ஓர் அதிகாரம் ஒதுக்கியுள்ளார்.

'ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பய னின்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு' —354

கவியோகி பேகன்



மேலோட்டமாகப் பார்ப்பவர்கள் 'ஐந்து லன்களையும் அடக்கினும் உண்மையறியாத ர்க்குப் பயன் இல்லை' என்றே பொருள் காள்வர். ஆனால் பரிமேலழகரோ 'புலன்கள் டங்கி ஒருதலைப்பட்டுத் தாரணைக் கண் ற்றல். அங்ஙனம் நின்ற வழியும் வீடு பயவா மயின் பயன் இன்று' என்றார். "சிறப்பு ம்மை எய்துதற்கு அருமை விளக்கி நின்றது" ன்கிறார்.

திருவள்ளுவர் ஞானம் எனும் செய்யுட் ரட்டிலும்

வந மறைஞான மெய்யுணர்வு தானாகில்

நனரு ஊல்பதவி நாடுமே'

என்றே காண்கின்றோம்.

பேரரசன் ஒருவனின் மகன் தொட்டில் ருவத்தே காணாமற் போய்விட்டான். மலை ல் வேட்டையாடிக் கொள்ளையடித்துப் ழைக்கும் கூட்டத்திடம் சிக்கினான் அரச மாரன்.

கண்டதைப் பறிப்பான் ஒரு வேடன்

காதால் கேட்கும் ஒலிக்குறியாலேயே வீழ்த்து ான்.

வேட்டைப் பறவைகளை; மிருகங்களை, ற்றொருவன்.

வாசத்தால் மோப்பம் பிடித்து அதைக் கவர் ான் இன்னும் ஒரு வேடன்!

தான் பார்த்த ருசிக்காக அதே மானை வட்டையாட வல்லவன் நாலாமவன்.

ஐந்தாமவனோ தன் பரிசத்தால் ஒன்றின் மல் ஆசை வைத்தால் அதைப் பற்றாமல் டமாட்டான்.

இந்த ஐவரும் அரசகுமாரனுக்கு நட்பு.

அவர்களுடன் அரசகுமாரனும் வேட்டைக்குச் சன்று பெற்றதைப் பெரும் பரிசில்களாக னைத்து மகிழ்ந்து வந்தான்.

அவனுடைய நாட்டில், ஒரு சிறு மூலையில், வனுக்கே உரிய பொருள் குவியல்களில் ஒரு றிய பங்கைப் பிறர் கொள்ளையடித்து இவ க்குப் பங்கு தருகின்றனர். இவன் தன் பாருள் என்று அறியாமல் அதைப் பிறர் தரும் ரிசு என ஏமாறுகிறான் - தனக்கே தெரியாமல்.

உலகெங்கும் அரசகுமாரனைத் தேடுகின் னர். ஒருநாள் தற்செயலாக அரசனே அங்கு ந்து, தன் மகனை அங்க அடையாளங்களைக் காண்டு கண்டுகொள்கிறான். பிள்ளையைப் ார்த்ததும் குதிரையைவிட்டு அரசன் இறங்கி ந்தான்.

சூழ நின்ற வேடர்கள் பயந்தனர். மன்னன் மகன் வெகுண்டான்.

'மகனே! என் கண்மணியே!' என்று அவனை வாரி அணைத்தான்.

சிறுவனுக்கோ திகைப்பு; பயம்; பின் பயம் தெளிந்தும் ஒரு மயக்க நிலை...

'என் செல்வமே' என்று மன்னன் மறுபடியும் அணைத்ததும் அடுத்தகணமே அவன் ஓர் அரச குமாரனைப் போன்றே நடந்து கொண்டான்.

தன் நண்பர்களாகிய வேடுவர் குலம், அவன் சுற்றம் எல்லாம் அவன் மனதினின்றும் நீங் கிற்று அடியோடு.

புலன்களாகிய கள்வர்களிடை அகப்பட்ட சிறுவனுக்கு குரு வடிவில் சிவன் வரவும், பேரின்ப சாம்ராஜ்ஜியம் கைகூடுகிறது - சிற் றின்பச் சிறு நினைவுகள் தனக்கு ஒரு பொருட் டாகவே தெரியாமல் மறைகின்றன.

குருவடிவில் இறைவன்

'மகனே! நீ இந்திரிய வேடர்களிடையே அகப்பட்டு இந்திரியங்களே நீ என்று எண்ணி வீணுற்றாய். நீயே சிவம்' என அருள் பாலிக்கிறார்.

குருவின் ஞான தீக்கை கிடைத்தவுடனேயே மும்மல மாயைப் படலம் பகலவனைக் கண்ட பனிபோல் அகன்றுவிட, இவன் சிவவடிவம் பெறுகிறான்.

சூத்திரம் 8

'முற்செய் தவத்தால் சற்குரு வித்திரிய

வேடர்க் கிடையே வீணுற்றை நீசிவம்

அறிக' என சிவமா யாமுயிர் தானே'

— கவியோகி

புலன்களிடையே சிக்கிக் கொண்டிருக்க ஆன்மா தன்னையும் அறியவில்லை, தலை வனையும் அறியவில்லை. தலைவனை யறியாததால் அவனிடம் செல்லவும் இல்லை.

ஆனால் தலைவன் தன்பால் வந்தவுடனேயே, பாசமாம் தளைகள் தாமே அகன்றன.

தான் அலுக்க அலுக்க மேலும் வலுப் பெற்றுப் பிணைக்கும் அந்த மாயாமாலத் தளைகள்!

தலைவன் வந்ததும் தாமே அறுந்து தவிடு பொடியாயின!

இந்தஅனுபவத்தைத் திருமூலர் பாடுகிறார்.

பதிபசு பாசம் எனப்ப கர் முன்றில்

பதியினைப் போல்பசு பாசம் அனாதி!

சென்ற இதழ் கேள்விக்குப் பதில்

அப்பரை நீற்றறையில் இட்டபோது அவர் இறைவனருளால் சந்திர கலை யோகத்தில் இருந்தார்.

பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நினைவே!

— பாடல் எண் 159

குரு கிடைக்கும் புண்ணியம் பெற்றவர்கள் சத்திநிபாதர்கள். சத்திநிபாதர்களை எவ்வாறு குரு அடையாளம் கண்டு கொள்கின்றார்?

'எவனொருவன் சிவன் சந்நிதியில், தன் உடல் நடுங்க, உரோமம் சிலிர்க்க, பேரன்பு மேலிட்டு, முழுமையாகச் சரணாகதி அடைகின்றானோ அவனே சத்திநிபாதன்:

-ம்ருகேந்திரம்.

'ஞானத்தால் இந் நிலையை அடையலாம். எனினும் குருவின் மூலம் பெறுவதே சிறந்தது!'

- சாந்தோக்கியம்

'எனவே குருவிடம் சரணடை. உன் பாது காப்புக்காக:

முண்டோக உபநிடதம்.

'குருவே சிவம். சிவனே குரு: -


வராகஸ்மிருதி.

பிறவிக் கடலிடை திமிங்கல்ங்களும், முதலைகளும் சுறாமீன்களும், முயலும் அச்சுறுத்த, உன் கப்பலை ஓட்டிச் செல்ல வழிகாட்டும் துருவ விண்மீனே குரு - யோக சிகோபனிடம்.

சூர்ணக் கொத்து 4 கருத்துகளை வலியுறுத்துகிறது 1. தவத்தின் மூலமே ஆன்மா ஒளிவிடும். 2. சிவனே குருவாக வருவான். 3. ஐம்புலன்களுக்கிடையே அகப்பட்ட ஆன்மா தன்னையறியாது. 4. புலன்களை விட்டு வெளியே வந்தால் ஆன்மா தன்னையறியும்.

சற்குரு தீக்கை முறையினை 'சிவயோக சீர்த்தி' பக்கம் 74 - 92இல் காண்க. கழக வெளியீடு.

உலகுக்கெல்லாம் குருவாக விளங்கும் ஜகத்குரு காஞ்சி பரமாச்சாரியரின் பாத கமலங்களுக்குக் கோடி வணக்கம் கூறி இக் கட்டுரையை நிறைவு செய்வோம்.



சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி.

நன்றி : நிழற்படங்கள் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை.



கங்கைகொண்ட சோழபுரம் கோயில்

மறைந்த சோழர் தலை நகர் கங்கை கொண்ட சோழபுரம்

கி. ஸ்ரீதரன்

சோழ மன்னர்கள் தஞ் சையைத் தலைநகராகக் கொண்டு ட்சி செய்தனர். உலகமே ாற்றும் வகையில் இராசராச ாழன் தஞ்சைப் பெரிய ாயிலைக் கட்டினான். இராச ாச சோழனுக்குப் பின்னர் அவன் மந்தன் இராசேந்திர சோழன் ங்கை கொண்ட சோழபுரத்தை ாழர்களின் தலைநகராக மாற்றி மைத்தான். சுமார் 250 ஆண்டுகள் ன்னிந்தியாவிலேயே ஈடு ணையற்ற தலைநகராக ளங்கியது. இன்று சிற்றூராகக் ாட்சி அளித்தாலும் பல அரிய லாற்றுச் சிறப்புகளையும் ன்னகத்தே கொண்டு விளங்கு றது.

திருச்சியிலிருந்து சுமார் 100 .மீ. தொலைவில் அரியலூர் ழியாக சிதம்பரம் செல்லும் ழியில் இவ்வூர் அமைந்துள்ளது.


இராசேந்திரசோழன் வடக்கே ங்கை நதிவரை தன் படையை னுப்பிப்பெரும் வெற்றி கண்டு ங்கைகொண்டசோழன்' என்னும் ட்டம் கொண்டு அதன் நினைவாக ம்மாபெரும் நகரை நிறுவினான். ங்கை கொண்ட சோழீச்சுரம்' ன்ற பெயர் கொண்ட கோயிலை ம் இங்கே அமைத்தான்.

இக்கோயிலைப் பார்க்கும் பாழுது தஞ்சாவூர்க் கோயிலைப் பான்றே காட்சி அளிக்கும். ஞ்சைக் கோயிலின் விமானம் கீழிருந்து உச்சி வரை சதுர வடிவாகக் காட்சி தரும். கங்கை கொண்ட சோழபுரம் கோயிலுடைய விமானம் கீழே சதுரமாகவும் இடையில் எட்டு பட்டையாகவும் உச்சியில் வட்டவடிவமாகவும் சிவலிங்க வடிவாகவே காட்சி அளிக்கும் பெருமை உடையது. தஞ்சைக் கோயிலின் கட்டட அமைப்பின் சிறப்பினின்றும் முற்றிலும் வேறுபட்டனவாக, கங்கை கொண்ட சோழபுரச் சிற்பங்கள் கட்டடத்திலிருந்து வெளிப்பட்டு தனித்தன்மையுடன் சிறப்பாகக் காட்சி அளிப்பதைக் காணலாம்.

சோழர்களின் குல நாயகம் ஆடவல்லான் சிற்பம். காலின் கீழே காரைக்கால் அம்மையார்.



கருவறையின் தேவகோட்டங்களில் நடனமாடும் கணபதி, தட்சிணாமூர்த்தி, ஹரிஹரன், ஆடவல்லான், கங்காதரர், லிங்கோத்பவர், திருமால், சுப்ரமணியர், காலாந்தகர், துர்க்கை, பிரம்மா, பைரவர், காமதகனர் ஆகிய தெய்வத் திருஉருவங்களைக் கண்டு மகிழலாம். இதில் ஆடவல்லான் சிற்பம் மிகவும் அற்புத



மாளிகைமேடு - அகழாய்வுக் குழிகளின் தோற்றம். பின்னால் கோயில் விமானம்.

மானது. சோழ மன்னர்களின் 'குலநாயகம்' அல்லவோ! ஆனந்தத் தாண்டவம் ஆடும் ஆடவல்லான். அருகிலே உமைஅன்னை, நந்தியின் அருகே நின்று கொண்டு தாண்டவத்தைக் கண்டு வியத்து நிற்கிறாள். மறுபக்கம் குடமுழா வாசிக்கும் நந்தி. ஆடுகின்ற பெருமானின் காலடியிலே சிவகணங்கள். அவை மட்டுமா! எலும்பும் தோலுமாய் பக்தியே உருவாக காரைக்கால் அம்மை தாளம் போடும் காட்சியைக் கண்டு போற்றாதவர்கள் யாருமே இருக்க முடியாது. "இறைவா நீ ஆடும் பொழுது உன்னடியின் கீழ் இருக்க" இறைவனை வேண்டுகிறார் என சேக்கிழார் பெருமான் காரைக்கால் அம்மையாரின் வரலாற்றிலே கூறுகிறார். கல்லிலே இலக்கியம் உயிர் பெற்று இச்சிற்பத்தில் விளங்குவதைக் காணலாம்.

வடக்குப் படிக்கட்டின் அருகில் சண்டேசுவர அனுக்கிர மூர்த்தி என்ற சிற்பம் காணப்படுகிறது. சிவபெருமான் உமையுடன் அமர்ந்திருக்கிறார். அவரது காலடியில் கரம் கூப்பி வணக்கமே உருவாக அமர்ந்துள்ள சண்டிகேசுவரர். சிவபெருமான் ஆசையோடும் பக்திப் பெருக்கோடும் சண்டிகேசுவரர்க்கு கொன்றை மாலையைச் சூட்டுகிறார். உமையன்னை பெருமிதத்தோடு அக்காட்சியைக் காணும் கோலம் மிகவும் சிறப்பானது. தமிழகத்தில் வேறு எங்கும் இதுபோன்ற சிற்பத்தைக் காண இயலாது என்று கூறும் அளவுக்குப் பெருமை வாய்ந்த ஒன்று.




சோழர்கால கட்டடப்பகுதியின் ஒரு தோற்றம்.

மாற்றரசர்களின் நாடுகளை வெல்லும்பொழுது வெற்றியின் அடையாளமாக அங்கிருந்து சிற்பங்களை எடுத்து வந்துள்ளனர். இக்கோயிலில் காணப்படும் துர்க்கை, நவக்கிரகம் எனப்படும் சூரிய பீடமும், அவற்றுள் சில. சூரிய பீடம் சாளுக்கியர் சிற்பம் ஆகும். தாமரை போன்று மேற்பகுதியும், அதன் கீழே ஒரு சக்கரம் உள்ள தேராகவும், அதை இழுக்கும் ஏழு குதிரைகளும், அவற்றை ஓட்டிவரும் அருணனும், எட்டு திசைகளில் காணப்படும் உருவங்கள் கொண்ட சூரிய பீடத்தை அனைவரும் காணவேண்டியதாகும். இவை மட்டுமல்ல! இன்று ஊரைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் நுளம்பர், சாளுக்கியர் சிற்பங்களைக் காணலாம். செங்கமேடு என்ற இடத்தில் காணப்படும் பைரவர், பைரவி சிற்பங்கள் கலிங்க நாட்டைச் சேர்ந்தவையாகும். இச்சிற்பங்களை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை பாதுகாக்கப்பட்ட இடத்தில் வைத்துப் போற்றிப் பாதுகாப்பது குறிப்பிடத்தக்கதாகும். கங்கைகொண்ட சோழீச்சரத்து இறைவனை தேனே, அமுதமே, புரங்கள் மூன்றெரித்த கண்டனே என்றெல்லாம் திருவிசைப்பாவில் கருவூர்த் தேவர் போற்றுகின்றார்.


கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து மேற்கே 2 கி.மீ. தொலைவில் 'பொன்னேரி' என்று அழைக்கப்படும் மிகப்பெரிய ஏரி காணப்படுகிறது. இதுவும் இராசேந்திர சோழனால் தோற்றுவிக்கப்பட்டதாகும். தான் வென்ற மாற்றரசர்களின் தலையில் கங்கையாற்று நீரை எடுத்து வரச்செய்து பின்னர் சோழ கங்கை என்று கங்கை நீரினால் ஜயஸ்தம்பமாகச் செய்வித்தான் என அவனது திரு








கங்கைகொண்ட சோழபுரச் சிற்பச் செல்வங்கள்
வரைந்தவர் : அமரர் சில்பி
ம் 1. திருமகள்;- கோயிலும் விமானம்; துர்க்கை
ம் 2. கலைமகள்; துர்க்கை;கங்கை கொண்ட
சோழீச்வரம் விமானத் தோற்றம்; நந்தி.
ம் 3. துவாரபாலகர்; சண்டேசருக்கு அருள்தரும்
பெருமான், உமைதேவியுடன் மகாமேரு.
தேவன்; மகிஷனை வென்ற தேவி (மகிஷாசுர மர்த்தனி)
சித்திரங்கள் நன்றி : எஸ். மகாலிங்கம்)



சில்பி
சில்பி











வெளிப்படுத்தப்பட்ட மாளிகைப் பகுதிகளைக் கண்டு மகிழும் பொதுமக்கள் – மாளிகை மேடு.

வாலங்காடு செப்பேடு புகழ்ந்து போற்றுகின்றது. இவ்வேரியிலிருந்து நீர் செல்லுவதற்காக ஒரு தூம்பு இன்றும் காணப்படுகிறது. பிற்காலத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தாலும் சோழர் காலத்தில் இத்தூம்பு அமைக்கப் பட்டது என்பதை இவ்வாண்டு இங்கே தொல்பொருள் ஆய்வுத் துறையால் நடத்தப்பெற்ற அகழாராய்ச்சியினால் அறிய முடிகிறது.

இராசேந்திர சோழனுக்கு கங்கைகொண்ட சோழன், முடிச் சோழன், மதுராந்தகன், உத்தமச்சோழன்பண்டிதசோழன், வீரசோழன், பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன், பரகேசரி என்ற பட்டப்பெயர்கள் உண்டு. வானவன்மாதேவி, பஞ்சவன்மாதேவி, முக்கோக்கிழான், வீரமாதேவி என்ற பல தேவியரும் இருந்தனர். கங்கை கொண்ட சோழபுரக் கோயில் இவனால் தோற்றுவிக்கப்பட்டது என்பதைத்தென்னாற்காடு மாவட்டம் எசாலம் என்ற ஊரிலிருந்து அண்மையில் கிடைக்கப்பெற்ற செப்பேடு தரும் செய்திகளால் உறுதிசெய்ய முடிகிறது. இவனுக்குப் பின்னர் முதற்குலோத்துங்க சோழன் முதல் மூன்றாம் குலோத்துங்க சோழன் ஆட்சி வரை இவ்வூர் புகழுடன் விளங்கியிருக்கிறது. சடாவர்மன் சுந்தர பாண்டியன் இக்கோயிலில் சிறப்பான வழிபாடு செய்ய தானமளித்திருக்கிறான். கிருஷ்ண தேவராயர் காலத்திலும் தனிச் சிறப்புடன் விளங்கியிருக்கிறது. இதற்குப் பின்னர் உடையார் பாளையப் பாளையக்காரர்களின் ஆட்சியின் கீழ் கங்கைகொண்ட சோழபுரம் கோயில் வந்தது. பல திருப்பணிகளும், சிறப்பான வழிபாடுகளும் செவ்வனே செய்து இக்கோயிலைப் போற்றி வந்துள்ளதற்கான சான்றுகள் உள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கோயில் இன்றும் இருக்கிறது. சோழ மன்னர்கள் வாழ்ந்த அரண்மனை மற்றும் ஊர் எவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள ஆவலாக இருக்கிறதல்லவா? அவை பற்றிய குறிப்புகளை இலக்கியம், கல்வெட்டுகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

கங்கைகொண்ட சோழபுரம் கங்கா குண்டம், கங்காபுரி, கங்கை மாநகர் என்றெல்லாம் அழைக்கப் பட்டுள்ளது. விக்கிரமாங்கதேவ சரிதம் என்னும் வடமொழி நூல் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் மீது பாடப்பட்டது. அதில் கங்கை கொண்ட சோழபுரம் 'கங்கா குண்டம்' என அழைக்கப்படுகிறது. ஜயங்கொண்டார் கலிங்கத்துப்பரணியில் 'கங்காபுரி' என அழைக்கிறார். கல்வெட்டுகள் 'கங்கைமாநகர்' என்று குறிப்பிடுவதைக் காண்கிறோம்.

கங்கைகொண்ட சோழபுர அரண்மனைப் பகுதிகளையும், தெருக்களின் பெயர்களையும், பணியாற்றிய சிலரின் பெயர்களையும் கல்வெட்டுகளின் மூலம் அறிந்து கொள்கிறோம். இவ்வூரில் வீரசோழ மடிகை, மலையரணப் படைவீடு என்ற பகுதிகள் இருந்ததை அறிய முடிகிறது. தரணி சிந்தாமணிப் பெருந்தெரு, கங்கைகொண்ட சோழன் திருமதிலுக்குள் வடகூரில் உத்தம சோழப் பெருந்தெருவி



தரையில் புதைந்திருக்கும் கட்டடப்பகுதிகள்.

னுள்ள வானமாளிகை உடையான் வேம்பன் வைசியார் மகன் ஆரம் பூண்டான் என்பவனைப் பற்றியும், தெருக்களின் பெயர்களையும் அறிய முடிகிறது. விக்கிரம சோழ வேளம், முடிகொண்ட சோழ வேளம், திரிபுவனமாதேவி பேரங்காடி, உள்ளாலைப் பெரிய அங்காடி, வியாபாரி வெண்காடன் ஆடவல்லான் போன்ற கடைவீதி களையும், அங்கிருந்த வியா பாரிகளின் பெயர்களையும் அறிய முடிகிறது.

கங்கைகொண்ட சோழபுரத்துத் திருக்கொற்றவாசலில் புறவாயில் சேனாபதி இளங்காரிக்குடையான் சங்கரன் அம்பலம் என்று திருவா வடுதுறைக் கோயில் கல்வெட்டு கூறுகிறது. நன்னிலம் வட்டம் சேங்காலிபுரத்தில் துந்துபீசுவர சுவாமி கோயில் உள்ளது. அதனை கற்றளியாகச் செய்தவன் கங்கை கொண்ட சோழபுரத்தைச் சேர்ந்த சாலிகன்கொதமன் என்பவன் ஆவான். அக்கோயிலின் சுவரில் கூப்பிய கரத்துடன் ஒரு திரு உருவம் காணப்படுகிறது. அதற்கு மேலே "ஸ்வஸ்திஸ்ரீ இக்கோயில் திருக்கற்றளித் திருப்பணி செய் வித்தான் கங்கைகொண்ட சோழ புரத்து முடிகொண்ட சோழப் பெருந்தெருவில் இருக்கும் சலிகன் கௌதமன் தில்லைவனமுடையான் அரியான்" என்று கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது. வேம்பு குடிவாசல் என்ற வாசல் தெற்குப் பகுதியில் இருந்ததாக அறிய முடிகிறது. இன்றும் இங்கே வேம்புகுடி என்ற ஊர் உள்ளது. இதேபோன்று கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றிக் கொல்லா புரம், ஆயுதகளம், உட்கோட்டை என்று பெயர்கொண்ட ஊர்கள் பண்டைய நகரின் சிறப்பை எடுத்துக் கூறும் வகையில் அமைந் துள்ளன.

ஒட்டக்கூத்தர் இயற்றிய இராச ராசசோழன் உலாவில்

"கோயிலுமிலைக் குழாம் நெருங்க –
வாயிலும்
மாளிகையும் சாலையும்
ஆலயமும்மண்டபமும்
சூளிகையும் எம்மருங்குந்
தோரணமுஞ் சாரமுந்
தெற்றியும் மாடமும்
ஆடரங்கும் செய்குன்றும்
சுற்றிய பாங்கரும் தோன்றாமே"

என்று இந்நகரைப் போற்று கின்றார்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்த அரண்மனைகளுக்கு பெயர் களிடப்பட்டு அழைக்கப்பட்டிருக் கின்றன. வீர இராசேந்திர சோழ னுடைய கல்வெட்டில் இங்கிருந்த அரண்மனை 'சோழ கேரளன் திருமாளிகை' என்று குறிக்கப் படுகிறது. இராசேந்திர சோழ னுடைய பட்டங்களில் சோழ கேரளன் என்பதும் ஒன்று. முதற் குலோத்துங்க சோழனுடைய காலத் தில் "கங்கைகொண்ட சோழன் மாளிகை" என்று அழைக்கப்பட்ட தையும் காண்கிறோம். மேலும் இராசேந்திர சோழன் மதில், உள் படைவீட்டு மதில், குலோத் துங்க சோழன் திருமதில் என்ற மதிற்சுவர்களின் பெயர்களையும், இராசராசன் பெருவழி, இரா சேந்திரன் பெருவழி, குலோத் துங்க சோழன் திருமதில் பெரு வழி என்ற பெருவழிகளின் (High ways) பெயர்களையும் அறிய முடிகிறது. அரண்மனையில் ஆதி பூமி, கீழை சோபானம், மாலி வானாதிராஜன் பள்ளிக்கட்டில் போன்ற பகுதிகள் இருந்ததையும் கல்வெட்டுகளின் வழியாக அறிந்து கொள்கிறோம்.

மறைந்த சோழர் தலைநகரை அகழாய்வு செய்து வெளிப் படுத்தும் பணியினைத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை 1980-81 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொண்டு வருகிறது. மாளிகை மேடு, கீழ்மாளிகைமேடு, வெளிமதில், கல்குளம் என்று அழைக்கப்படும் குளத்திற்கு நீர் வரும் பகுதி, மண்மலை ஆகிய பகுதிகளில் அகழாய்வினை மேற் கொண்டது.

இன்று மாளிகை மேடு என்று அழைக்கப்படும் பகுதியில் வெளிப் படுத்தப்பட்ட பகுதியில் சோழர் கால அரண்மனையின் அடித்தளம் (Foundation) காணப்படுகிறது. அடித்தளத்தின் அமைப்பினைக் கொண்டு அரண்மனை எவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதை ஒருவாறு ஊகிக்க முடிகிறது. அடித்தளத்தின் சுவர்கள் தரையி லிருந்து சுமார் 1 மீட்டர் ஆழத்தில் காணப்படுகிறது. சுவரின் அகலம் 1 மீட்டர் 10 செ.மீ. ஆகும். சுட்ட செங்கற்களைக் கொண்டு களி மண் சாந்தினைப் பூசிக் கட்டடங் களை எழுப்பியுள்ளனர். கட்டடப் பகுதியில் ஆங்காங்கே சதுரவடி வான கற்கள் புதைத்து வைத்துக் கட்டப் பட்டிருப்பதையும் காண லாம். இக்கற்களின் நடுவில் சிறுகுழி இருப்பதையும் காண லாம். இக்கற்கள் மரத்தூண் களைத் தாங்குவதற்காக அமைக் கப்பட்ட பீடங்களாக விளங்கு கின்றன. அடித்தளம் இரண்டு சுவர்களாகச் செல்வதைக் காண முடிகிறது. எனவே அரண்மனை இரண்டு தளம் உடையதாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அகழாய்வில் பெருமளவு ஆணிகள் கிடைத்துள்ளன. இவற்றில் பல் வேறு அளவுகள் கிடைத்துள்ளன. மாளிகையின் கூரைப்பகுதிகள் மரத்தாலேயே அமைக்கப்பட் டிருக்க வேண்டும். கூரையின் மேல் வேயப்பட்ட ஓடுகளும் கிடைத்துள்ளன. மாளிகையின் சுவர் வண்ணம் பூசியிருந்த தற்கான அடையாளமாக வண்ணம் பூசியுள்ள காரைத் துண்டுகள் கிடைத்துள்ளன.

அகழாய்வில் அலங்கார வேலைப்பாடு, யாளி, யானை போன்று வேலைப்பாடு செய்யப் பட்ட தந்தப்பொருட்கள், தாமரை போன்று அலங்கார வேலைப்பாடு செய்யப்பட்ட பலகைக் கற்கள், உடைந்த வாளின் கைப்பிடி ஒன்று முதலிய பொருள்கள் கிடைத்ததி லிருந்து சோழ மன்னர்களின் இருப்பிடமாக இப்பகுதி விளங்கி யிருக்க வேண்டும் என்பதை அறிய முடிகிறது. இப்பகுதியில் கிடைக் கும் சீன நாட்டுப் பானை ஓடுகள் அக்காலத்தில் தமிழகத்திற்கும், சீன நாட்டிற்கும் இருந்த வர்த்த கத் தொடர்பினை எடுத்துக்காட் டும் சான்றுகளாக அமைகின்றன. அரணமனையின் ஒரு சில பகு தியே வெளிப்படுத்தப்பட்டிருந் தாலும் இங்கு கிடைத்த பண்டைய கலைப்பொருள்கள் மாளிகையின் சிறப்பினை அறிந்து கொள்ள உதவுகின்றன. அகழாய்வுப் பணி தொடர்ந்து நடைபெற உள்ளது. அகழாய்வில் கிடைத்த பொருள் களை, பொதுமக்கள் கண்டு மகிழ்ச்சி அடையக் காட்சியகம் ஒன்றைத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைத்திருக்கின் றனர். இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க கங்கைகொண்ட சோழபுரத்திற்கு ஒரு முறை சென்று வரலாமே!

ஒற்றைக் குருவி

விக்கிரமன்

வெளியே அழைப்பு மணி விட்டு விட்டு ஒலித்தது. மாணவிகளின் பரீட்சைத் தாள்களைத் திருத்திக் கொண்டிருந்தேன். எழுந்து கதவின் வெளிப் பார்வைக் கண்ணாடி வழியாகப் பார்க்கிறேன்.


எனக்குத் திக்கென்றது. அந்த வடிவம் தெளிவற்றதாக தெரிந்தாலும், இன்னார் என்று கண்டுகொள்ள எனக்குச் சங்கடமாயில்லை.

"இவர் ஏன் இங்கு வருகிறார்?" என்று என்னை நான் கேட்டுக் கொள்கிறேன். கதவைத் திறக்கலாமா வேண்டாமா என்று ஒரு கணம் யோசிக்கிறேன். கதவைத் திறக்கிறேன். அவர் நிற்கிறார். கையில் சுருட்டப்பட்டிருந்த ஒரு பழைய வாரப்பதிப்பு. சரியாக வாரப்படாத தலை. பித்தான் போடாத ஷர்ட். கடினமான மூக்குக் கண்ணாடி வழியே அவர் என்னைப் பார்த்து உள்ளே வரலாமா என்ற கேள்வியைத் தெரிவித்தது. செயற்கையாக வரவழைத்துக் கொண்ட புன்சிரிப்பு. அங்கேயே அவரை நிற்கவைத்துப் பேசி அனுப்பிவிடத் துடிக்கிறேன். ஆனால் என் உள்ளத்தே பொங்கிவரும் சொற்களின் சூடான குரல் கேட்டு அக்கம் பக்கத்தவர்கள் கூடிவிடலாம்.

நான் இதுவரை இந்த நான்கு அடுக்கு ஃபிளாட்டில், கௌரவமாக வாழ்ந்து வருகிறேன். சங்கரி அம்மாள் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியை என்ற மதிப்பு இருக்கிறது. நேரே எனக்களிக்கும் புன்முறுவலும், மரியாதைச் சொற்களும், புகழ்ச்சியான வார்த்தைகளும் என்னை நிமிர்ந்து நிற்கச் செய்தன. மற்றவர்கள் என்னைப் பற்றி முதுகுப்பக்கம் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று நான் கவலைப்பட்டதில்லை. நான் செல்வியா – திருமதியா என்று சிலர் கவலைப்பட்டுத் தங்களுக்குள் விவாதிப்பதை நான் பொருட்படுத்துவதில்லை. என் ஒழுக்கத்திற்கு மாசு ஏற்படாமலிருந்தால்போதும்.

சிறிது யோசித்தேன். வெளியே நிற்க வைத்துப் பேசுவதால் ஏதாவது பலன் ஏற்படப் போகிறதா! அவரை உள்ளே அழைத்தேன். கதவைச் சாத்தினேன்.

"ஓ! பரீட்சைப் பேப்பர் திருத்திக் கொண்டிருந்தாயா? வேலைக்கிடையே தொந்தரவு கொடுத்துவிட்டேனா, பூரணி? மன்னித்துவிடு. நீ உன்னுடைய வேலையை முடித்து வரும் வரையில் நான் இப்படி உட்கார்ந்திருக்கட்டுமா?" என்று அவர் சோபாவைச் சுட்டிக் காட்டுகிறார். அவரை உட்காரச் சொல்லவில்லை. அவர் எதிரே குமுறும் எரிமலையாக நிற்கிறேன். வார்த்தைகளை வெடிச் சரமென எடுத்து வீசத் துடிக்கிறேன். வார்த்தைகள்



வரவில்லை. வாயில் க்த… நோக்கிக் கையைக் க… கிறேன்.

"உள்ளே அழைத்த… பூரணி" என்று கூறி என்… பரிதாபமாகப் பார்க்கிறார்.

"ஆமாம்; என்னை மதித்… கௌரவமாக நினைப்பவ… மத்தியில் அவமானப்ப… நினைத்து வந்திருக்கும் உ… எண்ணத்தை முறியடிக்… உள்ளே அழைத்தேன். … டையை, பூசலை உள்ளே… வைத்துக் கொள்ள… வெளியே அலசலாமா?" எ… படபடக்கிறேன்.

"பூரணி, இவ்வளவு … டுகள் ஆகியும் உனக்கு … மீதுள்ள கோபம் த… வில்லையா? நான் மாறி… டேன். சத்தியமாக மாறி… டேன் பூரணி. இந்தப் பட்ட… தில் நான் எங்கே தங்குவே… கௌரவமாக, வசதி… வாழும் உனக்குத் துணை… நான் இருக்கக் கூடாதா? … கௌரவம் கலையும்படி… நான் ஒன்றும் செய்… மாட்டேன், சத்தியம் பூரண… அவர் குரல் தழுதழுக்கி… அவர் பணியப் பணிய … ஆத்திரமும், கோபமும் அ… மாகின்றன.

"துணையா? என… துணையில்லாமல் நான் … வும் கௌரவமாகவே இ… றேன். இவ்வளவு க… கடந்து வந்துள்ள இந்த அ… அப்பொழுது எங்கே … விட்டது?" என்று நான் வார்… களில் அக்னித் திரா… தைத் தோய்த்து வீசுகிறே…

பள்ளி இறுதி வகு… படித்துக் கொண்டிரு… போதே எனக்குக் கல்யா… நடந்து விடுகிறது. நான் … பெண். கண் கலங்க… இருக்க வேண்டுமே … நல்ல எண்ணத்தில் … அப்பா தனக்கிருந்த …

ந்தையும் விற்று. கல்
ணத்தை நடத்தி வைத்தார்.
ரம் பொய் சொல்லி ஒரு
ாணத்தை நடத்தி வை என்
கள். ஆனால் ஆயிரம்
ய் சொல்லி என்னை இவர்
ாணம் செய்து கொண்ட
தி பிறகுதான் எனக்குத்
ிந்தது.

ன்னைக் கல்யாணம்
து கொள்ளும்போது இவர்
லை பார்த்த இடத்திலிருந்து
ு விட்டது எத்தனையாவது
னம் என்று எனக்குத்
யாது. என் கல்யாணத்தின்
து வேலையில் இருந்தது
மை. அவர் அலுவலக
ர்கள் மூன்று வேளையும்
சாப்பிட்டது தெரியும்.
குடித்தனம் வைத்தவுடன்
வேலையும் போய்விட்டது.
ல். புரட்டு சொல்வதுடன்
ட்டமும் அவருக்கு உறு
ாயின. வெளியூருக்கு
வேலை என்று போய்
ார். திரும்பிவரப்பத்துப்
ிரண்டு நாள்களாகிவிடும்.
தந்தை எனக்கு அணி
ருந்த நகைகளை அவர்
விட்டார். என்னையும்
விடும் முன்பே துயர வாழ்க்கை கண்டு மனம் தாளாமல் அப்பா என்னை அழைத்துச் சென்று விட்டார். எனக்கு மூன்று முடிச்சிட்ட வரை நம்பி இனிப் பயன் இல்லை என்று நான் தனித்து வாழ வழி தேடிக் கொண்டேன். படித்த படிப்பு துணை நின்றது. ஆசிரியைத் தொழிலுக்குப் படித்தேன். ஆசிரியை வேலை கிடைத்தது. ஆசிரியையாகப் பணி செய்து கொண்டே பி.ஏ., எம்.ஏ., பட்டப்படிப்பில் தேறினேன். இந்த நிலைக்கு உயர்ந்தேன். உணவுக்கும் உடைக்கும் உறைவிடத்திற்கும் எந்தத் தொல்லையும் ஏற்படாத அளவுக்கு வாழ்க்கையை அமைத்துக்கொண்டேன்.

என் தந்தை இருந்தவரை தனிமை வாட்டவில்லை. அவர் கண்மூடிய பிறகு ஒரு வித அச்சம் என்னைச் சூழ ஆரம்பித்தது. கோபமும், சிடு சிடுப்பும் சேரத் தொடங்கின. அமைதியை என் மனம் நாடுவதாகத் தோன்றியது. சிறு சிறு தொல்லையைக்கூட என்னால் தாங்க முடியவில்லை. எரிச்சல் ஏற்பட்டது. தனிமை அமைதி தரும் என்று நம்பினேன். தனிமையைக் கொடுக்கும் எந்த நிகழ்ச்சியும் என்னை அதிர்வடையச் செய்தது.

வீட்டிற்குள்ளே குருவிகள் தடையில்லாமல் பறந்து குறுக்கும் நெடுக்கும் செல்வதைப் பார்த்து எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் குருவியொன்று தந்தையின் படத்தின் இடுக்கில் வைக்கோலையும் ஈர்க்குகளையும் கொண்டு சேர்க்கத் தொடங்கியது. நான் கைந்து குருவிகள் கூச்சலிட்டு அறையில் இங்கு மங்கும் பறக்கத் தொடங்கியபோது என் அமைதி கலைவதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. 'உச் உச்' என்று அவற்றை விரட்டலானேன்.

"அம்மா, குருவியை விரட்டாதீங்க" என்று வேலைக்காரப் பெண் கூறுவாள்.

"படத்தைப் பாழாக்குகிறது. அறையில் குப்பை செத்தையைப் போடுகிறது. அசுத்தப்படுத்துகிறது. ஒன்றுக்கொன்று கீச்சுக் கீச்சென்று கூச்சலிட்டுச் சண்டையிடுகின்றன. தொல்லை தாளவில்லை" என்று அவளிடம் சீறினேன்.



"அவை சண்டை போடவில்லையம்மா..." என்று வேலைக்காரப் பெண் சிரித்துக் கொண்டு சொன்னாள். அவள் சொல்வதைக் கேட்காமல் ஜன்னல் கதவுகளை மூடி வைப்பேன்.

ஒருநாள் நள்ளிரவில் டொக் டொக் என்று சப்தம் கேட்டது.

ஒரு குருவி மட்டும் எப்படியோ உள்ளே நுழைந்து இடம் தேடி அலைந்தது. விளக்கைப் போட்டு அதைத் துரத்தினேன்.

காலையில் பள்ளி மாணவிகளின் பரீட்சைப் பேப்பரைத் திருத்தும் போதும் அந்த ஒற்றைக் குருவி இங்குமங்கும் பறக்கும். ஆத்திரத்துடன் எழுந்து ஓடி ஓடித் துரத்துவேன். முதலில் நான் தானே குருவிகளை வீட்டிற்குள்ளே பறக்க விட்டேன். இப்போது ஏன் வெறுக்கிறேன்!

பள்ளிக்கூடத்தில், வகுப்பில் பாடம் எடுத்துக் கொண்டிருந்தேன். அடிபட்டு விழுந்த பறவையை சித்தார்த்தர் மெல்லக் கையிலெடுத்து அதன் காயத்திற்கு மருந்திடுகிறார். நான் உருக்கமான அந்த நிகழ்ச்சியை விவரிக்கிறேன்.

வகுப்பில் கலகலப்பு. திரும்பிப் பார்க்கிறேன். வகுப்பறையில் ஒரு குருவி மேலே மின்விசிறியில் வந்தமர்கிறது. பிறகு காந்தி படத்தின் மீது அமர்கிறது. அதன் வாயில் சிறு வைக்கோல் துண்டு.

வேடிக்கை பார்க்கும் மாணவிகளை நான் அதட்டுகிறேன். குருவியை உச் உச் என்று விரட்டுகிறேன்.

"டீச்சர், குருவியை விரட்டாதீங்க டீச்சர்" என்று ஒரு மாணவி பரிதாபமாகக் கூறுகிறாள்.


அவளை எரித்து வி...
போல் பார்க்கிறேன்.

"வகுப்பறையை அ...
மாக்கிவிடும்" என்று ...
கொண்டே கையிலுள்ள பு...
தால் விரட்டுகிறேன்.

"குருவி வகுப்ப...
வருவது நல்லது டீச்சர்.
என்று என் பாட்டி சொல்...
அதுவும் ஒற்றைக் குருவி ...
டீச்சர்..." என்கிறாள் மற்...
பெண்.

"ஒற்றைக் குருவி, ஒற்...
குருவி..." நான் முணுமு...
கிறேன். இந்த ஒற்றைக் ...
என் மனதைக் கலக்...
வந்திருக்கிறதா?

இரவெல்லாம் என...
தூக்கம் வரவில்லை. ந...
தான் ஒற்றைக் குருவ...
வாழ்க்கையை நடத்துகிறே...
குருவி கூடு கட்டுகிறது. ந...



கட்டிவிட்டோம். அதைப் ல் நாமும் சர்வ சுதந்திர இருக்க முடியாதா? என் டைய சுதந்திர வாழ்க்கையை. மதியைக் குலைக்க இவர் திருந்து மீண்டும் முளைத் ? உரிமை கொண்டாட துவிட்டார். துணையாம், ண! வாழ்க்கையில் என் பிரிய மாட்டேன் என்று ப்பிடித்தவர் - என்னை ாதரவாக விட்டுப் பிரிந்த எந்த முகங்கொண்டு ண என்று வருகிறார்? சே... .. நான் சம்மதிக்கவே டேன்... என்னுடைய இந்த .வு எனக்கே சமாதான க்கவில்லை என்றும் ன்றுகிறது. தந்தையின் துக்கருகே ஏதோ சப்தம். பொழுது இரண்டு குருவி ன் மெல்லிய கீச் கீச் ஒலி.

நான் மெல்லப் புன்னகைக் றன். நான் மேற்கொண்டது யமா? வீடு தேடி வந்த ரை, இதயத்தைக் கல் க்கிப் போ என்று கூறியது யமா? குருவி கூடு கட்டி தனக்காக மட்டும்தானா? படியெல்லாம் எண்ணிக் ண்டே இருந்தவள் எப் ழுது உறங்கினேனோ ரியவில்லை.

வாயிற் கதவில் அழைப்பு ஒலித்தது. பால்காரர் - ப்பர்காரர் யாராவது இருப் கள் என்று கதவைத் ந்தேன்.

அவர் நின்று கொண்டிருந் . கலைந்திருந்த கேசம். க்கமின்றிச் சோர்வுற்ற கள். சோகம் நிறைந்த ம்.

"என்ன..." என்று கடுமை க் கேட்கிறேன்.

"பூரணி - என்னை மன்னித்து றுக்கொள். தங்குவதற்கு மில்லாமல் குளிரில் வாடி. - க்கமில்லாமல் இரவெல்லாம் த்தேன் பூரணி" - அவர் ல் தழுதழுத்தது. அதற்காக நான் மனதை மாற்றிக் கொள்ள வில்லை.

மறுபடியும் நான் கடுமை யாக நடந்து கொள்ளவே விரும் பினேன். என்ன பேசினோ மென்று எனக்கே தெரியாது.

கதவைப் பளீரென்று சாத் தித் தாளிடுகிறேன். படபடப்பு அடங்க வெகு நேரமாகிறது. உடலெங்கும் வியர்த்து விட்டிருந்தது.

குருவி டக் டக் என்று சப்த மிட்டது. தந்தையின் படத்தின் பின்னே கூடு அமைப்பதற்கு அடையாளமாக வைக்கோல், ஈர்க்குகள், சணல்கயிறு ஆகி யன தொங்கிக் கொண் டிருந்தன.

எனக்கு ஏற்பட்டிருந்த பட படப்பில் நான் ஒரு கோலை எடுத்து படத்தின் பின் குருவி சேர்த்திருந்தவற்றைக் கலைத் தேன். கூட்டை எடுத்து வெளியே வீசுகிறேன். அப்போது இரண்டு குருவிகள் சடசடவெனப் பறந் தோடின. அறையிலுள்ள மின் விசிறியைச் சுழலவிட்டேன். வியர்வை அடங்கியவுடன் குளியலறைக்குச் சென்றேன். திடீரெனப்பட்டென்ற சப்தம்.

அடாடா... மின் விசிறியின் இறக்கையில் அடிபட்டு ஒரு குருவி கீழே விழுந்திருந்தது. எனக்கு அப்பொழுதே தெரி யும், ஒரு நாள் அடிபட்டுச் சாகப் போகிறதென்று. மின் விசிறியின் சுழற்சியை நிறுத்தி னேன். எங்கிருந்தோ மற்றொரு குருவி பறந்து வந்து கீச் கீச்சென்று கூவிக் கூவி வட்டமிட்டது.

அடிபட்ட குருவி துடித்துக் கொண்டிருந்தது. ஆண்டவனே! இதென்ன காலையில் இப்படி சோகச் சம்பவங்கள்!

சம்பவங்களா? ஒரு சம் பவம்தான் நடந்தது. மற் றொன்று?ஓ! முகத்தில் அறைந் தது போல் படீரென்று கதவைச் சாத்தி அவரை விரட்டினேனே, அதை நினைத்து நான் ஏங்குகி றேனோ? ஏன் ஏங்க வேண்டும்?

குருவி சாகவில்லை. இன் னும் கொஞ்ச நேரம் கழித்துச் செத்துவிடலாம். ஒற்றைக் குருவி சுற்றிச் சுற்றிப் பறந்து அங்குமிங்கும் உட்கார்ந்து சோக கீதமிசைத்தது. பின்னர் செய்தித்தாளை அகலமாக விரித்து அதில் அடிபட்ட குருவியைத் துடைப்பத்தால் தள்ளி ஜன்னலுக்கருகே கொண்டு வைத்தேன். உடம்பு ஏனோ நடுங்கியது. மனத்திலும் நடுக்கம். அடிபட்ட குருவியின் மீது பாசமா? அல்லது சோக கீதம் இசைத்து என்னையே வெறித்துப் பார்க்கும் அந்த ஒற்றைது குருவியின் மீது ஏற்பட்ட இரக்கமா?

நாற்காலியில் அப்படியே சாய்ந்தேன். களைப்பாக இருந் தது. இளங்காலைப் போதில் நான் அப்படி நடந்து கொண் டிருக்கக் கூடாது.

மீண்டும் அழைப்பு மணியின் ஓசை. சோர்வுடன் நடந்து சென்று கதவைத் திறந்தேன். தமிழ் இலக்கணம் பயிலும் மாணவிகள் குறித்த நேரத்திற்கு வந்துவிட்டார்கள்.

அவர்கள் உள்ளே நுழையும் போதே; "உங்கள் வீட்டிலுமா குருவிக் கூடு டீச்சர்" என்று குதூகலமாகக்கைதட்டினர்.

"டீச்சர் வீட்டில் நல்ல காரியம் நடக்கப் போகுது" என்று ஒரு சிறுமி குதூகலத் துடன் கை தட்டினாள். நெற்றி யில் அரும்பியிருந்த வியர்வை யைத் துடைத்துக் கொண்டு பேச்சை மாற்ற விரும்பினேன். அன்று முழுவதும் மனது சரியாகயில்லை. பள்ளிக்கு விடுப்பு எழுதிக் கொடுத்தேன்.

மாலை வந்தது. விளக் கேற்ற மனம் வரவில்லை. மன வீணை சோக இசையை மீட்டிக் கொண்டிருந்தது. அப்பாவின் படத்துக்கருகே மீண்டும் டக் டக் ஓசை.

கதவருகே அழைப்பு மணி ஓசை. நான் விளக்கைப் போட்டுவிட்டுக் கதவைத் திறந்தேன். வெள்ளை உடை அணிந்திருந்த ஆஸ்பத்திரி வார்டுப் பையன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

"அம்மா! பஸ் விபத்தில் சிக்கிய பயணி ஒருவரின் பையில் தங்கள் முகவரி இருந்தது. தங்களுக்குத் தெரிந்தவராயிருக்கலாம் என்று சொல்லச் சொல்லி பெரிய டாக்டர் அனுப்பினார்" என்றான்.

மனசு திக்கென்றது. அடி வயிறு ஏனோ நெஞ்சில் வேகமாகச் சென்று அமர்ந்தது போன்ற அழுத்தம். வந்த பையன் காஷுவாலிடி வார்டுக்கு அழைத்துச் செல்கிறான்.

என் மனம் ஏனோ கலங்குகிறது. ஏன் என்று என் உள் மனத்துக்குத் தெரியாதா? நானே என்னை ஏமாற்றிக் கொள்ள முடியுமா? ஒருவேளை ஒருவேளை அவர்... அவராயிருக்குமா?

கட்டிலில் கிடந்தவர் அவரே. வலது காலில் பெரிய கட்டு. ஆபத்தில்லை.

நர்ஸ் அவரை விசாரித்துக் கொண்டிருந்தார்.

"உங்கள் பெயர் என்ன?"

"சந்திரன்".

"அட்ரஸ்?"

பதில் ஏதும் உடனே வரவில்லை.

"எனக்கு அட்ரஸ் கிடையாது சிஸ்டர். நான் ஓர் ஒற்றைக் குருவி" என்று அவர் சொல் தொடங்கியிருக்கலாம். ந முந்திக் கொண்டேன். "சி எழுதிக் கொள்ளுங்க எம்.ஆர். சந்திரன், ஹஸ்ப ஆப் பூரணி, தலை ஆசிரியை சங்கரி அம்ம உயர்நிலைப் பள்ளி" என்றே நர்ஸும் என்னை வியப்பு பார்க்கிறாள். அவர் விழிக தனி ஒளி.

அவரது கட்டுப் போட்ட க அருகே குனிகிறேன். கலங் கண்களிலிருந்து ஒரு சொ கண்ணீர் அந்த பாண்டேஜ் விழுகிறது.

புதிய பாண்டேஜ் இருவ கும் ஏற்பட்டுவிட்டது. இ அவர் ஒற்றைக் குருவி அல்ல

ஏன் நான்கூடத் தான்.

ஆக்கம் தேடும் அறிவியல்

ஊக்கம் கொண்டால் உலகம் புதியது
உலகில் தோன்றும் உயிர்கள் புதியது
பார்க்கும் ஒளியில் படுவது புதியது
பார்த்தால் இங்கே யாவும் புதியது
வேர்க்க நினைத்தால் விசிறி பழையது
வீசி எழுந்தால் வியர்வை பழையது
தூக்க நினைத்தால் இமயம் சிறியது
தூங்க நினைத்தால் உயிரே சுமையது
ஆக்கும் உணவோ உடலுக் குதவிட
ஆக்கிட வேணும், இல்லை விஷமது
"ஆக்கம் தேடும் அறிவியல்" கண்டால்
அடடா மனிதன் வாழ்க்கை இனியது
இல்லை? இல்லை! இல்லை...



துளசிதாசன்



17.11.91 இரவு "கவிதை உறவு - அமுதசுரபி" இணைந்து வழங்கிய கவிதை இரவில் முதல்பரிசு பெற்ற கவிதை.

ாத்திருக்கிறேன்..!

பாலம். இரமணி

தென்றலின் வீச்சில்
மனம் லயிக்கும்
கந்த வாழ்க்கையை
ரவேற்க நான்
காத்திருக்கிறேன்...!

ஒரு மயிலின்
தோகையைச் சுமக்க
ான் இதயத்தைத்
லார்படுத்தி நான்
காத்திருக்கிறேன்..!

வானவில்லின்
வர்ணங்களை மாற்ற
என் கைகளில்
ூரிகைகளுடன் நான்
காத்திருக்கிறேன்..!

இமயமலையில்
இல்லாது போன
மூலிகைகளுடன் நான்
காத்திருக்கிறேன்..!

நெரிசல் தெருவில்
நடந்து போகிற
நல்லவனுக்காய் நான்
ாத்திருக்கிறேன்..!

விளம்பரம் விரும்பாத
விளம்பரம் ஆகிவிட்ட
புதுவியாபாரத்திற்காய் நான்
காத்திருக்கிறேன்..!

எளிதில் என்பெயர்
எல்லார் நெஞ்சிலும்
பதியம்போடவே நான்
காத்திருக்கிறேன்..!

சிதறும் சிந்தனை
புயல் காற்றிலும்
பூபாளமிசைக்க நான்
காத்திருக்கிறேன்..!

காலம் எந்தன்
கட்டளை ஏற்கும்
நாளுக்காய் நானும்
காத்திருக்கிறேன்..!



உங்கள் ராசிபலன்

பாலஜோசியர்

	சந்		கேது
	தை மாத கிரக நிலை		
சூரி சனி			குரு(வ)
செவ் புத ரா	சுக்		

1992 ஜனவரி 15 ஆம் தேதி முதல்
பிப்ரவரி 12 ஆம் தேதி வரை :

15-1-1992 தை மாதம் 1 ஆம் தேதி
காலை 6.00 மணிப்படி கிரகபாதசாரம் :

சூரியன் - உத்திராடம் 2, சந்திரன் - பரணி 4, செவ்வாய் - மூலம் 4, புதன் - பூராடம் 1, குரு - பூரம் 3 (வக்ர), சுக்கிரன் - கேட்டை 3, சனி - திருவோணம் 2, ராகு - பூராடம் 1, கேது - திருவாதிரை 3.

மேஷம் : *(அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)*

குரு 5 இல் அமர்ந்து உங்கள் ஜன்ம ராசியைப் பார்ப்பதால் மதிப்பும், அந்தஸ்தும், கௌரவமும் உயர்வடையப் பெறுவீர்கள். தேக ஆரோக்கியம் சீர்பெறும். நற்காரியங்களில் ஈடுபாடு கூடும். பண வரவு திருப்தி தரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபட்டு ஆதாயம் பெற முடியும். மக்கட்பேறு அல்லது மக்களால் பாக்கியம் பெறுவீர்கள். தொலைதூரப் பயணத்தால் நலம் உண்டாகும். அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைக்கப்பெறுவார்கள். 3 இல் உள்ள கேதுவும், 10 இல் உள்ள சூரியனும் உங்கள் மனதில் துணிவை உண்டாக்குவார்கள். எதிரிகளை வெற்றி கொள்வீர்கள். நிர்வாகத்துறையினருக்கு வரவேற்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகளும், அரசுப்பணி யாளர்களும் தங்கள் நோக்கம் ஈடேறப் பெறு வார்கள்.

கணவன், மனைவியிடையே களிப்புறவு நீடித் திருக்கும். புதிய ஆடை, அணிமணிகளின் சேர்க்கை நிகழும். நிலபுலங்களால் அளவோடு ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். 25 ஆம் தேதி முதல் வியா பாரிகளுக்கும், நவீன விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந் தவர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், மாணவர் களுக்கும் செழிப்பான பாதை பலப்படும். பிப்ரவரி மாதம் 9 ஆம் தேதி முதல் தொழில்துறையில் விசேடமான வளர்ச்சி தெரியவரும். ராசிநாதன் செவ்வாயின் பலம் ஓங்குவதால் வேலையில்லாத வர்கள் தகுந்ததொரு வேலை வாய்ப்பைப் பெறு வார்கள். வேலையில் இருப்பவர்களுக்கு இடர்ப் பாடுகள் விலகி, முன்னேற்றமான சூழ்நிலை உரு வாகும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான திருப்பத்தைக் காண்பீர்கள். பரணி நட்சத்திரக் காரர்களுக்கு ஓரளவே வளர்ச்சி ஏற்படும். ஜனவரி 17,18,19,22,24,26,31 பிப்ரவரி 3,5,8,9,10 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. சிம்ம, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,7 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கிரக மாறுதல்

20-1-1992 முதல் தனுசு - சுக்கிரன்

25-1-1992 முதல் மகரம் - புதன்

9-2-1992 முதல் மகரம் - செவ்வாய்

12-2-1992 முதல் கும்பம் - புதன்

ரிஷபம் : *(கிருத்திகை 2 ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2 ஆம் பாதம் முடிய)*

விசேடமான நற்பலன்களை நீங்கள் இந்த நேரத்தில் பெறமுடியாவண்ணம் குறுக்கீடுகளும் தடைகளும் ஏற்படும். நண்பர்களே விரோதி களாகக் கூடுமாதலால் யாரிடத்திலும் வெளிப்படை யாகப் பழகாமல் இருப்பது அவசியம். நூதன நட்பு வேண்டாம். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. குடும்பத்தாரிடமும், வெளிவட்டாரத்திலும் உங்கள் மதிப்பைக் காத்துக் கொள்ள நீங்கள் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது மிகவும் அவசியம். நல்லவர்களின் நட்பை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம் நலம்பெற வாய்ப்புண்டாகும். 8 இல் செவ்வாய் ராகுவுடன் கூடியிருப்பதால் விபத்துக்கு ஆட்பட நேரலாம். எச்சரிக்கை தேவை. கணவன், மனைவியிடையே சலசலப்பு உண்டாகும். மனத்தில் நிம்மதி இராது. வீண்வழக்கு, வியாஜ்ஜி யங்களில் ஈடுபடவேண்டாம். கூட்டுத் தொழில்

[விடை 65ம் பக்கம்]

எல்லாம் தமிழகம் பற்றி விநாடி வினா

அ. ஆளுநர்கள் : (ஒரு பாதியை நாங்கள் சொல்லித் தருகிறோம்!)

1. பஞ்சாபிய சர்தார்ஜிகள் இருவர் கவர்னராக இருந்தனர்.

ஒருவர் உஜ்ஜல் சிங். மற்றவர் யார்?

2. நாம் கேரளத்துக்கு அனுப்பிய கவர்னர்கள் இருவர்.

ஒருவர் பா. ராமச்சந்திரன். மற்றவர் யார்?

3. கேரளத்திலிருந்து நமக்கு ஆளுநர் இருவர் வந்தனர். இருவருமே கிறிஸ்தவ சமூகத்தவர். ஒருவர் பி.சி. அலெக்ஸாண்டர். மற்றவர் எவர்?

4. நமக்கு இரண்டு மகாராஜாக்கள் கவர்னராக இருந்துள்ளனர்.

ஒருவர் பவநகர் மகாராஜா. இன்னொரு மகாராஜா யாரோ?

5. குஜராத்தி பேசுபவர்கள் இருவர் நமக்கு ஆளுநராக வந்தனர்.

ஒருவர் பிரபுதாஸ் பட்வாரி. இன்னொருவர் எவர்?

ஆ. தமிழக முதலமைச்சர்கள் என்றால், திரைப்படத் தொடர்பு சற்றாவது இருக்கும். இந்த உண்மையை நிரூபிக்க 6 பெயர்கள் கூறவேண்டும்.

(ஆறாவது பெயரில்தான் தடுமாறுவீர்கள்!)

இ. இந்தத் திருமடங்கள் – ஆதீனங்கள் எது எந்த ஊரில் உள்ளன?

1. திருவண்ணாமலை ஆதீனம். 2. உபநிஷத் பிரம்மேந்திரர் மடம். 3. ஞானியார் மடம். 4. காசி மடம். 5. தொண்டை மண்டல ஆதீனம். 6. ஆண்டவன் ஆசிரமம்.

ஈ. இராமகிருஷ்ண மடத்துத் துறவிகளின் பட்டம் எப்படி அமைந்திருக்கும்?

இந்திர சரஸ்வதி, தீர்த்தர், ஆனந்தர், பாரதி, நம்பிரான்.

உ. இந்தப் பெயர் உள்ளவர் எந்த ஊர்ப் பக்கமாக இருக்கலாம்?

1. நாடிமுத்து. 2. வாஞ்சிநாதன். 3. வீழிநாதன். 4. சாரநாதன். 5. அட்சயம். 6. காயாரோகணம். 7. மெய்யம்மை. 8. பஞ்சாபகேசன். 9. மங்களம். 10. ஆமருவி

ஊ. ஒவ்வோர் ஊருக்கும் சில விஷயங்களில் பெயர் உண்டு. கீழே தந்துள்ள ஒவ்வொன்றும் குறிப்பிடும் ஊர் எது?

1. ஒட்டு மாம்பழம், கைத்தறி வேட்டி, எவர் சில்வர் தகடு தயாரிப்பு.

2. துணி நெசவாலை, இடையில் 'பம்பு செட்', தற்போது 'மிக்சர் – க்ரைண்டர்' தயாரிப்பு.

3. கன ரக நீர், முத்து, உர உற்பத்தி.

எ. இந்த ஊர்களின் சிறப்பு ஒன்றைக் கூறுக. பொதுவாக இருக்க வேண்டும்.

1. சுவாமி மலை, மாமலலபுரம், திருமுருகன்பூண்டி.

2. ஆலங்குளம், தாழையூத்து, மதுக்கரை.

3. மரக்காணம், வேதாரண்யம், தூத்துக்குடி.

4. பன்னாரி, சமயபுரம், சிறுவாச்சூர்

5. புழல், வீராணம், சாத்தனூர்.

செய்வோர் பங்குதாரர்களிடம் விழிப்புடன் பழகுவது அவசியமாகும். இல்லையென்றால் ஏமாற்றத்திற்கு ஆட்படவேண்டிவரும்.

நிலம், மனை, வீடு, வாகனம் சம்பந்தப்பட்ட இனங்கள் அளவோடு நலம் தரும். மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்தினால் சீரான வளர்ச்சி தடைப்படாமல் இருக்கும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் ஓரளவு முன்னேற்றம் காண்பார்கள். 20 ஆம் தேதி முதல் கலைத்துறையினருக்கு வெளிச்சம் தெரியவரும். 25 ஆம் தேதியிலிருந்து எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றத்திற்கான மார்க்கத்தைக் காண்பார்கள். பிப்ரவரி 9 ஆம் தேதி முதல் தந்தை நலனில் அக்கறை தேவைப்படும். வெளிநாட்டுத் தொடர்பால் நலம்பெறத் தடை உண்டாகும். பொதுவாக கோசாரப்படி கிரகநிலை திருப்திகரமாக இல்லாததால் தெய்வவழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் மனஅமைதி கிடைக்கப் பெற முடியும். உங்கள் ஜனனகால ஜாதகப்படி தற்சமயம் யோகபலம் உள்ள தசை, புத்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்கள் குறைவடைய மார்க்கமுண்டு. ஜனவரி 17,18,19,22,24,26,29 பிப்ரவரி 3,5,8,9,10 தேதிகள் ஓரளவு சிறப்பானவை. வடதிசை அனுகூலமானது. மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,8 எண்கள் அளவோடு நலம் தரும்.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3 ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய)

கிரகநிலை அனுகூலமாக இல்லாததால் உங்கள் மனத்தில் குழப்பம் குடிகொள்ளும். எடுத்த காரியத்தை நிறைவேற்ற முடியாமல் தடைகள் ஏற்படும். பண நடமாட்டம் சீராக இராது. பொருட் செலவைச் சமாளிக்கக் கடன்படவும் நேரலாம். அலைச்சல், அதிக உழைப்பு, உடல் சோர்வு ஆகியவை உண்டாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல்

ஏ. இவர்கள் யார்? மூவரும் ஒரே விளக்கத்தில் வர வேண்டும்.

1. எஸ்.ஏ. ரஹீம், ஷாபி அகம்மத், அல்லா பிச்சை.

2. ராஜரத்தினம், வேதமூர்த்தி, அருணாசலம் (ஊர்ப் பெயரைச் சொல்லவில்லை. சொன்னால் உடன் விடை தருவீர்கள்)

3. மா. அனந்த நாராயணன், பி.வி. ராஜமன்னார், எம்.எம். இஸ்மாயில்.

4. காசா சுப்பாராவ், என். ரகுநாதய்யர், போத்தன் ஜோசப்.

5. பிரகாசம், 'ஓமாந்தூர்' ரெட்டியார், குமாரசாமி ராஜா

ஓ. சர்வோதயத் தொண்டர்கள். அவரவர் துறையைப் பொருத்துங்கள்.

1. ஹரிஜனத் தொண்டு – எஸ்.ஆர். சுப்பிரமண்யம்.

2. குஷ்டரோக நிவாரணம் – சி.ஏ. அய்யாமுத்து.

3. கிராமக் கைத்தொழில் – அவிநாசிலிங்கம்.

4. ஆதாரக் கல்வி – எல்.என். கோபாலசுவாமி.

5. கதர் இயக்கம் – டி.என். ஜகதீசன்.

6. பூமி தானம் – ஜே.சி. குமரப்பா.

ஓ. எந்தத் துறை- எந்த சாஸ்திரி? பொருத்தினால் போதும்.

1. வி.எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி – நீதி

2. தேதியூர் சுப்ரமண்ய சாஸ்திரி – வரலாறு

3. மாயூரம் சிவராமகிருஷ்ண சாஸ்திரி – கோட்டுவாத்தியம்

4. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி – புராண பிரவசனம்

5. பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி – சாஸ்திர ஞானம்

6. எம். பதஞ்சலி சாஸ்திரி – ஆங்கில மொழியில் நாவன்மை

ஔ. இவர்கள் நடத்திய பத்திரிகை தெரியுமா?

1. ஏ.கே. செட்டியார் 2. வை. கோவிந்தன் 3. வசந்தன் 4. நா. பார்த்தசாரதி 5. விந்தன் 6. த. நா. குமாரஸ்வாமி 7. அ. சீனிவாசராகவன் 8. பெரியசாமித் தூரன் ,9. கே. ஸ்ரீனிவாசன் ('ஸ்டாலின்'மீசை) 10. ஜி.ஆர். தாமோதரன் 11. இராம. சடகோபன் 12. ரா. நாராயணய்யங்கார் 13. திரிலோக சீதாராம் 14. முருகு சுப்பிரமணியன் 15. கிருஷ்ணா ஸ்ரீனிவாஸ் (கே.ஸ்ரீ)

ஃ. யார் பாடல்?

1. நட்ட கல்லும் பேசுமோ-நாதன் உள் இருக்கையில்?

2. காதற்ற ஊசியும் வராது காணும் கடைவழிக்கே!

3. எட்டே கால் இலட்சணமே; எமன் ஏறும் பரியே!

4. முன்னே கடிவாளம் மூன்று பேர் தொட்டிழுக்க... விகடராமன் குதிரை...காதவழி

5. வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு

6. கந்துக மதக் கரியை வசமா நடத்தலாம்

7. இன்பமே எந்நாளும் துன்பமில்லை

8. கற்பார் இராமபிரானை யல்லால் மற்றும் கற்பரோ?

9. வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்

10. பக்தியுடையார் காரியத்தில் பதறார்.

(ஔவை முதல் பாரதியார் வரை உள்ளனர் இங்கே!)

— களப்பாள் நம்பி

வாங்கல் இனங்களில் ஈடுபடுவதைத் தவிர்ப்பது நல்லது. பிறருக்காக உதவப்போய் நீங்கள் வம்பில் மாட்டிக்கொள்வீர்கள் எனத் தெரிவதால் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும். குடும்ப நலனில் அக்கறை தேவைப்படும். உடன்பிறந்தவர்களால் சிறுசிறு பிரச்னைகள் ஏற்படும். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அனுகூலத்தை எதிர்பார்க்க இயலாது. நிலபுலங்கள் சம்பந்தப்பட்ட இனங்களில் ஈடுபட்டுப் பயன்பெற இயலாமல் போகும். மக்கள் நலனில் அக்கறை செலுத்த வேண்டிவரும்.

மறதிக்கு ஆட்பட்டு மற்றையோரின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். எதிர்ப்புகளைச் சமாளிப்பது கடினமாக இருக்கும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் எச்சரிக்கையுடன் பழகுவது அவசியம். அரசாங்கத்தாராலும், பெற்றோராலும் எதிர்பார்த்த உதவிகள் தடைப்படும். அரசியல் வாதிகள், உத்தியோகஸ்தர்கள், வியாபாரிகள் ஆகியோர் விழிப்புடன் காரியமாற்றுவது அவசியம். நூதன முயற்சிகளில் பிரவேசிக்கலாகாது. மாமூலாகச் செய்துவரும் காரியங்களில்கூட அதிகம் அக்கறை தேவைப்படும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள், பெண்கள், ஆடை அணிமணிகள், அலங்காரப் பொருட்கள் விற்பனையாளர்கள் ஆகியோர் சங்கடங்களுக்கு ஆட்படவேண்டிவரும். பெரியோர்களின் அபவாதத்திற்கு ஆட்படாமல் இருப்பது நல்லது. உங்கள் ஜனனகால ஜாதகப்படி தற்சமயம் யோகபலம் உள்ள தசை, புத்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்கள் குறைவடையும். தெய்வப்பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதன்மூலம் மனநிம்மதி பெறமுடியும். பிரவரி 9 ஆம் தேதி முதல் செவ்வாய் 8 ஆமிடம் புகுவதால் விபத்துக்கு ஆட்பட வேண்டிவரும் என்பதால் விழிப்புடன் இருப்பது நல்லது. ஜனவரி 17,18,19,22,24,26,29,31 பிப்ரவரி 5,8,9,10 தேதிகள் ஓரளவு சிறப்பானவை. வடதிசை நலம் தரும். தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,5 எண்கள் ஓரளவு அனுகூலமானவை.

கடகம் : *(புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)*

குரு, செவ்வாய் ஆகியோருடைய பலம் காரணமாக உங்கள் அறிவாற்றலும், செயல்திறமையும் பிரகாசிக்கும். எடுத்த காரியத்தில் வெற்றி வாய்ப்புகளைப் பெறுவீர்கள். நல்லோர் நேசத்தால் நலம் உண்டாகும். எதிரிகள் அகலுவார்கள். பணவரு வாய் கூடும். எதிர்பாராத திடீர்ப் பொருள்வரவுக்கும் இடமுண்டு. குடும்பத்தில் திருமணம் போன்ற நற்காரியங்கள் நிகழும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். உத்தியோகஸ்தர்களுக்கும், தொழிலாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும் செழிப்பான பாதை புலப்படும். நூதன நண்பர்கள் உதவ முன்வருவார்கள். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். கடன் உபத்திரவம் குறையும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பத்தைக் காண்பீர்கள். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். விளையாட்டுப் பந்தயங்களில் வெற்றி கிட்டும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் நலம் உண்டாகும்.

உடன்பிறந்தவர்கள் உதவிபுரிவார்கள். கணவன், மனைவியரிடையே சிறுசிறு பிரச்னைகள் எழுமானாலும் அவற்றைச் சமாளித்துவிடுவீர்கள். செய்து வரும் தொழிலில் முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். 20 ஆம் தேதி முதல் கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் இருப்பது அவசியம். பெண்களுக்கு ஓரிரு சோதனைகள் ஏற்படும். ரியல் எஸ்டேட் இனங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிகம் அனுகூலத்தை எதிர்பார்க்க இயலாது. 25 ஆம் தேதி முதல் நவீன விஞ்ஞானத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள். நிறுவன, நிர்வாகத் துறையினருக்கு வளர்ச்சி ஏற்படும். பிப்ரவரி 9 ஆம் தேதி முதல் கூட்டுத் தொழிலில் அபிவிருத்தி உண்டாகும். அரசு விவகாரங்களில் நல்ல திருப்பத்தைக் காண்பீர்கள். ஆற்றல் மேலோங்கும். பூச நட்சத்திரக்காரர்கள் நலம் கூடப் பெறுவார்கள். ஜனவரி 17,18,19,22,24,26,29,31 பிப்ரவரி 3,8,9,10 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தெற்குத் திசைகள் அனுகூலமானவை. சிம்ம, மேஷ ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,4,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம் முடிய)*

6,11 ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார்கள். எதிரிகளை முறியடித்து வெற்றிப்படிகளில் முன்னேறுவீர்கள். எடுத்த காரியம் நிறைவேறும். தொழிலாளர்களும், தொழிலதிபர்களும், நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்களும் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். கலைத்துறை ஆக்கம் தரும். நண்பர்கள் உதவ முன்வருவார்கள். கணவன், மனைவியிடையே களிப்புறவு கூடும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் அதிகம் ஆதாயம் பெறுவார்கள். நிலபுலங்களால் அனுகூலத்திற்கு இடமுண்டு. பொதுநலப் பணியாளர்கள் தங்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரப் பெறுவார்கள். மக்கள்நலம் சீர்பெறும். பெற்றோரால் நலம் உண்டாகும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள். செய்தொழிலில் சீரான வளர்ச்சி இருந்துவரும். 25 ஆம் தேதி முதல் எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்களைச் சேர்ந்தவர்கள் வெளிச்சம் காண்பார்கள்.

கணிதம், விஞ்ஞானம், வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் பெறுவார்கள். பிப்ரவரி 2 ஆம் தேதி முதல் செவ்வாய் பலம் கூடுவதால் நூதனமான பொருட்களின் சேர்க்கை நிகழும். இயந்திரப்பணியாளர்களுக்கும், இஞ்சினீயர்களுக்கும் செழிப்பான பாதை புலப்படும். பெற்றோரால் நலம் கூடும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துகளால் அனுகூலம் உண்டாகும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். தெய்வப் பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபாடு உண்டாகும். மனதிற்கினிய சம்பவங்கள் வாழ்க்கையில் இடம் பெறும். ஜன்ம குரு என்பதால் அலைச்சலைத் தவிர்க்க இயலாது. மனச்சலனம் அவ்வப்போது ஏற்படும். பொருளாதார நிலையில் விசேடமான வளர்ச்சியைப் பெற இயலாது. என்றாலும் செலவுகளைச் சமாளித்துவருவீர்கள். பூர நட்சத்திரக்காரர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. ஜனவரி 17,18,19,22,24,26,29,31 பிப்ரவரி 3,5,10 தேதிகள் சிறப்பானவை. மேற்குத் திசை அனுகூலமானது. தனுசு, மகர, மிதுன ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6,7,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி : *(உத்திரம் 2 ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2 ஆம் பாதம் முடிய)*

புதன் 4–லும், சுக்கிரன் 3–லும் சஞ்சரிப்பதால் உங்கள் தேக ஆரோக்கியம், கௌரவம், அந்தஸ்து யாவும் சீராக இருந்துவரும். வியாபாரிகள் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள். கணிதம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சார்ந்தவர்கள் உற்சாகம் கூடப் பெறுவார்கள். உடன்பிறந்தவர்கள் அளவோடு நலம் புரிவார்கள். மாணவர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். அலைச்சல் சற்று அதிகரிக்கவே செய்யும். பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. 5 இல் சூரியனும், சனியும் கூடியிருப்பதால் மக்களால் தொல்லைகள் சூழும். மக்களால் செலவுகளுக்கும் இடமுண்டு. திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கு வாய்ப்புக் குறைவு. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் – வாங்கல் இனங்களில் ஈடுபடவேண்டாம்.

மறதிக்கு இடமுண்டு என்பதால் எக்காரியத்தையும் திட்டமிட்டு அதன்பிறகு செயலில் இறங்குவது நல்லது. 20 ஆம் தேதி முதல் உற்றார், உறவினர்கள் சேர்க்கையால் நலம் பெறச் சந்தர்ப்பம் கூடிவரும். நிலபுலங்களால் அளவோடு ஆதாயம்

பெறுவீர்கள். 25 ஆம் தேதி முதல் நிறுவன, நிர்வாகத்துறையினருக்கு வெளிச்சம் தெரியவரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆக்கம் தரும். நற்பணிகளுக்காகப் பொருட்செலவு செய்ய வேண்டிவரும். பிப்ரவரி 9 ஆம் தேதி முதல் மனதில் குழப்பம் குடிகொள்ளும். உடன் பிறந்தவர்கள் நலனில் அக்கறை தேவைப்படும். வயிற்று உபாதைகள் ஏற்படவும் காரணமுண்டு. உடல் நலனில் அக்கறை செலுத்துவது நல்லது. உத்திர நட்சத்திரக்காரர்கள் நலம் கூடப் பெறு வார்கள். தெய்வப்பணிகளில் ஈடுபடுபவர்கள் மன அமைதி பெறுவார்கள். ஜனவரி 17,18,19,22,24, 26,29,31 பிப்ரவரி 3,5,8 தேதிகள் சிறப்பானவை. வடதிசை அனுகூலமானது. தனுசு, மிதுன ராசிக் காரர்கள் உதவுவார்கள். 5,6,7 எண்கள் அனுகூல மானவை.

துலாம் : *(சித்திரை 3ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3ஆம் பாதம் முடிய)*

குரு, செவ்வாய் பலம் காரணமாக உங்கள் அறி வாற்றல் பிரகாசிக்கும். துணிவோடும், தன்னம் பிக்கையோடும் செயற்கரிய பணிகளில் ஈடுபட்டு அதில் வெற்றியும் பெறுவீர்கள். எதிர்ப்புகள் என் பவை அகலும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பம் தெரியவரும். பணநடமாட்டம் கூடும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் உண் டாகும். கவர்ச்சி அம்சம் காரணமாகவும், இனிமை யாகப் பேசும் திறன் காரணமாகவும் முன்னணிக்கு உயருவீர்கள். கலைத் துறைகளைச் சேர்ந்தவர் களுக்கு வெற்றி வாய்ப்புகள் கூடும். புதிய ஒப்பந் தங்கள் கைவரப் பெறுவீர்கள். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்த வர்கள் சாதனை படைப்பார்கள். நூதன நட்பால் நலம் உண்டாகும். பயணம் பயன்படும். உடன் பிறந்தவர்கள் உதவுவார்கள். பெற்றோரால் மக்க ளுக்கும், மக்களால் பெற்றோருக்கும் நலம் ஏற்படும்.

கணவன், மனைவியிடையே களிப்புறவு கூடும். பொருள் நடமாட்டமுள்ள வங்கிகள், சேமிப்பு நிறு வனங்கள் ஆகியவற்றில் பணியாற்றுபவர்கள் தங்கள் எண்ணம் ஈடேறப் பெறுவார்கள். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வு பெறுவார்கள். முக்கியப் பொறுப்புகளைப் பெறவும் சந்தர்ப்பம் கனிந்துவரும். ஆசிரியர்களும், பேராசிரியர்களும் தங்கள் நிலை உயரப் பெறு வார்கள். 4இல் சூரியனும், சனியும் கூடியிருப்பதால் அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கவே செய்யும். அதனால் உடல் அசதியும் ஏற்படும். 25ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்கும், விஞ்ஞானிகளுக்கும், எழுத்தாளர்களுக்கும் பிரகாசமான சூழ்நிலை உரு வாகும். மாணவர்கள் சுபிட்சம் காண்பார்கள். நில புலங்களால் அளவோடு ஆதாயம் கிடைக்கப் பெறு வீர்கள். 9ஆம் தேதி முதல் பயணத்தின்போதும், இயந்திரங்களில் பணியாற்றும்போதும் விழிப்புத் தேவை. தாய் நலனில் அக்கறை செலுத்தப்பட வேண்டிய அவசியம் உண்டு. சுவாதி நட்சத்திரக் காரர்கள் நலம் கூடப் பெறுவார்கள். ஜனவரி 18,19, 22,24,26,29,31 பிப்ரவரி 3,5,8,9,10 தேதிகள் சிறப் பானவை. வடகிழக்கு, தென்கிழக்குத் திசைகள் நலம் தரும். தனுசு, சிம்ம ராசிக்காரர்கள் உதவு வார்கள். 3,4,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

விருச்சிகம் : *(விசாகம் 4ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)*

சூரியன், சனி ஆகியோரது பலம் காரணமாக உங்கள் சுயபலம் மேலோங்கும். எவ்வளவுக் கெவ்வளவு பாடுபடுவீர்களோ அவ்வளவுக்கவ்வளவு பயன் பெறுவீர்கள். அரசுப்பணியாளர்களுக்கும், சமூக நலப்பணியாளர்களுக்கும் செல்வாக்கு உய ரும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பம் உண்டாகும். நீண்ட காலமாகத் திட்டமிட்டிருந்த ஒரு காரியம் நிறைவேறும். முன்னேற்றத்திற்கான தகவல் ஒன்று கிடைக்கப் பெறுவீர்கள். பணவருவாய் திருப்தி தரும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழ அடி கோலப்படும். நண்பர்கள் உதவ முன்வருவார்கள். உற்றார், உறவினர் சேர்க்கை மனமகிழ்ச்சியைத் தரும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப் புப் பெறுவார்கள். கணவன், மனைவியிடையே களிப்புறவு கூடும். கூட்டுத் தொழிலில் அபிவிருத் தியைக் காண்பீர்கள்.

வியாபாரிகள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். தொழிலாளர் களுக்கும், விவசாயிகளுக்கும் முன்னேற்றமான சூழ் நிலை உருவாகும். அரசியல்வாதிகளும் நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்களும் தங்கள் ஸ்தானம் உயரப் பெறுவார்கள். 25ஆம் தேதி முதல் வியா பாரிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. பிப்ரவரி 9ஆம் தேதி முதல் ராசிநாதன் செவ்வாய் பலம் பெறுவதால் உங்கள் மனத்தில் துணிவும், தன்னம் பிக்கையும் மேலோங்கும். எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். பொறியியல், சட்டம், இராணு வம், காவல் போன்ற துறைகளைச் சேர்ந்தவர் களுக்கு விசேடமான வளர்ச்சி ஏற்படும். போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிட்டும். நூதன பொருள் களின் சேர்க்கை நிகழும். அனுஷ நட்சத்திரக் காரர்கள் நற்பலன்கள் கூடப் பெறுவார்கள். ஜனவரி 15,21,22,24,26,29,31 பிப்ரவரி 3,5,8,9,10 தேதிகள் சிறப் பானவை. கீழ்த்திசை அனுகூலமானது. தனுசு, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,6,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம் முடிய)*

குருபலம் சிறப்பாக இருப்பதால் உங்கள் அறிவாற்றல் மேலோங்கும். வாக்குவன்மையால் காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். பணவருவாய் திருப்தி தரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் அதிர்ஷ்ட வாய்ப்பைத் தரும். பெரியவர்களும், தனவந்தர்களும் உங்களுக்கு உதவ முன்வருவார்கள். துணிவும், தன்னம்பிக்கையும் கொண்டு நூதன காரியங்களில் பிரவேசிக்கலாம். அதில் வெற்றி பெறவும் சந்தர்ப்பம் கூடிவரும். வேலையில்லாமலிருப்பவர்கள் முயன்றால் வேலை வாய்ப்பைப் பெறமுடியும். ஏற்கெனவே வேலை யில் இருப்பவர்கள் பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவற்றைப் பெறுவார்கள். மாணவர்கள் வளர்ச்சி பெறுவார்கள். தொழிலாளர்

ளுக்கும், விவசாயிகளுக்கும் உழைப்புக்குரிய பயன் கிடைத்து வரும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத் துறைகளில் உள்ளவர்கள் உற்சாகம் காண்பார்கள்.

குடும்பத்தில் சலனங்கள் விலகி, அமைதியான சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். நிலம், மனை, வீடு, வாகனம் போன்ற ஸ்திரச்சொத்துகளால் அனுகூலம் பெறுவீர்கள். நிறுவன நிர்வாகத்துறைகளில் உள்ளவர்கள் தங்கள் தகுதிக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். மக்களால் பெற்றோரும், பெற்றோரால் மக்களும் நலம் பெறுவார்கள். 20ஆம் தேதி முதல் தோற்றப்பொலிவு கூடும். கணவன், மனைவியிடையே நல்லுறவு நீடிக்கும். 25ஆம் தேதி முதல் கூட்டுத் தொழில் பிரகாசிக்கும். பிப்ரவரி 9ஆம் தேதி முதல் பணவருவாய் கூடும். குடும்ப நலனுக்காகச் செலவு செய்யவும் நேரலாம். 2இல் சூரியன் சனி இருப்பதாலும் செவ்வாய் 2ஆமிடம் வருவதாலும் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது அவசியம். இல்லையென்றால் சில அவதிகளுக்கு ஆட்பட நேரும். என்றாலும் மோசமான நிலை என்று ஏதும் உண்டாகிவிடாது. பூராட நட்சத்திரக்காரர்கள் விழிப்புடன் இருப்பது அவசியம். ஜனவரி 17,18,22,24,26,29,31 பிப்ரவரி 3,5,8,9,10 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்குத் திசை அனுகூலமானது. சிம்ம ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3ஆம் எண் அதிர்ஷ்டமானது.

மகரம் : *(உத்திராடம் 2ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2ஆம் பாதம் முடிய)*

முக்கியமான கிரகங்களின் சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் நீங்கள் வாழ்க்கைப்பாதையில் முன்னேற்றம் காண அரும்பாடுபடவேண்டிவரும். சுலபமாக எக்காரியத்தையும் நிறைவேற்றிவிட இயலாது. தடைகளும், குறுக்கீடுகளும் அதிகரிக்கும். பொருள் வரவைவிட ஒரளவு செலவினம் கூடுமெனத் தெரிவதால் சிக்கனத்தைக் கையாள்வது நல்லது. பொருள் இழப்புக்கும் காரணமுண்டு. எச்சரிக்கை தேவை. வீண் வழக்கு, வியாஜ்ஜியங்களில் பிரவேசிக்கலாகாது. உடல் நலம் கவனிக்கப்பட வேண்டிவரும். சுக சௌக்கியங்கள் குறையும். மனத்தில் சலனம் உண்டாகும். பெரியவர்களின் உதவியைப் பெறத் தடையேற்படும். புதிய முயற்சிகளில் பிரவேசிக்கலாகாது. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் – வாங்கல் இனங்களால் ஆதாயம் பெற இயலாது. அரசியல்வாதிகளும், அரசுப்பணியாளர்களும் விழிப்புடன் காரியமாற்றுவது அவசியம்.

இங்குமங்கும் அலைந்து திரியவேண்டிவரும். உத்தியோகஸ்தர்களும், உழைப்பாளர்களும் விரும்பத்தகாத இடமாற்றத்திற்கு ஆட்படுவார்கள். பெற்றோருக்கும், மக்களுக்குமிடையே கருத்து ஒற்றுமை குறையும். உடன்பிறந்தவர்களால் சங்கடத்திற்கு ஆட்பட நேரும். நிலபுலங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் ஈடுபட இந்த நேரம் சிறப்புடையதாகாது. பயணத்தின்போது பாதுகாப்புத் தேவை. நண்பர்கள், உற்றார், உறவினர்கள் ஆகியோரிடம் எச்சரிக்கையுடன் பழகவேண்டியது அவசியம். மாமூலாகச் செய்துவரும் காரியங்களில்கூட மிகுந்த அக்கறையுடன் ஈடுபடுவது நல்லது. அலட்சியப் போக்கு என்பது அடியோடு கூடாது. கணவன், மனைவியிடையே சிறுசிறு பிரச்னைகள் ஏற்படும். கலைஞர்கள் அளவோடு வளர்ச்சி பெறுவார்கள். குடும்ப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் குடும்ப நலம் சீராகவே இருந்துவரும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் ஆகியன நடைபெறுமானால் சோதனைகள் குறைவடையக்கூடும். உத்திராட நட்சத்திரக்காரர்கள் கெடுபலன்கள் குறைவடையப் பெறுவார்கள். ஜனவரி 17,18,19,24,26,29,31 பிப்ரவரி 3,5,8,9,10 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்குத் திசை அனுகூலமானது. கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6,7 எண்கள் நலம் தரும்.

புதிய வெளியீடு

அமுதசுரபி சிறந்த சிறுகதைகள் பதினைந்து

நீலபத்மநாபன், ஜெயரதன், கல்கிதாசன் பிரதிபா ராஜகோபாலன், லட்சுமி ராஜரத்னம், கிருஷ்ணமணி, மகரிஷி, பிரபஞ்சன், ஏ. சுவாமிநாதன், திலகவதி, ரமணி, மாணா. பாஸ்கரன், டி. மதுரா, பின்னலூர் மு. விவேகானந்தன், நா. ராமச்சந்திரன் ஆக (1990 ஆம்ஆண்டு அமுத சுரபியில் வெளிவந்த) 15 எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகள்.

விலை : ரூ 20

ஸ்ரீராம் டிரஸ்ட் வெளியீடு, த.பை.எண். 5043, 145. லிங்கச் செட்டி தெரு, சென்னை- 600 001.

கும்பம் : *(அவிட்டம் 3ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3ஆம் பாதம் முடிய)*

குரு, செவ்வாய் பலம் காரணமாக உங்கள் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் பிறக்கும். மதிநுட்பம் காரணமாகச் செயற்கரிய காரியங்களைச் செய்து மற்றையோரின் பாராட்டுகளைப் பெறு வீர்கள். முக்கியஸ்தர்களின் தொடர்பு நலம் உண் டாக்கும். தெய்வப்பணிகளிலும், தருமப்பணி களிலும் ஈடுபாடு கூடப் பெறுவீர்கள். உடன்பிறந்த வர்கள் உதவ முன்வருவார்கள். நல்ல தகவல் வந்து சேரும். வாழ்க்கைத் துணைவரால் நலம் பெறு வீர்கள். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் கூடுத லான ஆதாயம் கிடைக்கப் பெறுவார்கள். உத்தி யோகஸ்தர்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உதய மாகும். பதவி உயர்வு, இடமாற்றம், ஊதிய உயர்வு ஆகியவை கிடைக்கப் பெறமுடியும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் மதிப்பும், அந்தஸ்தும் உயரப் பெறுவார்கள். மக்கள் நலம் சீராக இருந்துவரும். செய்துவரும் தொழிலில் செழிப்பு உண்டாகும்.

வியாபாரிகள் லாபம் கூடப் பெறுவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் புகழ் ஓங்கும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபட்டு ஆதாயம் பெற வாய்ப் புண்டாகும். பணவருவாய் திருப்திகரமாக இருந்து வரும். ஓரிரு நற்பணிகளுக்காகச் செலவுகளை மேற் கொள்வீர்கள். குடும்பத்தில் மனத்திற்கினிய சம்ப வங்கள் இடம் பெறும். 20 ஆம் தேதி முதல் கலைத் துறைகளைச் சேர்ந்தவர்கள் வெளிச்சமான சூழ் நிலையைக் காண்பார்கள். நிலபுலங்களால் ஆதா யம் கிடைத்துவரும். ஆசிரியர்கள், மாணவர்கள், இஞ்சினியர்கள், இயந்திரப்பணியாளர்கள் ஆகியோர் செழிப்புப் பெறுவார்கள். 25ஆம் தேதி முதல் வியா பாரிகள் விழிப்புடன் இருப்பது நல்லது. பிப்ரவரி 9ஆம் தேதி முதல் செவ்வாய் விரயம் புகுவதால் ஓரிரு சோதனைகளைச் சந்திக்கவேண்டிவரும். குரு பலம் காரணமாக அவற்றிலிருந்து விடுபடவும் வாய்ப்புண்டாகும். சதய நட்சத்திரக்காரர்கள் நற் பலன்கள் கூடப் பெறுவார்கள். ஜனவரி 17,18,19, 22,26,29,31 பிப்ரவரி 3,5,8,9,10 தேதிகள் சிறப் பானவை. வடகிழக்கு, தென்மேற்குத்திசைகள் அனு கூலமானவை. சிம்ம, தனுசு ராசிக்காரர்கள் உதவு வார்கள். 3,4,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

மீனம் : *(பூரட்டாதி 4ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

செவ்வாய், சனி ஆகியோரது பலம் காரணமாக உங்கள் மனத்தில் துணிவும், தன்னம்பிக்கையும் பிறக்கும். எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். எதிரிகள் ஓடி ஒளிவார்கள். வழக்கு, வியாஜ் ஜியங்களில் சாதகமான போக்குத் தென்படும். பொருளாதாரநிலை திருப்திகரமாக இருந்துவரும். ஓரிரு எதிர்பாராத செலவுகளையும் மேற்கொள்ள வேண்டிவரும். குடும்பத்தில் அமைதி நிலைத் திருக்கும். பெற்றோரால் மக்களுக்கும், மக்களால் பெற்றோருக்கும் அளவோடு நலம் உண்டாகும். சினிமா, நாடகம், நாட்டியம், சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். புதிய பொருள்களின் சேர்க்கைக்கும் இடமுண்டு. உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக விளங்குவார்கள். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சோந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள்.

அரசுப்பணிகள் ஆக்கம் தரும். பொதுநலப் பணியாளர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். வியாபாரிகளுக்கு அதிகம் ஆதாயம் கிடைத்துவரும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் புகழ் ஓங்கப் பெறுவார்கள். மாணவர்கள் படிப்பில் முழுமையான அக்கறை செலுத்தினால் முன் னேற்றம்தடைப்படாமல் காத்துக் கொள்ள இயலும். தோட்டங்கள், சுரங்கங்கள், ஆலைகள், தொழிற் சாலைகள் ஆகியவற்றில் தொழிலாற்றுபவர்கள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். நூதன நட்பு நலம் தரும். வெளிநாட்டுத் தொடர் பால் நன்மை பெற முடியும். பயணத்தால் ஒரு காரியம் பூர்த்தி அடையும். நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்கள் பாராட்டுகளுக்கு உரியவர்களா வார்கள். கணிதம், விஞ்ஞானம் போன்ற துறை களைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். உத் திரட்டாதி நட்சத்திரக்காரர்கள் விசேடமான வாய்ப்பு களைப் பெறுவார்கள். ஜனவரி 17,18,19,22,24,29,31 பிப்ரவரி 3,5,8,9,10 தேதிகள் சிறப்பானவை. தனுசு, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். தெற்கும், மேற் கும் அனுகூலமான திசைகளாகும். 1,4,8,9 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கறையானும் மனிதனும்...

ஜி.கே. கண்ணன்

இரவு பூரா 'நை நை' என்று நச்சு மழை. மாடி ஒழுகியது. ஒழுகிய இடத்தை உடனே துடைக்க முடியவில்லை. தண்ணீர் வெள்ளமாக வீட்டுக்குள் பெருகாதிருக்க ஒவ்வோர் ஒழுக லுக்கும் ஒரு பாத்திரத்தை வைத்தேன்.

தாத்தா காலத்து வீடு அது. சுண்ணாம்புடன் கடுக்காய் கருப்பட்டி எல்லாம் சேர்த்து காரையாக்கிக் கட்டியதாம்.

'இந்த வீடே ஒழுகுதே' என்று அம்மா ஆயாசப்பட்டார்கள்.

காலையில் கிழக்கு வெளுக்கும் முன்னே வாசற்கதவு தட்டப்பட்டது. வெளியே வந்தேன். மூர்த்தி நின்றான்.

"நம்ம மேலக் கண்மாய் பொங்கித் ததும்புது. மறுகால் போற வழியைப் பெரிசாக்கணும். இல்லேண்ணா கரை உடைஞ்சி ஊரை வழிச் சுட்டுப் போயிடும்" என்று பதறினான்.

"இப்ப என்ன பண்ணணும்?" என்று நான் கேட்க, "வீட்டுக்கு ஓர் ஆள் கூடையும் மண் வெட்டியும் எடுத்துகிட்டு கண்மாய்க்கு போயிட் டிருக்காங்க. வா நாமும் போகலாம்" என்று அவசரப்படுத்தினான்.

தற்காப்புச் சமாச்சாரம்!

அவசரமாகப் புறப்பட்டேன். போகும் வழி யில் முத்தப்பன் வீடு. மூன்று நாளுக்குமுன் கட்டிய மண் வீடு அது.அப்படியே கூரையோடு உட்கார்ந்து விட்டிருந்தது.

"சே... இந்த மழையிலே பழைய வீடும் ஒழுகுது. புது வீடும் இடியுது..." என்று சொல்லிக்கொண்டே ஓடினான்.

சுற்றுப் பாதையில் போனால் நேரம் ஆகும் என்று குறுக்கு வழியில் ஓடினான் மூர்த்தி.

வளைந்து நெளிந்து போகும் வரப்புப்பாதை அது.

மூர்த்தியின் பின்னே ஓடிய நான் ஓரிடத்தில் தடுக்கி வயலில் விழுந்தேன்.

திரும்பி வந்து என்னைத் தூக்கிவிட்டு மூர்த்தி சிரித்தான்.

"தந்திக் கம்பி மேலே சைக்கிளே விடறாங்க. நீ... வரப்பிலேயே வழுக்கி விழறே..." என்று கேலி செய்தான்.

"தந்திக் கம்பி மேலே சைக்கிள்... அது பயிற்சியின் பயன். அந்த சைக்கிள் சாதனை யாளர்கள்கூட குழந்தையா இருக்கிறப்போ வழுக்கி விழத்தான் செய்திருப்பாங்க!" என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டேன். சொல்ல நேரமில்லை. ஓட்டம்... ஓட்டம்... கண்மாயை நோக்கி வேக ஓட்டம்.

கண்மாய்க்கு வந்துவிட்டோம். எங்களுக்காக ஊர் மக்கள் காத்திருக்கவில்லை.

ஊருக்குச் சேதம் ஏற்படாத வகையில் ஓரமாகக் கரையைப் பெயர்த்து அளவாக வெள்ளம் வடிந்து ஓடச் செய்திருந்தார்கள்.

பயம் போய்விட்டது.

மூர்த்தியும் நானும் திரும்பினோம்.

வரும்போது வயல் வரப்புகளைத் தவிர்த்து வண்டிப்பாதை வழி வந்தோம்.

பாதை ஓரத்தில் வாய்க்கால் போலத் தண்ணீர் சலசலத்து ஓடியது. அந்த வாய்க்கால் கரையில் ஒரு கறையான் புற்று.

எனக்கு ஆச்சரியம். இந்த மழையால் புற்று பாதிக்கவில்லையா? புற்றின் உள்ளே தண்ணீர் இறங்கி இருக்காதா?

"டேய் மூர்த்தி இந்தப் புற்று மட்டும் கரை யாமல், இடியாமல் எப்படி இவ்வளவு பலமாக இருக்கிறது?" என்று கேட்டேன்.

அவன் வழக்கப்படியே என்னை ஏளன மாகப் பார்த்தான்.

"கறையான் புத்திசாலியோ இல்லையோ, மனிதனைவிட சாமர்த்தியசாலி" என்றான்.

"எப்படி?" புரியாமல் விழித்தேன்.

"மனுசங்க கட்டின வீடுகள் இடியுது; இல்லைன்னா ஒழுகுது. இந்தக் கறையான் புற்று இவ்வளவு நச்சு மழையிலும் எவ்வளவு ஸ்ட்ராங்க இருக்குது? இதிலிருந்தே மனிதனை விடக் கறையான் சாமர்த்தியமானதுதான் புரி யலையா?" என்றான்.

வீட்டுக்கு வரும்போதே ஞானானந்த ஆசிர மத்துக்குப் போனோம்.

'ஊருக்குள் இருக்கும் வீடுகளே ஒழுகிட் டிருக்கும்போது, மலையடிவாரத்து ஆசிரமம் என்ன ஆகியிருக்குமோ?' என்ற கவலை. நாங்கள் போனபோது குருநாதர் ஞானவள்ளி நாதர் கீழே பரவியிருந்த ஈரத்தைத் துடைத்து சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார்.

அவசர அவசரமாக நாங்களும் துப்புரவுப் பணியில் முனைந்தோம்.

எல்லாம் முடிந்தபின் குருநாதரிடம் என் மனத்தை அரித்த விஷயத்தைக் கேட்டேன்.



"மனிதனைவிடக் கறையான் பெரிய சாமர்த்தியசாலியா?"

"கண்கூடாப் பார்த்த ஒண்ணுக்கு ஐயாகிட்டே விளக்கம் வேறு கேட்கணுமா?" என்றான் மூர்த்தி.

குருநாதர் சிரித்தார்.

நடந்த எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டார். பின் சிரித்துக் கொண்டே மூர்த்தியிடம் கேட்டார்.

"கறையான் இப்ப கட்டியிருக்கிற புற்றைப் பார்த்தாயா?"

"ஆம் ஐயா..." என்றான் மூர்த்தி.

"பத்து வருஷத்துக்கு முன்னாலே நீ பத்து வயசுப் பையனா இருந்தப்போ கறையான் புற்றைப் பார்த்திருப்பாயே... அப்போ எப்படி இருந்தது?"

மூர்த்தி யோசித்தான்.

"இப்போ... இப்போ இருக்கிற மாதிரியே தான் ஐயா" என்றேன் நான் அவசரமாக.

"நூறு வருஷங்களுக்கு முன்னே?" அவர் கேட்டார்.

தன் யோசனையிலிருந்து விடுபட்டு –

"ஆயிரம் வருஷங்களுக்கு முன்னேகூடக்கறையான் இப்போ போலத்தானய்யா புற்றுக் கட்டியிருந்திருக்கும்" என்று சொன்னான் மூர்த்தி.

"பத்தாயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த கறையானும் இதே போலத்தான் புற்று கட்டியிருந்திருக்கும். இன்னும் பத்தாயிரம் வருஷங்கள் கழிந்த பின்னும் அப்போதும் இப்பப் போலத்தான் புற்றுக் கட்டும். எந்தவித மாற்றமும் இருக்காது... ஆனால் மனிதன்?"

அவர் கேட்டு முடிக்கவில்லை. என மனத்தில் இந்த உண்மை பளிச்சிட்டது.

"பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய மனிதன் வீடுகட்டத் தெரியாமல் குகைகளிலும் பொந்துகளிலும் வாழ்ந்தான். இன்றைய மனிதன் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் அமைக்கக் கற்றுக் கொண்டு விட்டான். நாளைய மனிதன் பூமியை விட்டு வேறு கோள்களுக்குப் போய் புதுப்புது நவீன உத்திகளில் வாழ்விடங்களை அமைத்துக் கொள்ளக்கூடும்".

இதை நினைக்கும் போதே வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது எனக்கு.


மூர்த்தியைப் பார்த்தேன்.

"கறையான் சாமர்த்தியசாலிதான். ஆனால் அதன் சாமர்த்தியம் ஒரு வரம்புக்கு உட்பட்டது. மனிதனின், சாமர்த்தியமும் சாதுர்யமும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருக்கிறது..." என்று அவன் சொன்னான்.

"சபாஷ் மூர்த்தி!" என்று மனமார அவனைப் பாராட்டினார் குருநாதர்.

நானும்தான்.

கண்களைப் பாதுகாப்பது எப்படி?



டாக்டர் : கு. கணேசன்
இராஜபாளையம்
பேட்டி : ஜி.கே. கண்ணன்
முத்துராமலிங்கபுரம்

கண்ணில் ஒளி இல்லையென்றால் நம் வாழ்விலும் ஒளியில்லையல்லவா? கண் விழித்ததிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்கின்ற வரைக்கும் நம் ஒவ்வொரு செயலுக்கும் முக்கிய வழிகாட்டியாக இருப்பதும் நம் கண்தானே? இப்படிப்பட்ட அத்தியாவசியமான கண்களை எப்படிப்பாதுகாப்பது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டாமா? இதோ சிறுவன் கண்ணன் இராஜபாளையம் டாக்டர். கு. கணேசன் அவர்களைப் பேட்டி காண்கிறான்.

கண்ணன் : ஒருவருக்குக்கண்ணில் பார்வைக் குறைபாடு வந்துள்ளது என்பதை எப்படி அறிந்து கொள்வது டாக்டர்?

டாக்டர் : பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு அடிக்கடி கண் எரிச்சல் ஏற்படும். கண்ணில் நீர் வடியும். தலைவலி உண்டாகும். பார்வை தெளிவில்லாமல் இருக்கும். ஒளியைக் கண்டாலே கண்கள் கூசும்.

கண்ணன் : நமக்கு எந்த மாதிரியான பார்வைக் குறைபாடுகள் வருகின்றன?

டாக்டர் : கிட்டப் பார்வை, தூரப் பார்வை என்று இரு வகைப் பார்வைக் குறைபாடுகள் வருகின்றன. கிட்டப் பார்வையில் தூரத்தில் உள்ள பொருள்கள் சரியாகத் தெரியாது. தூரப் பார்வையில் அருகில் இருக்கும் பொருள்கள் தெளிவாகத் தெரிவதில்லை.

கண்ணன் : இவை எதனால் வருகின்றன டாக்டர்?

டாக்டர் : சிறுவர்கள் புத்தகங்களைப் படிக்கும்போது. சில முறைகளைக் கையாள வேண்டும். அம்முறைகள் தவறும்போது கிட்டப் பார்வை வருகிறது. தூரப் பார்வை என்பது வயதான காலத்தில் விழித்தசைகள் தளர்வடைவதால் வரக்கூடிய குறைபாடு.

கண்ணன் : சரி, டாக்டர்! இக்குறைபாடுகள் நீங்க என்ன செய்ய வேண்டும்?

டாக்டர் : சிறுவர்கள் நல்ல வெளிச்சமுள்ள இடங்களில் மட்டுமே படிக்கவேண்டும். இரவில் படிக்கும்போது விளக்கின் வெளிச்சம் புத்தகத்தில் விழ வேண்டுமே தவிர, கண்களில் விழக்கூடாது. படுத்துக் கொண்டே படிக்கக் கூடாது; நடந்து கொண்டும் பஸ்ஸில் பயணம் செய்யும் போதும் படிக்கக்கூடாது. நாற்பது நிமிடங்கள் தொடர்ந்து படித்தால் அடுத்த பத்து நிமிடங்களுக்கு கண்களுக்கு ஓய்வு தேவை.

கண்ணன் : தொலைக் காட்சியை அதிக நேரம் பார்ப்பதால் கண்களுக்குக் கெடுதல் வருமா, டாக்டர்?

டாக்டர் : தொலைக்காட்சிப் பெட்டிக்கு மிக அருகில் அமர்ந்து கொண்டு தொடர்ந்து ஒன்றரை மணி நேரத்திற்கு மேல் பார்த்தால் கண்களுக்குக் கெடுதல் வரலாம்.

கண்ணன் : ஒரு சந்தேகம் டாக்டர்! விளையாடும்போது கண்ணில் அடிபட்டால் பார்வை பாதிக்கப்படுமா?

டாக்டர் : கண்ணில் 'கார்னியா' எனப்படும் கருவிழியில் அடிபட்டால் பார்வை இழக்கலாம். கிரிக்கெட் விளையாடும் போது, கில்லித்தட்டு விளையாடும்போது கண்களில் கிரிக்கெட் பந்தோ, குச்சியோ பட்டுவிடலாம். பென்சில் சீவும் போது கண்ணில் சீவப்பட்ட துண்டோ, பிளேடு முனையோ பட்டுவிடலாம். இம்மாதிரியான சமயங்களில் உடனடியாகக் கண் மருத்துவரை நாடினால் பார்வை இழப்பைத் தவிர்க்கலாம்.

கண்ணன் : சரி, டாக்டர்! என் போன்ற சிறுவர்கள் கடைகளில் விற்கும் பிளாஸ்டிக் கண் கண்ணாடிகளை வாங்கி அணிந்து கொள்கிறார்களே – இது கண்களைப் பாதிக்காதா?

டாக்டர் : நிச்சயம் பாதிக்கும். மருத்துவர் ஆலோசனையில்லாமல் கடைகளில் கண்ணாடி வாங்கி அணிவது கண்களுக்குக் கெடுதல் விளைவிக்கும்! இதில் சந்தேகமேயில்லை.

கண்ணன் : கடைசியாக ஒரு கேள்வி டாக்டர்! மாலைக் கண் நோய் என்று சொல்கிறார்களே... இது என்ன? எப்படி அதனை நிவர்த்திப்பது?

டாக்டர் : வைட்டமின் ஏ சத்து நம் உடம்பில் குறைவாக இருந்தால் மாலைக்கண் நோய் வரும். இந் நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாலை வந்ததும் கண்பார்வை மங்கிவிடும். இதனைப் போக்க நாம் சாப்பிடும் உணவில் வைட்டமின் ஏ சத்து நிறைந்த காரட், மீன், பப்பாளி, மாம்பழம், அகத்திக் கீரை, முருங்கைக்கீரை, பசலைக்கீரை, பால், முட்டை, மீன் எண்ணெய் போன்றவற்றை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கண்ணன் : நன்றி, டாக்டர்! வணக்கம்!

சங்கப் பலகை

காதல் நெஞ்சம்

ஆசிரியர் : செவ்வேள். விற்பனை உரிமை : முத்துப் பதிப்பகம், 20. வ.உ.சி. தெரு, விழுப்புரம் - 605 602. பக்கங்கள் : 80. விலை : ரூ. 8 /-

முப்பது கவிதைகளைக் கொண்ட நூலின் இரண்டாம் பதிப்பு. பாவேந்தர் வழியைப் பின்பற்றுகிறார் ஆசிரியர் என்பது புலனாகிறதெனினும் சிற்சில இடங்களில் நெருடல்கள் உள்ளன. தலைவன் தலைவியைப் பற்றிச் சொல்லும்போது இலைமறை காயாகப் பண்பு கெடாமல் இருக்க வேண்டுமயன்றி விலைமாதை வர்ணிப்பதுபோல் சில வரிகள் உள்ளதை ஏற்பதற்கில்லை.

கவிதைக் கனிகள்

ஆசிரியர் : வி. இக்குவனம். சிங்கப்பூர். பக்கங்கள் : 120. விலை : ரூ. 4 /-

யாப்பிலக்கணக் கட்டுப்பாடு மிகுந்த பாவினம் வெண்பா. கவிஞர் இக்குவனம் தன் முதல் நூலான இந் நூலில் முழுதும் வெண்பாக்களால் பதினெட்டு தலைப்புகளில் பளிச்சிடச் செய்திருக்கிறார். மரபு கெடாமல் தமிழ் மணக்கும் நூல் வகையில் இதுவும் ஒன்று. முருகன் மாலை, வெண்பாவுக்குக் கவியரசு வைரமுத்து அவர்கள் வெண்பாவிலே அணிந்துரை வழங்கியிருக்கிறார்.

காவிரி மைந்தன் கவிதைகள்

ஆசிரியர் : காவிரி மைந்தன். வெளியீடு : சாந்தி இரவி பதிப்பகம், பிளாட் எண் : 115. 24 ஆவது தெரு, சங்கர் நகர், பம்மல், சென்னை - 600 075. விற்பனை உரிமை : பூரம் பதிப்பகம், சென்னை - 17. பக்கங்கள் : 80. விலை : ரூ. 8 /-

இக் காலத்தில் எண்ணற்ற கவிஞர்கள் தோன்றியிருப்பது தமிழ்க் கவிதைக்கு வளமான எதிர்காலம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த வகையில் இக் கவிதை நூல் இடம்பெறுகிறது. இதிலுள்ள துடிப்பான கவிதைகள் படிப்பதற்கு நன்றாக உள்ளன. குருவிக்கரம்பையார் அணிந்துரையில் கூறியபடி 'கவிதைத் துறைக்கு இன்னுமோர் இளைஞர் பாவிரித்து' வைத்துள்ளார்.

பொழுதே விடிந்தாய் யாருக்கு?

ஆசிரியர் : கவிஞர் பூவேந்தன். வெளியீடு : பூவேந்தன் பதிப்பகம், 65. இராமகிருஷ்ணா நகர், எரணாவூர், எண்ணூர் அஞ்சல், சென்னை - 600 057. பக்கங்கள் : 72. விலை : ரூ. 10 /-

இத் தொகுப்பில் பெரும்பாலும் காலத்துக்கேற்ற மரபு வழிக் கவிதைகளே இடம் பெற்றுள்ளன. கவிஞனின் எண்ணம் காலச் சூழ்நிலைக்கேற்ப மாறும் என்பதைப் பல இடங்களில் புரிந்துகொள்ள முடிகிறது.

கவி. கா.மு. ஷெரீப் கவிதைகள்

ஆசிரியர் : கா.மு. ஷெரீப். வெளியீடு : தமிழ் முழக்கம் பதிப்பகம், 21. பச்சையப்பச் செட்டித் தெரு, சென்னை - 600 002. பக்கங்கள் : 464. விலை : ரூ. 45 /-

கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றுத்தான் கவிதைகள் புனைய வேண்டும் என்ற நியதியை உடைத்து, பள்ளிக்குக் கூடச் சென்று படிக்காத ஒருவர் தமிழ் இலக்கணம் கற்றுத் தெளிந்து, தம் விடா முயற்சியாலும், அயராத உழைப்பினாலும் பேராசிரியர்களும் பிரமிக்கும் வகையில் கவிதைகளை யாத்திருக்கிறார், முதுபெரும் கவிஞர் கா.மு. ஷெரீப். இது ஓர் அரிய சாதனை.

கீதாசாரத் தாலாட்டு

ஆசிரியர் : மு. இராமசாமி. வெளியீடு : திருவரங்கம் பதிப்பகம், 7. எல்லப்பச் செட்டியார் காலனி, இராசிபுரம் - 637 408. பக்கங்கள் : 72. விலை : ரூ. 10 /-

கண்ணனின் கீதையின் கருத்துகளை எளிமையாக்கி தாலாட்டுப் பாடல்கள் வடிவில் பாடல்களைப் புனைந்துள்ளார் நூலாசிரியர். பாடல்களுக்கு விளக்கமும் தந்துள்ளார். யாவரும் படித்தின்புறும் வண்ணம் இந்நூல் விளங்குகிறது.

உலகம் பிறந்தது

ஆசிரியர் : கவிமணி எஸ்.பி. இராமச்சந்திரன். வெளியீடு : தாமரை நூலகம், 7 என்.ஜி.ஓ. காலனி, வடபழனி, சென்னை - 600 026. பக்கங்கள் : 112. விலை : ரூ. 10 /-

உரையிடையிட்ட பாட்டுடை நூல் இது. எளிய முறையில் இனிமையான பல பாடல்களை அளித்திருக்கிறார் இதன் ஆசிரியர்.

மாணவர்க்கு மணிப்பாடல்கள்

ஆசிரியர் : வே. இரா. சிவஞான வள்ளல். வெளியீடு : இளவழகிப் பதிப்பகம், 235E, மாரியம்மன் கோயில் தெரு, நியூ டவுன், வாணியம்பாடி வ.ஆ. மாவட்டம். பக்கங்கள் : 64. விலை : ரூ. 8 /-

மழலைப் பாடல் வரிசையில் இந் நூல் இடம் பெறுகிறது. குழந்தைக் கவிதை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு விளக்கமாக இந்நூல். ஆசிரியர் தந்துள்ள கவிதைகளில் சுவையுண்டு.

போர்க்களப் பூக்கள்

ஆசிரியர் : கவிஞர் டாக்டர் கா. கமால் முஸ்தபா. வெளியீடு :

பாத்திமா பதிப்பகம், கோவை - 641 002. பக்கங்கள் : 64. விலை : ரூ. 10 /-

டாக்டர் பட்டம் பெற்ற கல்லூரி வரலாற்றுப் பேராசிரியரான நூலாசிரியர் கல்லூரி ஆசிரியர் கழகம் நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்டவர் என்பதுடன் அது சம்பந்தமான நிகழ்ச்சிகளைத் தம் கவிதைகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்.

தமிழ்த் தேன் கவிதைகள்

ஆசிரியர் : கவிஞர் தமிழ்த் தென்றல். வெளியீடு : இரா. கோவிந்தசாமி, லாலிரோடு அஞ்சலகக் குடியிருப்பு, தமிழ் நாடு ஜி.டி.நாயுடு விவசாயப் பல்கலைக் கழக வளாகம், கோவை - 641 003. விலை : ரூ 4 /-

இந் நூலில் பதினொரு கவிதைகள் இடம்பெற்றுள்ளன. 'இனிமையும் எளிமையும் பொலிவுறப் பொதிந்தே யாப்பும் அணியும் அணிபெற இணைந்த கருத்துக் கருவூலம் கவிதை எனப்படும்' என்று கவிதையின் இலக்கணம் கூறியும் தமிழன்னைக்குத் 'திருத் தசாங்கம்' பாடியும் மகிழ்ந்துள்ளார் நூலாசிரியர் இந் நூலில்.

நிசப்த கோபுரம்

ஆசிரியர் : கவிஞர் வையவன். வெளியீடு : தாரிணி பதிப்பகம், 323. நடேச நகர், முதல் பிரதான சாலை, விருகம்பாக்கம், சென்னை - 600 092 பக்கங்கள் : 80. விலை : ரூ. 7.50

புதுக் கவிதைகள் உலா வரும் சகாப்தத்தில் வையவனின் 'நிசப்த கோபுரம்' இடம் பெறுகிறது. அலங்காரச் சொற்களின் சிந்தனை வெடிப்புச் சிதறலே புதுக்கவிதை. இந்த வரிசையில் இந்நூல் சிறப்பிடம் பெறுகிறது.

—குடந்தை புகழேந்தி

மக்கள் பாடகன்

(ஆசிரியர் : சங்கை வேலவன். வெளியீடு : நியு செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-B, *சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட் சென்னை - 600098. பக்கங்கள்: 84. விலை ரூ : 10.00).*

இசையமைப்பாளர் இளையராஜாவின் அண்ணன் பாவலர் வரதராசன் நூலின் தலைவன். "மக்கள் பாடகனாக" அறிமுகப்படுத்தப்படுகிறார். நூலாசிரியர் சங்கை வேலவன் இதனைச் சற்று செம்மையாகவே செய்திருக்கிறார். உரையிடையிட்ட பாட்டு நூலாகிய இதில் சில இடங்களில் உரைநடையே கவிதையாகவும், கவிதை உரைநடையாகவும் ஒலிக்கிறது.

இந்த நூலில் மணியான கவிதை வரிகள் உண்டு.

—ஆர்.பி. சாரதி

கவிஞர் பொன். மல்லிகையான் கவிதைகள்

(ஆசிரியர் : கவிஞர் பொன். மல்லிகையான். வெளியீடு : அன்னை பதிப்பகம், 633, கும்பர்வாட ரோடு, பம்பாய் - 400017. பக்கங்கள் : 152. விலை ரூ : 16.00)

தலைப்பு, கவியரங்கக் கவிதைகள், புதுக்கவிதை உரை, உரை வீச்சு என மூன்று தலைப்புகளில் முத்தான கவிதைகளைப் பாடியுள்ளார். தமிழ், ஜாதி உணர்வு, ஆக்கத்திற்குத் தற்காலம் எப்படி இருக்க வேண்டும் எனப் பாடுகிறார்.

பம்பாய் நகரில் இருந்து கொண்டு பைந்தமிழுக்கு அவர் ஆற்றும் பணி போற்ற வேண்டியதே.

காவிரித் தென்றல்

(ஆசிரியர் : எதிரொலி விசுவநாதன். வெளியீடு : பூவழகி பதிப்பகம், 29/2 சீனிவாசப் பெருமாள் தெரு, இராயப்பேட்ட[...] சென்னை - 600014. பக்கங்கள் 112. விலை ரூ : 10.00).

வானொலியில், கவியரங்க[...]களில், பருவ இதழ்களில் இட[...] பெற்றவை நூல் வடிவி[...] தொகுக்கப்பட்டு நம் கரங்களி[...] தவழ்கிறது. எல்லார்க்கும் பு[...]யும் எளியநடை.

கவிதைகளில் இன்றைய[...] சூழலை அழகாகச் சாடுகிறார்[...]

ஆரணி,ப்ட்டு சுப்பிரமணிய[...]



ஆழ்நிலைத் தியானமும் அனுபூதி நிலையும்

ஆசிரியர் : ராஜாராம்[...] கிடைக்குமிடம் : 10 /7, ராஜ்மஹா[...] அபார்ட்மெண்ட்ஸ், 10. வே[...] மாதவன் ரோடு, சென்னை - [...] பக்கங்கள் : 104. விலை : ரூ. 20 [...]

ஆழ்நிலைத் தியானப் பயி[...]யின் மூலம் மனக்கடலின்மே[...] மட்டத்தில் எண்ணங்கள் அ[...]களாகக் கொந்தளித்து[...] கொண்டிருக்கின்றன அ[...] எண்ணங்கள் அமைதியடை[...] போது அவையும் சங்கமமாக[...] கடலாக மாறி விடுகின்ற[...] மாபெரும் சக்தியாக உ[...] பெறுகின்றன - என்பதை[...] படங்களுடனும் சின்னச் சின்[...] உதாரணங்களுடனும் விளக்[...] இருக்கிறார் ஆசிரியர் ரா[...]ராம்ஜீ.

மன அமைதி பெற விரும்[...]வோருக்கு மகத்தான பிரசா[...] இந்த நூல். —நாகரா[...]

எல்லாம் தமிழகம் பற்றி வினாடி வினா

விடைகள்

அ. 1. எஸ்.எஸ். பர்னாலா. (முழுப்பெயர் சுர்ஜித் சிங் ர்னாலா) 2. ஜோதி வெங்கடாசலம் அம்மையார். ஏ.ஜெ. ஜான். 4. மைசூர் மன்னர். 5. கே.கே. ஷா.

ஆ. எம்.ஜி.ஆர்., மு. கருணாநிதி - முதலில் சொல் ர்கள். முன்னால் சி.என். அண்ணாதுரை, பின்னால் ானகி ராமச்சந்திரன் தற்போது ஜெயலலிதா, விட்டுப் பான பெயர். சி. ராஜகோபாலாசாரியார். ஆம், அவ து! படைப்பு 'திக்கற்ற பார்வதி' திரைப்படமாக வந் ள்ளது!

இ. 1. குன்றக்குடி. 2. காஞ்சிபுரம் (காமகோடி பீடம் ல்ல இது) 3. திருப்பாதிரிப்புலியூர் 4. திருப்பனந்தாள் இதுவும் காஞ்சி 6. ஸ்ரீரங்கம்.

ஈ. சுவாமி விவேகானந்தர் நினைவில் இருப்பாரே!

உ. 1. பட்டுக்கோட்டை (இவ்வூர் நாடியம்மன் பிர த்தமான அம்பிகை) 2. திருவாஞ்சியம் 3. திருவீழி ழலை 4. திருச்சேறை 5. கீழ்வேளூர் 6. நாகப் ட்டினம் 7. திருமெய்யம் (புதுக்கோட்டை) 8. திருவை ாறு 9. கும்பகோணம் (ஆதி கும்பேசுவரின் தேவியின் ருப்பெயர் மங்களாம்பிகை தானே?) 10. தேரழுந்தூர்.

ஊ. 1. சேலம் 2. கோவை 3. தூத்துக்குடி

எ. 1. திருக்கோயில்களுக்கான தெய்வச் சிலை தயாரிப்பு 2. சிமெண்ட் உற்பத்தி 3. உப்பளம் 4. பீடங்கள் 5. நீர்த்தேக்கம்

ஏ. 1. சுதந்திரப் போராட்ட வீரர்கள்; தேசிய லிம்கள். 2. நாதசுர மேதைகள் (ஊர்கள் முறையே திரு வடுதுறை, வேதாரண்யம், காருகுறிச்சி) 3. தலை நீதிபதி பதவி வகித்தவர்கள். 4. ஆங்கிலப் பத்திரி யாசிரியர்கள் (தமிழ்நாட்டின் தலைநகரிலிருந்து யாற்றினர். தெலுங்கர், மலையாளியைச் சேர்ந் அதனால்தான்!) 5. பழைய சென்னை மாகாணத்து மு அமைச்சர்கள்.

ஐ. வலப்புறம் மேலிருந்து கீழ் 6,5,4,1,2,3 என வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒ. மேலிருந்து கீழ் வலப்புறம் 6,4,5,3,2,1 என் வரிசை.

ஔ. 1. குமரிமலர் 2. சக்தி 3. பாரிஜாதம் 4. 5. மனிதன் 6. விருந்து 7. சிந்தனை 8. காவச்சக் 9. மணிக்கொடி 10. கலைக்கதிர் 11. தியாகி 12. துஸ்தான் 13. சிவாஜி 14. பொன்னி 15. அஜந்தா

ஃ. 1. சிவவாக்கியர் 2. பட்டினத்தார் 3. ஔ யார் 4. காளமேகப்புலவர் 5. இதுவும் காளமேகமே தாயுமான சுவாமிகள் 7. அப்பர் அடிகள் 8. திருவ மொழி (நம்மாழ்வார்) பாசுரம் 9. சுந்தரமூர்த்தி ளார் 10. சுப்ரமண்ய பாரதியார்.

கல்வெட்டுக் கதைகள்

வராஹ வேட்டை

டாக்டர் இரா. நாகசாமி

துங்கபத்திரை ஆற்றங் கரையில் ஓர் அடர்ந்த காடு. அதில் தாரைகளும் தப்பட்டைகளும் கடுமையாக இடியென முழங்கிக் கொண்டிருந்தன. ஹாய் ஹூய் - தொரத்து தொரத்து என்ற சத்தம் அந்தக் காட்டில் எதிரொலித்தது. கேட்போர் நடுநடுங்குவர். வேட்டைக்காரர்கள் கையில் வில்லும் வேலும் ஏந்தி அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தனர். காட்டுப் பன்றிகள் பயங்கரமாகக் கத்திக்கொண்டு புதர்களின் நடுவே ஓடிக் கொண்டிருந்தன. இவற்றின் நடுவே கையில் வில்லும் அம்பும் ஏந்திப் பெருமிதமாக ஒருவர் வந்து கொண்டிருந்தார். இடையில் உடைவாள், விலையுயர்ந்த ஆடை அணிகலன்கள் பூண்டிருந்தார். அவருடன் ஒரு மங்கையும் வந்து கொண்டிருந்தாள். அவர்களைச் சுற்றி பெரும் வீரர்கள் வந்து கொண்டிருந்தனர். அவ்வாறு வந்து கொண்டிருந்தது வேறு யாருமல்லர். சாளுக்யப் பேரரசன் சத்யாச்ரய, பிருத்வீவல்லப, மஹாராஜாதி ராஜ பரமேச்வர பட்டாரக ஸ்ரீ கோவிந்தன் தான் அவ்வாறு வேட்டைக்கு வந்து கொண்டிந்தான். அவன் உடன் வேட்டைக்கு வந்திருக்கும் பெண் அவன் தேவி சாமுண்டப்பை மஹாதேவி தான்.

அந்தக் காடே அரசகுடும்பத்தினர் வேட்டையாட வளர்க்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் வனவிலங்குப் பூங்காவைப் போல, அக்காலத்தில் பயங்கரமான காட்டு விலங்குகளை வேட்டையாட வளர்த்து விட்டிருந்தனர். காட்டு விலங்குகளை வேட்டையாடுவது என்பது அரசனுக்கு ஒருவிதப் போர்ப் பயிற்சி என்றே சொல்லலாம். எவ்வளவு பயங்கர விலங்கோடு மோதி வேட்டையாடுகிறானோ அந்த அளவுக்கு அவன் போரில் கடும் வெற்றி காணும் அனுபவம் ஏற்படும்.

சாளுக்கிய கோவிந்தன், துங்கபத்திரை ஆற்றங்கரைக்கு ஏன் வந்தான்? வெறும் வேட்டையாடவா வந்தான்? இல்லை! அவன் இப்பொழுது காஞ்சிபுரத்தின் மீது, அதை ஆண்டு கொண்டிருக்கும் பல்லவன் தந்திவர்மன் மீது படையெடுத்து வந்து கொண்டிருக்கிறான். வரும் வழியில் இவ்வேட்டையாடல், வெற்றி வாகைக்கு ஒரு முன்னோட்டம் தான். கன்னங்கரேலென்று நீண்ட கொம்புடன் பயங்கரமான சத்தத்துடன் அரசன் வரும் கூட்டத்தின் மீது பாய்ந்தது ஒரு காட்டுப்பன்றி. உடன் வந்தவர்கள் ஒதுங்கினர். இப்போது அது அரசன் மீதே பாய்ந்தது. மற்றவர்கள் அப்போதும் வாளாவிருந்தனர். உடன் வந்த மஹாதேவியோ நடுங்கினாள். "ஹோ" என்று கத்தினாள். மற்றவர்களோ இதைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது.

என்ன? இவர்கள் அரசனையே சதிசெய்து வீழ்த்தப் பார்க்கிறார்களா? ஒரு வினாடி தான். அடுத்தகணம்! அரசன் எய்த அம்பு பாய்ந்து அப்பன்றி தரையில் சாய்ந்து புரண்டது. அரசனைத் தாவி அணைத்துக் கொண்டாள் மஹாதேவி. அரசன் சிரித்தான். "இதைக் கண்டே இப்படிப் பயந்துவிட்டாயே தேவி! இன்னும் போரின் நடுவே ஏற்படும் ஆபத்துகளைக் கண்டு எப்படி சகித்துக் கொள்வாய்?" என்று கேட்டான் கோவிந்தன்.

"அதை நினைத்தாலே பயமாகத்தானிருக்கிறது!" மேலும் அரசனை இறுக்கி அணைத்தாள். "நல்லவேளை எங்கே அந்தப் பன்றி உங்களை வீழ்த்திக் கொன்றுவிடுமோ என்று பதறிப் போய்விட்டேன். வேண்டாத சாமியை எல்லாம் வேண்டிக் கொண்டேன்" என்றாள். அவள் உடல் இன்னும் பதறிக் கொண்டிருந்தது. "அந்த வராஹத்தை இனி மற்றவர்கள் கவனித்துக் கொள்வார்கள். வா, அருகில் ஒரு பெரிய கோயில் இருக்கிறது. அங்கு போய் பூஜை செய்து வணங்கிவிட்டு வருவோம்" என்று கிளம்பினான்.

துங்கபத்திரைக் கரையோரமாகவே அவர்கள் சிறிது தூரம் வந்ததும், எழிலான ஒரு மலர்வனம் இருப்பதை மஹாதேவி கண்டாள். அவள் மனதிலிருந்த பதற்றம், பயம் எல்லாம் அம் மலர்வனத்தில் நுழைந்த உடன் மறைந்தே விட்டன. அவளை அறியாது ஒரு சாந்தி ஏற்பட்டது. அதன் அருகில் புனிதமான கோயில் ஒன்று அவள் கண்ணில் பட்டது. அது என்ன கோயில் என்று கேட்டாள் மஹாதேவி. "நமது சாம்ராஜ்யத்திலேயே மிகப் பெரிய கோயில்களில் ஒன்று இது. பரம கருணா மூர்த்தியாக, தர்மத்தின் இருப்பிடமாகத் தோன்றினானே இராமன். அவன் அகந்தையின் இருப்பிடமாகத் திகழ்ந்த அரக்கன் இராவணனை சம்ஹாரம் செய்து வரும் வழியில் பரமேசுவரனை வணங்கினார்

அல்லவா? ராமேச்வரம். அதே ராமேச்வரம் என்னும் பெயர் கொண்டதுதான் இக்கோயில். நம் முன்னோர்கள் எல்லாம் இதை வணங்கிப் போற்றியிருக்கிறார்கள். அந்தக் கோயிலைச் சார்ந்ததுதான் இந்த மலர்வனமும்" என்று கூறிக் கொண்டே வந்தான் அரசன்.

சக்ரவர்த்தி ராமேச்வரம் கோயிலுக்குப் பூஜைசெய்ய வருகிறார் எனக் கேள்விப்பட்டு, அந்தக் கோயிலே விழாக் கொண்டதுபோல் காட்சியளித்தது. கோயிலின் உள்ளிருந்து அரசனை வரவேற்க "குரு சிவதாரி" பூர்ணகும்பத்துடன் வெளிவந்தார். அரசனும் தேவியும் பக்தி சிரத்தையுடன் கோயிலினுள் சென்று ராமேச்வரத்து பரமனை வணங்கினர். பின்னர் வெளியே பிராகாரத்தில் வந்து அமர்ந்து பிரஸாதம் வாங்கிக் கொண்டனர். அப்போது, "மஹாதேவி! நாம் இந்தக் கோயிலுக்கு ஏதாவது செய்ய வேண்டுமே. அந்தக் காட்டுப் பன்றியிடமிருந்து உங்களைக் காப்பாற்றியதே இந்த பகவான்" என்றாள். அரசன், குரு சிவதாரியைப் பார்த்தான். குருவின் முகத்தில் ஒரு பொலிவு. இக்கோயிலுக்கு உங்கள் முன்னோன் கீர்த்திவர்ம மஹாராஜா ஒரு கிராமம் தானமாகக் கொடுத்தான். அது இப்பொழுது சரியாக இல்லை" என்றார் சிவதாரி. "அந்த கிராமத்தை சரிசெய்து மீண்டும் இந்தக் கோயிலுக்கே வருமாறு செய்கிறேன்'' என்றான் கோவிந்தன்.

இதை முழுவதும் ஒரு செப்பேட்டில் எழுதி அக் கோயிலுக்குக் கொடுத்தான். கி.பி. 804 ஆம் ஆண்டு உண்மையாக நடந்த நிகழ்ச்சி இது. சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்னர் இச்சம்பவம் நடந்தது. சாளுக்கியப் பேரரசன் இவ்வாறு இந்நிகழ்ச்சி முழுவதையும் எழுதித் தானம் கொடுத்த செப்பேடு இன்னும் இருக்கிறது. இச்செப்பேடு லண்டன் மாநகரில் உள்ள பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளது. இதை இப்பொழுது கோவிந்தனின் பிரிட்டிஷ் மியூசியம் செப்பேடு என்று கூறுவர். மூன்று தகடுகளில் எழுதப்பட்டுள்ள இச்செப்பேடு கன்னடமொழியில் உள்ளது.

அக்காலத்தில் அரசர்கள் வேட்டையாடுவதற்கெனத் தனியாகக் காடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதில் கடும் வன விலங்குகள் வளர்க்கப்பட்டன. அரசர்கள் வேட்டையாடும் போதும், படையெடுப்பின் போதும் அவனது தேவியர் உடன் வந்தனர். வழியில் சிறந்த தேவாலயங்களுக்குச் சென்று அவர்கள் வணங்கி சிறந்த தானம் செய்தார்கள் என்றும் இச்செப்பேட்டில் அறிகிறோம். ●

செயின் அறுப்பைத் தடுப்பதற்கு....

தினசரி காலையில் எழுந்தவுடன் செய்தித்தாள்களின் முகத்தில்தான் விழிக்க வேண்டிய சூழ்நிலை. தலைப்புச் செய்தியாகவே, 'செயின் அறுப்பு' சம்பவம்தான் போடப்பட்டிருக்கிறது. எப்படி பஞ்சாப் மாநிலத்தில் தினமும் குறிப்பிட்ட நபர்கள் பயங்கரவாதிகளால் கொல்லப்படுகிறார்களோ, அதேபோல் தமிழ்நாட்டில் தினமும் பெண்கள் கழுத்தில் போடப்பட்டிருக்கும் 'செயின் அறுப்பு' சம்பவங்களும் நடந்து கொண்டிருக்கின்றன.

இதை எப்படித் தடுப்பது? என்று யோசிக்கும்பொழுது 'பெண்கள் அனைவரும் கராத்தே' கற்றுக் கொண்டிருந்தால் செயின் அறுப்பு சம்பவமே தமிழ்நாட்டில் நிகழாது என்று அழுத்தம் திருத்தமாக சொல்லுகிறார், 'கராத்தே' கலையில் 'கறுப்பு பெல்ட்' வாங்கியவரும் - சீனியர் கராத்தே ஆசிரியர் தகுதியைப் (5 ஆவது டேன்) பெற்றவருமான எம்.மணி அவர்கள்.

ஏறத்தாழ பதினெட்டு வருட 'கராத்தே' அனுபவத்தைப் பெற்றவரும் - சென்னை நகரத்தில் 20 கிளைகளில் நானூறு மாணவர்களுக்கு நாள்தோறும் கராத்தே பயற்சியளித்து வருபவரும் அண்ணா சாலையிலுள்ள காயிதே மில்லத் பெண்கள் கல்லூரியிலும் - வடசென்னையிலுள்ள பெண்கள் பாரதிக் கல்லூரியிலும் மாணவிகளுக்கு கராத்தே ஆசிரியராகத் திகழ்பவருமான கொரியன் கராத்தே மாஸ்டரான மணி, "ஒரு பெண் கராத்தே கலையைப் பெற்றவளாக இருந்தால் தைரியமாக நடுரோட்டில் எந்த நேரத்திலும் செல்லலாம்" என்று உறுதியாக கூறுகிறார்.

"பின்புறம் வந்து கழுத்துச் செயினை அறுக்க முயன்றாலும் சரி, இல்லை நேரிடையாக வந்து கத்தியைக் காட்டி செயினை அறுக்க முயன்றாலும் சரி, இடப்புறமோ - வலப்புறமோ சரிசமமாக வந்[து] நின்று திடீரென்று கழுத்து[ச்] செயினை அறுக்க முயன்ற[ா]லும் சரி, ஆக எந்தச் சூ[ழ்] நிலையிலும் எளிதான கராத்[தே] மூலம், எதிரியை ஓட ஓட விரட்[ட]லாம். கழுத்தில் போட்டிருக்கு[ம்] செயினும் தப்பும்" என்பன[த] தன்னிடம் பயிலும் மாண[வி]களைக் கொண்டே நடைமுறை[]யில் செய்தும் காட்டினார் திரு[] மணி.

மேலும், "கராத்தே பயில்[]தால் பெண்கள் என்றைக்கு[ம்] இளமையாக இருக்க முடியும்[.] உடல் நிலையைச் சீர்கெடாம[ல்] வைக்கவும் உதவும். அஜீரணம்



யு சம்பந்தமான பிரச்னை ; மாதவிடாய் சமயத்திலும், ற சாதாரண சமயத்திலும் ண்களுக்கு ஏற்படும் வயிற்று ி: மலச்சிக்கல்; பிளட் ஷர்; நீரிழிவு போன்ற அத் னையையும் எளிதான முறை கராத்தே கலையின் மூலம் ாக்க முடியும். ஒவ்வொரு ாதிக்கும், ஒவ்வோர் எளி ன கராத்தே முறை இருக் து. இதைப் பெண்கள் ண்டிப்பாகப் பயிலவேண்டும்" ன்றும் கராத்தே மாஸ்டர் . மணி ஆதாரபூர்வமாக ால்லிக் காட்டி விளக்கு ார்.

'கராத்தே' என்பது ஆண் ருக்கும் - விளையாட்டு வீரா ருக்கும் மட்டும் சொந்தமல்ல. தே யார் வேண்டுமானாலும் ந நேரத்தில் வேண்டு னாலும் பயிலலாம். வயது த்தியாசம் என்பது இந்த ாத்தே கலையில் கிடையாது ன்று கூறியவர், தன்னிடம் 75 து பெரியவரொருவர் தின கராத்தே கற்றுக் கொள் தையும் குறிப்பிட்டார்.

"குழந்தையே இல்லாமல் டுகின்ற பெண்கள், ாத்தே கலையைக் கற்றுக் ாண்டால் அவர்கள் செய் ன்ற உடற்பயிற்சியின் காரண க - உடலின் உறுப்புகளில் ற்றம் ஏற்பட்டு விரைவில் த்தரிக்கவும் முடியும்" என்று பிக்கையோடு சொன்னவர், ாத்தே என்பது ஒருவகை ாகாசனம்' தான். இது ந்தியாவிலிருந்துதான் வெளி ட்டிற்கு அறிமுகமான கலை. தற்கான இலக்கியச் சான்று ும் பனை ஓலைகளில் ணப்படுகின்றன" என்றார்.

கராத்தே கற்கும்பொழுது ற்காக 'ஆ வா' என்று கத்த ண்டும். என்று கேட்டால் ப்படிச் சொல்வதால், ாத்தே பயிலுகின்ற மாணவ - ணவிகளுக்கு அதிகப்படி யான பலம்; எதிரிகளின் கவ னத்தைத் திருப்புவது. எதிரி களை மிகுந்த அதிர்ச்சிக் குள்ளாக்குவது; அடி வயிற் றைக் கச்சிதமாக வைத்துக் கொள்வது. மூச்சுப் பகுதியைச் சீரான நிலையில் கொண்டுவரு வதற்கு உதவியாக இருக்கும். மற்றபடி ஒன்றுமில்லை" என்று பதில் வருகிறது.

கராத்தே கலையில் கறுப்பு பெல்ட் வாங்கிவிட்டால் அவர் ஆசிரியராக சொல்லிக் கொடுக் கும் தகுதியைப் பெற்றுவிடு கிறார் என்று அர்த்தம். இதற்காகப்பல ஆண்டு காலம் தொடர்ந்து பயிற்சி பெற வேண்டும். முதலில் பயிற்சி பெறுபவர்கள் வெள்ளை பெல்ட், பச்சை பெல்ட், நீல பெல்ட், பழுப்பு பெல்ட், இள மரநிற பெல்ட் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்ற நிலைகளைக் கடந்த பிறகுதான் கறுப்பு பெல்ட் அந்தஸ்து கிடைக்கும். இதற்காக குறைந்த பட்சம் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் கூட ஆகும் என்று தெரிய வந்தது.

கறுப்பு பெல்ட் வாங்கி னாலும் - தொடர்ந்து பயிற்சி பெற்றால்தான் முதலாவது டேன், இரண்டாவது டேன் என்று படிப்படியாக முன்னேற முடியும். இதற்குக்கடுமையான பயிற்சி கண்டிப்பாகத் தேவை என்று சொன்னவர், உணவு விஷயத்தைப் பற்றிப் பேசும் பொழுது - சைவ உணவே கராத்தே கலைக்கு மிகவும் ஏற்றது என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். காரத்தைக் குறைப்பதும் கராத்தே கலைக்கு நல்லது என்று விளக்கினார்.

பள்ளிகளில் சிறுவர் - சிறுமி களுக்கு கராத்தே கலையைச் சொல்லிக் கொடுக்க ஆரம் பித்தால் பிற்காலத்தில் அவர் களிடம் எந்தவித பயஉணர்ச்சி இருக்காது. தன்னம்பிக்கையும் குன்றாது. உடல்நிலையும் நோயற்றுக் காணப்படும் என் பதை இவரிடம் படிக்கும் சிறுவர் - சிறுமியரைக் கண் டால் தெரிகிறது.

கராத்தே ஒரு வழியில் ஒரு யோக சாஸ்திரம்தான். மன நிலையைக் குன்றாமல், நிலையாக வைத்திருப்பதற்கு கராத்தே மிகவும் அவசியம். குறிப்பாகப் பெண்களுக்கு இந்தக் காலத்திற்கு தேவை யான ஒன்றாகும்.

—த.கி. இராமசாமி.





● மீனாட்சிசுந்தரம்

இன்றைய திரைப்படங்கள் எப்படி?

பத்மினி பட்டாபிராமன்

பொழுது போக்கு என்றால் உடனே நமக்குத் தோன்றுவதெல்லாம் சினிமாதான். நம் நாட்டைப் பொறுத்தவரை சினிமா என்பது விளம்பர ...சகங்களைப் போல - நம் ...ழ்க்கையோடு ஒன்றாகிவிட்ட ...ன்று எனலாம். கோடிக் ...ணக்கான பணத்தைத் தன் ...ள் முடக்கிய சினிமா கோடி ...காடியான மக்களை எப்படி, ...தனால் கவர்கிறது?

எஸ். மீனாட்சிசுந்தரம் ஒரு ...ள்வியை நம் முன் வைக்...றார். "ஆரம்ப நாள்களில் ...ராணக் கதைகளையும், ...ன்வர் குடும்பக் கதைகளை ...ம் படமாக்கினார்கள். ...ன்றோ அபரிமிதமான ...தாழில்நுட்ப வளர்ச்சியினால், ...ரமிக்க வைக்கும் ஃபோட்டோ...ராஃபி, எடிட்டிங், இசை, ...ட்சி அமைப்பு இவை திரை...லகை ஆளுகின்றன. படம் ...டுப்போர் வியாபாரிகள் ...னில், நாம் டிக்கட் பணம் ...லுத்தும் கன்ஸ்யூமர் ஆகி...ட்டோம். இதில் நாம் கொடுக்...ம் பணத்துக்கு உண்மையான ...ாழுதுபோக்கு கிடைக்கிறதா? ...டம் எடுப்போர் இன்னும் ...ப்படி எடுக்க வேண்டும்?"

திரு. மீனாட்சிசுந்தரம் ...தாடங்கி வைத்த விவாதத்தில் அதிகமாக சினிமா பார்க்கும் இளைய தலைமுறையினர் பங்கு பெறுகிறார்கள்.

1. திருமதி ஜெயந்தி சீனிவாசன் (அதிகாரி, பாங்க் ஆஃப் இண்டியா)

2. எஸ். ரவிச்சந்திரன் (புதுக் கல்லூரி மாணவர்)

3. எஸ். ராஜேஷ் (புதுக் கல்லூரி மாணவர்)

4. உமா (கல்லூரி மாணவி)

5. காயத்ரி (கல்லூரி மாணவி).

ஜெயந்தி ஸ்ரீநிவாசன் : என்னைப் பொறுத்தவரை முழுமையான பொழுது போக்கு சாதனமான இந்த சினிமா, எல்லா வயதினரையும் எல்லாத் தரப்பினரையும் கவர்வதால், சமூகத்தின் எல்லாப் பிரிவினரையும் சென்றடைவதால், அதில் ஒரு பாஸிடிவ் மெஸ்ஸேஜ் இருக்கணும். தொழில்நுட்ப வளர்ச்சி என்பதெல்லாம் ஒருபுறம் இருந்தாலும் ஆண்டாண்டு காலமாக உள்ள சமூக நியதிகளுக்கு எதிராக இருக்கக் கூடாது. சமூக விரோத சக்திகளுக்குத் துணை போவதாக இருக்கக் கூடாது. ஒரு போதனைப் படமாக இருக்க வேண்டும் என்பதல்ல என் கருத்து. ஓரளவு நியதிக்கு உட்பட்டதாகப் பொழுது போக்கு அம்சங்களுடனும் இருக்கணும்னு நான் பெரிதும் எதிர்பார்க்கிறேன்.

மீனாட்சிசுந்தரம் : நீங்கள் சொல்வது சரியே. அப்படியென்றால் இன்றைய சினிமா அப்படியிருக்கிறதா?

ஜெயந்தி : ஓரளவு ஏமாற்றம் தருவதாகவே உள்ளது. கல்லூரி மாணவர்களைக் கவரவே நிறையப் படங்கள் எடுக்கிறார்கள். அதிலும் கல்லூரிகளில் நடப்பது போலச் சில தேவையற்ற காட்சிகள் இடம் பெறுகின்றன. சொல்லுங்க, உங்க காலேஜ்லே எல்லாம்கூட இப்படித்தான் நடக்கிறதா?

ராஜேஷ் : உங்க கருத்து சரிதான். சினிமாவுலே காலேஜ் பசங்களைக் காட்டறப்பல்லாம் வெறும் கலாட்டாவாக, அதாவது பொண்ணுங்களை டீஸ் ஸிங் செய்றாப்பல, அல்லது

ரவிச்சந்தர் ●→



காயத்ரி உ



அவங்க ஓடிப்போய் உடனே கல்யாணம் செய்யற மாதிரி இப்படியே காட்டறாங்க. இது ஒரு சிறு பகுதி. ஆனா நாங்க கல்லூரிக்குள்ளே வளர்த்துக் கொள்கிற நட்பு பற்றியோ, எப்படி சமூகத்துல நட்புணர்வோடு பழகறோம் என்பதோ படங்கள்லே வரதில்லே.

ரவிச்சந்தர் : இப்ப எல்லாம் வெறும் பொழுதுபோக்கு வால்யூக்காக மட்டுமே படம் எடுக்கறாங்க...

உமா : அது மட்டுமில்லே, ஒரே ஆள் பத்துப் பேரை அடிக்கிற மாதிரி காட்சிகளைப் பார்த்துப் பார்த்து நாமும் செய்யலாமேன்னு கூட நினைக்க ஆரம்பிச்சுடறாங்க.

காயத்ரி : ஹீரோக்களின் ஸ்டைல், நடை, உடை, பாவனைகளையும் காப்பி பண்றாங்க.

உமா : ஆங்கிலப் படங்களை எடுத்துகிட்டா, ரொம்ப இயல்பா எடுக்கிறாங்க. நல்ல கதையை ரியலிஸ்டிக்கா எடுக்கறாங்க.

காயத்ரி : ஓர் அதாரிடியோட நிஜம் போல எடுக்கறாங்க.

ஜெயந்தி : அட்வென்ச்சருக்குன்னு ஒரு படம், காமெடிக்கு என்றால் தனிப்படம், ரொமான்டிக்னா ஒரு படம் என்று தனித் தனியா வெரைட்டியா எடுக்கறாங்க.

ரவிச்சந்தர் : ஒரே படத்துல எல்லாத்தையும் கலந்து மசாலாப் படமா அவங்க எடுக்கறதில்லே.

மீனாட்சிசுந்தரம் : கிட்டத்தட்ட நாற்பது வருஷங்களுக்கு முன்னே, ஒரு படத்தோட கதை இப்படித்தான் இருக்கணும்னு இருந்த அமைப்பிலேருந்து நம்ம படங்கள் இன்னும் மாறலை.

காயத்ரி : தொழில் நுட்ப ரீதியிலே, ரொம்ப வளர்ச்சி அடைஞ்சிருந்தாலும் கதை அமைப்பிலே அவ்வளவா மாற்றம் இல்லே.

உமா : எல்லா வகையான ஆடியன்ஸுக்கும் தேவையானதை ஒரே படத்திலே திணிக்கிறாங்க.


ஜெயந்தி : இப்ப ஒவ்வொரு டைரக்டரும் தனக்குன்னு தனித் தனிப் பாணியிலே படம் எடுக்க ஆரம்பிச்சிருக்காங்க. பாலசந்தர், பாரதிராஜா, பாக்யராஜ், மணிரத்னம் அப்படீன்னு தனித் தனிப் பாணி.

ராஜேஷ் : படங்கள்லே கொடுக்கற ஒவ்வோர் அயிட்டத்தையும் ரசிக்கறதுக்குன்னே தனித்தனி ஆடியன்ஸ் இருக்காங்க. காலேஜ்லே கலாட்டான்னா அதை ரசிக்கிற வங்களும் நிறையவே இ காங்க.

ரவிச்சந்தர்: இப்பல்லா பாட்டுகளினாலேதான் படமே ஹிட் ஆகிறது. சமயங்கள்லே பாட்டு படத்துக்கும் சம்பந்தம் லேன்னாக்கூடப் பாட்டு படத்தோட தலைவி நிர்ணயம் செய்யற மா இன்றைய நிலைமை... டான பாட்டோட முதல் வரி அந்த டைரக்டரோட அடு படத்துக்குத் தலைப்பாயிடு

ஜெயந்தி : ஒரு படம் ந இல்லேன்னாக்கூடப் பாட்டு நல்லா இருந்தா பார்ப்பீங்க

ராஜேஷ் : கண்டிப்பா... தனை பாட்டுகள் இருந்தா



பத்மினி

டானா அதுக்காகவே படம் ப்போம்.

விச்சந்தர் : பாட்டுகள் ஆகிறதே மாணவர் லதான்.

ராஜேஷ் : புதுசா அழகா ராயின். ஒருவர் அல்லது ண்டு பேர் கிளாமரஸ் ஆக ந்தா அவங்களுக்காகவும் ம் பார்ப்போம். ஹீரோ, ந கமாராக இருந்தாக்கூடப் தும். நாலு பசங்களை அழகான ஹீரோயினோட ந்துட்டா ஹிட் ஆயிடும்.

னாட்சிசுந்தரம் : காமெடி?

விச்சந்தர் : காமெடி போ ரொம்ப சீப் ஆக க்கு.

மா :பெண்களையெல்லாம் ம்ப சீப்பாக எக்ஸ்ப்ளாய்ட் கிறார்கள். தமிழ் சினிமா ... ஒளியும், ஒலியும், நம்ப ண்ட்ஸ்கூட உக்காந்து க்கற மாதிரியில்லே. நிறைய ல் வரிகள் எல்லாம் ாம்.

விச்சந்தர் : பெண்கள் எப்படி இருக்காங்களோ துபோதான் சினிமால டறாங்க.

யத்ரி : நோ! நான் ஒத் வே மாட்டேன். எல்லாம் கைப்படுத்திக் காட்டற சமா ந்தான்.

ஜெயந்தி : கல்லூரி மாணவ களையெல்லாம் சினி ல ஃபாலோ பண்றாங் கறது ஒரு பொதுவான த்து. நிஜவாழ்க்கைலேர்ந்து டுபட்டிருக்கிற சினிமாவை நம்புறீங்களா?

ராஜேஷ் : ஒரளவுக்கு ப்பு இருக்கும். ஹேர் டல், டிரெஸ் இதெல்லாம்.

ஜெயந்தி : எங்கோ பத்து ம் நடக்கிறதைப் பெரி க்கி நூறு சதவீதமாக்கி, சொஸைட்டியைப் பத்தித் தவறான கருத்துகள் தருகிறாப் பல சில படங்கள் இருக்கு.

மீனாட்சிசுந்தரம் : சமூக நியதிகள்லேர்ந்து மாறுபட்ட, அந்த நியதிகளுக்கு எதிரான ஒருத்தனை ஹீரோவா சில படங்கள்லே உருவாக்கறாங்க.

ராஜேஷ் : நாம சொன்னதினால யாரும் மாத்தி எடுக்கப் போறதில்லே. படம் ஹிட்டாகுமான்னுதான் பார்ப்பாங்க.

காயத்ரி : யாராவது எப்பவாவது ஒரு புது முயற்சி செய்துதான் ஆகணும்.

ஜெயந்தி : இப்படிப் படம் எடுக்கறதே ஒரு சமூக விரோதச் செயல்னு நான் நினைக்கிறேன்.

ரவிச்சந்தர் : சமூகத்திலே எங்கெங்கே தப்பு நடக்கறதுன்னு தெரிஞ்சுக்கறதும் ஒரு விதத்திலே நல்லதுதானே?

ராஜேஷ் : படத்தோட இறுதியிலே நல்லது ஜெயிக்கிற மாதிரி தானே காண்பிக்கிறாங்க. அப்படி ஒரு ஆன்டி ஹீரோவைக் காண்பிக்கறப்போகூட அவன் தன்னைச் சுத்தியிருக்கறவங்களுக்கு நல்லது செய்யறதுனாலே உதாரணமா - நாயகன் படத்தை எடுத்துக்குவோம். அவனை குணங்கள் ஏத்துக்கறதா காண்பிக்கறாங்க.

ஜெயந்தி : சுத்தி வளைச்சு ஒரு மஃபியா குரூப்பை ஆதரிக்கிற மாதிரி இருக்கு. நாமளே சட்டத்தைக் கையிலே எடுத்துக்க முடியாது. இப்ப படங்கள்லே சட்டத்தை ஹீரோ தானே யூஸ் பண்ற மாதிரி கதைகள் எடுக்கறாங்க.

ராஜேஷ் : இந்தியாவில் கோர்ட், கேஸ்னு போனா எவ்வளவு தாமதம் ஏற்படறதுன்னு மக்களுக்குத் தெரியுமே.

உமா : இதையெல்லாம் பார்த்துட்டு அதே மாதிரி நடக்க ஆரம்பிக்கறவங்களும் இருக்காங்களே.

ஜெயந்தி : இந்த மாதிரி படங்கள்லே என்னதான் நியாயத்துக்காக அக்கிரமங்களை ஒருவன் செய்யறதா காண்பிச்சாலும், அவனும் முடிவில் தோற்கிறதாகக் காட்டணும். அது மாத்திரம் இல்லே. போலீஸ் ரொம்ப அட்டூழியம் பண்றதா இப்பல்லாம் சினிமால காட்டறாங்க. அதனால போலீஸ்னா ரொம்ப மக்களுக்குப் பயமாயிட்டுது. நம்முடைய பாதுகாப்புக்கு ஏற்பட்ட ஒரு துறையை இப்படிக்கேவலமாவும், அராஜகமாவும் சித்திரிக்கிறது தேவைதானா?

காயத்ரி : இல்லேன்னா, மட்டமான காமெடியா போலீஸை சித்தரிக்கிறாங்க.

ராஜேஷ் : திறமையாக செட் போடறவங்க அதாவது ஆர்ட் டைரக்டருக்கும் படத்தோட வெற்றியிலே பங்கு உண்டு. நாயகன் படம் "செட்"னு சொன்னா நம்புவாங்களா?

ஜெயந்தி : "அஞ்சலி" படத்துல கூட ஒரு ஃப்ளாட்டோட "எலிவேஷன்" திறமையான முறையில போடப்பட்டு இருந்திச்சு.

ரவிச்சந்தர் : சில ஆர்ட் டைரக்டர்கள் அந்தந்த "பீரியட்"க்குத் தகுந்தாப்பல எஃபெக்ட் கொண்டு வராங்க.

மீனாட்சிசுந்தரம் : கொஞ்சம் கூடக் கோட்டைவிடாம, சின்னச் சின்ன விஷயங்களைக்கூடக் கவனமாக செய்யறாங்களா?

ரவிச்சந்தர் : கமலஹாசன் ரொம்ப அக்கறை எடுத்துப் பண்றார்னு நான் நினைக்கிறேன்.

ஜெயந்தி : இன்னும் கொஞ்சம் ரிஸர்ச் எல்லாம் செய்து ஆதன்டிக்கா எடுக்கலாம்ங்கறது என் கருத்து. தெலுங்குல

"தாசி"ன்னு ஒரு படம். கொஞ்சம் கொத்தடிமைகள் டைப் கதை. செட், காஸ்ட்யூம் எல்லாம் நேச்சுரலாக இருந்திச்சு.

உமா : மலையாளத்தில் சுவாதித் திருநாள் படம்கூட அப்படித்தான்.

ரவிசந்தர் : டைரக்டர் கே. பாலசந்தர் வித்யாசமாக பிரெசன்ட் பண்றார்.

ராஜேஷ் : "அழகன்" படத்துல கூடக் காதலர்கள் பேசிக்கற நேரத்தை டி.வி. நிகழ்ச்சிகள் மூலம் புதுமையாகச் செய்தார்.

ஜெயந்தி : பாரதிராஜாவும் "என் உயிர்த் தோழன்" படத்தில் சேரி வாழ்க்கையை அப்பட்டமாக எடுத்துக் காட்டினார்.

காயத்ரி : "வீடு" படம்கூட யதார்த்தமா, இன்றைய பிரச்னைகளோட ஒத்துப் போறதா இருந்தது.

மீனாட்சிசுந்தரம் : பொதுவா மக்கள் இதைத்தான் விரும்ப'றாங்கன்னு சொல்லி சில படங்களை நம்ம தலையில் கட்டறாங்க. மாறுபட்ட படம், சங்கராபரணம். நல்லா ஓடல்லியா?

ஜெயந்தி:மற்ற மொழிகள்லே வெற்றி அடைஞ்ச படங்களைத் தமிழ்லே கொடுக்கறப்போ சென்டிமெண்ட்டுக்காக நிறைய மாத்திடறாங்க. ஒரிஜினல் கதையிலேர்ந்து விலகிடறாங்க.

ராஜேஷ் : "மார்கெட்டிங் ஏரியா" தமிழ்ப் படங்களைப் பொறுத்தவரை ஜாஸ்தி. அதனாலயும் இருக்கலாம். எல்லா அடியன்ஸும் பார்க்கிற மாதிரி குடுக்க வேண்டிய கட்டாயமா இருக்கும்.

ரவிச்சந்தர் : இந்தியாவில விதவிதமான கலாசாரத்தோட ஜனங்கள் இருக்கிறதால அந்தந்தக் கலாசாரத்துக்கு



'நாயகன்'
படத்தில் கமலஹாசன்

ஏத்தாப்பல காட்சியை மாத்த வேண்டியிருக்கு.

மீனாட்சிசுந்தரம் : இதே நம்ம ஊர்ல தானே மற்ற மொழி வெற்றிப் படங்களும் நூறு நாள் ஓடுது? யார் இதையெல்லாம் முடிவு பண்றாங்க?

உமா : நம்ம. டைரக்டர்கள் பாணியை பார்த்துப் பார்த்து நமக்கு ஸ்லோ போடா பழகிட்டுது.

மீனாட்சிசுந்தரம் : குடும்பப் படம்னா அதில ஏன் ஒரு காபரே டான்ஸும், அனாவசிய சண்டைக் காட்சிகளும் வரணும்?

ராஜேஷ் : எனக்கு ஆக்ஷன் பிடிக்கும். பாடல்கள் பிடிக்கும்.

ஓரளவு குடும்பக் க...
பிடிக்கும். எல்லாம் இரு...
மூவியை நான் ரசிக்கிறே...

ஜெயந்தி : அப்ப தேங்...
கறிகாய் எல்லாம் இரு...
சுவையில்லாத அவியலா ...
ஆயிடுது?

காயத்ரி : எல்லா வெ...
யும் சாப்பாட்டுலே இ...
நல்லதுதானே! நேரே ஜட்...
திகட்டுமே! ஆனா இ...
கொஞ்சம் சென்டிவ்...
ரொம்ப நம்ப முடி...
இல்லாம, கொஞ்சம் நேச...
இருக்கலாம்.

உமா : நம்ம வாழ்க்...
நடக்கிற சம்பவங்களை ...
னாப்பல கதை இருக்கணு...

ராஜேஷ் : அதே சம்பவங் ளை மீண்டும் திரையில ர்க்கறதுலே என்ன லாபம்? ாஞ்சம் கற்பனையை மிகைப் த்தித் திரையில் பாக்கறது பில்லையே!

ஜெயந்தி : ஆனா அதை பத்தம் ஆக்கக்கூடாது ல்லியா? எல்லா ஆடியன்ஸை ் திருப்திப் படுத்தறப்போ ரொம்ப செயற்கையா ஆயி டு. அதனாலதான் சில ங்கள் "கிளிக்" ஆகாமப் ாயிடறது.

காயத்ரி : ஆங்கிலப் ங்கள்லே அந்தந்த ஊர்லே ன்ன நடக்கிறதோ அதைக் ட்டறாங்க. சிலது நம்ப டியாத காட்சிகள்.

ராஜேஷ் : அதே படத்தை ங்கே சென்னையிலும் ரசிக்கி ாமே.

ஜெயந்தி : அங்கே விண் ளிப் படங்கள், சயன்ஸ் க்ஷன் படங்கள் எல்லாம் டுக்கறாங்க. இங்கே அப்படி டுத்தாலும் குடும்ப சென்டி மெண்ட் புகுத்திடுவாங்க.

ரவிச்சந்தர் : புது வஞ்ச்சர்" எதுவாயிருந்தாலும் ப்போம். வீட்டுப்பிரச்னை ள மறக்க சினிமா ஒரு பாக்கேஷன். "பேசும் படம்" வற்றிகரமா ஓடலியா?

மீனாட்சிசுந்தரம் : இந்தியா லே சண்டைப் படங்கள் தாவது போர் சம்பந்தப்பட்ட டங்கள் ரொம்பக் குறைவு. றைய ஹிந்திப் படங்கள் கூட ர ஃபார்முலாவைச் சுத்தி ற மாதிரியேதான் இருக்கு.

ராஜேஷ் : போரின் பாதிப்பு ங்கே இந்தியாவிலே அதி ம் இல்லாததால் இருக்க ாம். ஹிந்திப் படங்களும் பாட்டுகள்னால நிறைய ஓடுது.

காயத்ரி : இசைக்கருவிகள், ஸ்டீரியோ இவையெல்லாம் ஒரு பாட்டோட இயற்கையான அழகைப் · பாதிக்குதோன்னு தோணுது.

ரவிச்சந்தர் : பாட்டு இனிமையா இருந்தால் போதும். எப்படிப் பதிவு செய்தா என்ன?

காயத்ரி : "அபூர்வ சகோதரர்கள்" படத்திலே அவுங்க எப்படி கஷ்டப்பட்டு எடுத்தாங் கன்னு காண்பிச்சிருக்கலாம்.

ராஜேஷ் : ஒரு ஜாக்கி சான் படத்தில படத்தோட முடிவுலே அப்படிக் காண்பிச்சாங்க.

ரவிச்சந்தர் : தேவையில்லே. அப்படி எடுத்தா படத்தோட ரியாலிடி போயிடும். அதாவது அதனோட கவர்ச்சி போயிடும்.

ராஜேஷ் : இல்லே. கஷ்டப் பட்டு எடுத்திருக்காங்களேன்னு சில பேர் பார்க்க வரலாம்.

ஜெயந்தி : டப்பிங், ஆடியோ சிஸ்டம் எல்லாம் ரொம்ப அட்வான்ஸ்டா இருக்கு.

மீனாட்சிசுந்தரம் : அந்தக் காலத்துப் புகழ்பெற்ற ஹீரோயின்கள் சிறப்பான நடன மணிகளாகவும் இருந்தாங்க. இப்ப யாரும் அப்படி இல்லேன்னு ஒரு கருத்து.

ரவிச்சந்தர் : நடிகர்கள்லே கமலஹாசன் நடனத்திலே ரொம்ப கிரேஸ்ஃபுல்.

ராஜேஷ் : சிரஞ்சீவியும் நல்லா டான்ஸ் பண்றார்.

ஜெயந்தி : மலையாளப் படங் கள்லே அவ்வளவா மசாலா, டான்ஸ் எல்லாம் இல்லாம சாணக்கியன் போலப் படங்கள் எல்லாம் ஹிட்... ரசிக்க முடியுது.

உமா : ஹிஸ் ஹைனஸ் அப்துல்லா, அய்யர் தி கிரேட் இதை எல்லாம் கூடச் சொல்ல லாம்.

ராஜேஷ் : சில படங்கள் ஜாதி பிரச்னையை அனாவசியமாத் தூண்டுகிற மாதிரி இருக்கு.

ஜெயந்தி : சமூகப் பிரச்னை களை எடுத்துச் சொல்ற படங்களும் தமிழ்லே இல்லாம இல்லே. தண்ணீர் தண்ணீர் படம் ஒரு சமூக பிரச்னைக்குப் பாஸிடிவ் ஆக முடிவு கொடுத் திருந்தாப்பல பாலசந்தர் எடுத் திருந்தார்.

மீனாட்சி சுந்தரம் : நீங்க படம் எடுத்தா என்ன மாதிரி எடுப்பீங்க?

ராஜேஷ் : நிறையப் பாட்டு, கவர்ச்சியான கதாநாயகிகள், நல்ல காமெடி, சூப்பர் சண்டைக் காட்சிகள் இவற் றுக்குத்தான் முதலிடம். ரெண்டு ஹீரோயின் இருக்கிற படம் தான் எடுப்பேன். சுமாரான கதை போதும்.

ஜெயந்தி : ஒரிஜினலான, நல்ல கிரிஸ்பான ஒரு கதையை எடுத்து, அதை விட்டு விலகிப் போகாமல் விறுவிறுப்பான சம்பவங்களோட எடுப்பேன். அது மாதிரிவேறமொழிப்படம் எல்லாம் இங்கே வந்து நல்லா ஓடறதைப் பார்க்கிறேனே.

காயத்ரி : ஒரு ஸென்ஸிடிவ் படத்தை, ஒரு சில இனிமை யான பாடல்களோட சிறப்பான டைரக்ஷனோட எடுப்பேன்.

உமா : மனித உணர்ச்சி களுக்கு மதிப்பளித்து, நல்ல தேக்கமில்லாத கதையா ஒண்ணு ரெண்டு பாட்டுகளோட எடுப்பேன்.

ரவிச்சந்தர் : வித்தியாசமா மத்தவங்கள்லேர்ந்து மாறுபட்டு எடுப்பேன். ஏன்னா படம் பார்க் கிறது வேறே, எடுக்கிறது வேற இல்லியா?

படங்கள் : உத்ரா

ஏற்பாடு : திரு. கணேசன்.

கத்தரித்தது ஒட்டியது

நாடோடி



அர்ஜன்டினாவில், பெரான் என்பவர் எதேச்சாதிகாரியாக இருந்த காலத்தில், இப்படி நடந்ததாக வேடிக்கையாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

அர்ஜன்டினாவின் தலை நகரான புவனஸ் அயர்ஸில் ஒரு டிராம் வண்டி போய்க் கொண்டிருக்கிறது. அப்பொழுது ஒரு பிரயாணி சர்க்காரைக் கன்னா பின்னாவென்று வைகிறார். "அயோக்கியத் தனமான சர்க்கார், அக்கிரமமான சர்க்கார், இப்படிச் செய்த சர்க்கார், அப்படிச் செய்த சர்க்கார்" என்று கன்னா பின்னாவென்று வைகிறார்.

டிராம் நின்றதும் இவர் கீழே இறங்குகிறார். உடனே, அவர் பின்னாலேயே இறங்கின ஒரு போலீஸ்காரர் இவரைப் பிடித்து நிறுத்தி, "உம்மைக் கைது செய்யப்போகிறேன். நீர் நம் சர்க்காரைக் கன்னா பின்னாவென்று வைதது குற்றம்" என்று சொல்லுகிறார்.

அதற்கு அந்தப் பிரயாணி, "நான் நம் அர்ஜன்டினா சர்க்காரையா வைதேன்? அமெரிக்க சர்க்காரை அல்லவா வைதேன்" என்கிறார்.

இதைக் கேட்டதும் அந்தப் போலீஸ் அதிகாரி சற்றுத்தடுமாற்றம் அடைகிறார். பிறகு அவர் சமாளித்துக்கொண்டு, "ஊஹூம்! நீர் அமெரிக்க சர்க்காரை வைதிருக்க முடியாது. ஏனெனில் நீர் சொன்னது போன்ற அக்கிரமமான சர்க்கார் இரண்டு இருக்க முடியாது" என்றார்.

✱

கல்லூரி புரஃபஸர் : மாணாக்கனைப் பார்த்து எனக்கா ஞாபக மறதி என்று சொன்னாய்? இந்தக் கல்யாணத்திற்குப் போன நான், என் குடையை ஞாபகமாக எடுத்துக்கொண்டு வந்ததோடு, நீ மறந்துவிட்ட உன் குடையையும் அல்லவா எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன்!

மாணாக்கன் : நாம் இருவரும் கல்யாணத்திற்குப் போன போது, குடையே எடுத்துக் கொண்டு போகவில்லை.

✱

ஒரு குஸ்திப் பயில்வான் இருக்கிறார். அன்று மாலை அவர் ஒருவரோடு குஸ்தி போட வேண்டும். அவர் என்ன செய்கிறார் என்றால், அன்று காலையிலிருந்தே அதற்காகப் பயிற்சி செய்துகொள்ள ஆரம்பிக்கிறார். தன் தகப்பனாரோடு குஸ்தி போட்டு, அவர் மண்டையை உடைக்கிறார். பிறகு தன் தமையனாரோடு குஸ்தி போட்டு, அவர் மண்டையையும் உடைக்கிறார். பிறகு நண்பனோடு சண்டைபோட்டு, அவன் மண்டையையும் உடைக்கிறார். இதனால் என்னஆகிறது என்றால், மாலையில், நிஜ குஸ்திச் சண்டை · ஆரம்பிப்பதற்கு முன்னர், இவர் களைத்துப் போக, நிஜ குஸ்தியில், எடுத்த எடுப்பிலேயே தோற்றுப் போய் விடுகிறார்.

வாழ்க்கையில் பின்னால் நேரப் போகும் நிகழ்ச்சிகளைக் குறித்து, நாம் முன்னாலேயே கவலைப்படுவது இதைப் போலத்தான் இருக்கிறது. அந்த நிகழச்சி நிகழ்வதற்கு முன்னர் அதை எண்ணி, எண்ணி மனம் களைத்துப்போக, கடைசியில் நிகழ்ச்சி நேரும்போது, அதைச் சமாளிக்க முடியாத நிலையில் இருக்கிறோம்

✱

"சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே!" என்று பாடினார் பாரதியார். சங்க நாதத்துக்கு நம் நாட்டில் என்றுமே மதிப்பு உண்டு. கோயில்களில் சங்கு ஊதும் வழக்கம் உண்டு. பூஜையின் போதும் சங்கு ஊதும் வழக்கத்தைச் சிலர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சங்கொலியினால் உண்மையிலேயே ஒரு விதத்தில் வெற்றி கிடைக்கிறது என்கிற விஞ்ஞான உண்மை நம்மில் பலருக்குத் தெரியாது.

இந்த உண்மையைக் கண்டு பிடித்தவர்கள் பெர்லின் சர்வ கலாசாலையில் இருந்த சில விஞ்ஞானிகள். இதை இவர்கள் 1928 ஆம் ஆண்டிலேயே கண்டு பிடித்தனர். அந்த விஞ்ஞான உண்மை என்ன, தெரியுமா?

சங்கொலியினால் தொத்து நோயைப் பரப்பும் பாக்டீரியா கிருமிகள் அழிகின்றன என்பது தான் அந்த உண்மை. ஃ

கங்காபுரிக் காவலன்

16. இன்னொரு பாட்டு!

இராசேந்திர சோழ தேவரின் பிறந்த நாள், திருவாதிரைத் திருநாள் இந்த ஆண்டு தஞ்சை பெரிய கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று வழக்கம் போல் இராசராச நாடகம், நாட்டிய நாடகம் நடைபெற்றது. இராசராசர் விழாவிற்கு வந்திருந்தார். பட்டத்தரசியும், இளவரசிகளும், திருச்சுற்றிலுள்ள மேல் மாடத்தில் அமர்ந்திருந்தனர். முழுமதி வானில் தண்ணிலவைப் பொழிய, விளக்குக் கம்பங்களில் தீவர்த்திகளின் ஒளி நிலவொளிக்கு உதவ, நாடக சாலை மண்டபத்தில் இராசராச விஜயம் நாடகம் நடிக்கப்பட்டது.

முரசும், மத்தளமும், உடுக்கையும் முழங்க சகடையும், சரடிகையும், உவச்சப் பறையும், முரலியம், வங்கியம், பாடலியம், சங்கும் ஒலிக்க வீணையும் யாழும் இன்னிசை எழுப்ப இராசராசன் பெருமை கூறும் நாட்டிய நிகழ்ச்சியில் அவர் வீரமும், புலமையும், இறைப் பற்றும் சித்திரிக்கப் பட்டன.

நாடகம் முடிவடைந்தது. பல ஆண்டுகளாக அந்த நாடகத்தை முன்னின்று நடத்திவரும் ஹாஸ்யன் விக்கிரமாதித்த அச்சன் தன் தள்ளாத வயதிலும் உற்சாகத்துடன் சுவை குன்றாது நடத்தினான். அடுத்த ஆண்டு கலந்து கொள்ள இயலுமா என்ற ஐயம் ஏனோ அவன் உள்ளத்தில் எழுந்தது.

நாடகம் பார்க்கும்போது இராசராசருக்கும் பழைய நினைவுகள் ஒவ்வொன்றாகத் தோன்றின. இப்போதெல்லாம் தனக்கு நினைவாற்றல் குறைவதை அவரே உணர்ந்தார். நிகழ்ச்சி முடிவில் பல ஆண்டுகள் இராசராச நாடகத்தை முன்னின்று நடத்தியதற்கு அச்சனுக்குச் சிறப்புச் செய்ய விரும்பினார். இராசராச நாடகப் பெரியன் என்ற பட்டத்தையும், பொன்னையும், மணியையும் அளிக்க முடிவு செய்தார்.

தன் புதல்வன் இராசேந்திரனை அழைத்து, விக்கிரமாதித்த அச்சனுக்குப் பெரும் பரிசுப் பட்டமும் வழங்குமாறு கூறினார்.

இராசேந்திரன் சற்றுத் திகைத்தார். சக்ரவர்த்தி இருக்கும்போது நான் பாராட்டுவதா?'

"இராசேந்திரா! உன் கரத்தால் இந்தப் பட்டத்தை அவனுக்கு அளித்துச் சிறப்பு செய். அடுத்த ஆண்டு நான் இருந்து அவனுக்குச் சிறப்புச் செய்வேன் என்பது சந்தேகமே. எனக்குப் பிறகு அவனை நீ ஆதரித்து இந்த நாடகத்தை இடையறாது நடத்த வழிவகை செய்ய வேண்டும்" என்றார், இராசராசன் மீண்டும், இராசேந்திரனின் ஐயத்தைப் போக்கும் வகையில்.

வீரமாதேவி அந்த நாடகத்தை மிகவும் கூர்மையாகக் கவனித்தாள். நூற்றுக்கணக்கானவர் அரங்க மேடையில் அமர்ந்திருப்பதைக் கண்டாள். நாட்டியமாடும் பெண்களையும், அவர்கள் அணிந்திருந்த ஆடையையும், அவர்கள் செய்திருந்த ஒப்பனையையும் குறிப்பாகக் கவனித்தாள். அவர்களுடைய விழிகளின் அசைவையும், துள்ளி ஆடும் நளினத்தையும் அவள் குறிப்பாக நோக்கினாள். சோழ நாடு நாட்டியக் கலையை வளர்க்கும் சிறப்பைமனத்துக்குள் புகழ்ந்தாள். அவர்களையெல்லாம் எங்கோ கண்டிருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. நினைவுபடுத்திக் கொள்ள முயன்றாள்.

அவள் தனியே அமர்ந்து இராசராச நாடகத்தை ரசித்துக் கொண்டிருந்தாள். தன் அருகே இளவரசர் வந்தமர்வார் என்று ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்தாள்.

இராசேந்திரன் மற்ற இளவரசிகள் சூழ வீற்றிருந்து நாடகத்தை மெய்மறந்து ஆனந்திப்பதைக் கண்ட வீரமாதேவிக்கு வருத்தம் ஏதும் ஏற்படவில்லை. அவர்களுக்குப் பிறகு

விக்கிரமன்

தானே அவருக்கு தான் சொந்தம் என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டாள். நாடகம் முடிவதற்குச் சற்று முன்பே அவள் அங்கிருந்துப் புறப்பட்டுவிட்டாள். ஒரே ஒரு காவல் வீரன் அவளுக்குத் துணையாக சிவிகையுடன் வந்தான்.

இரவு நடுச் சாமம் கழித்தே இராசேந்திரன் வீரமாதேவி வசிக்கும் இல்லத்திற்கு வந்தார்.

நாடகத்தை அவளுடன் இருந்து காணாததற்காக வீரமாதேவி வருத்தமுற்றிருக்கப் போகிறாள் என்று எண்ணி வந்தவருக்கு, அவள் அளித்த குதூகலமான வரவேற்பு வியப்பை அளித்தது.

"வருக வருக சோழநாட்டு இளவரசரே, வருக! கடாரங்கொண்ட பெரு வீரரே, வருக! வருக!" என்று ஓடிவந்து இரு கரம் நீட்டி வரவேற்றுச் சிறு குழந்தைபோல் தழுவிக்கொண்டாள்.

மேனியெங்கும் பருவ எழில் கோலமிட்டிருக்கும் அந்தப் பெண்மயிலின் ஆலிங்கனத்தால் இராசேந்திரனுக்கு மெல்லிய அதிர்ச்சி ஏற்பட்டது. 'இவளைப் புரிந்து கொள்ள முடியவில்லையே?'

இராசேந்திரனின் உள்ளத்துணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் முகத்தை நோக்கி கிண்கிணி ஓசைபோல் சிரித்த வீரமாதேவி, "நேற்று நான் எடுத்த முடிவிற்கு நேர் மாறாக என் நடவடிக்கை இப்போது இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? நான் இப்போது உங்கள் குழந்தை. சிறிது நேரத்தில் உங்களுக்கு ஆலோசனை வழங்கும் ஆசானாவேன். பிறகு உங்கள்



தோழியாவேன். ஆனால் என்றும் உங்கள் பத்தினி என்பதை மறந்து விடாதீர்கள்" என்று கூறி மீண்டும் கலகலவெனச் சிரித்தாள்.

புரியாத புதிராக விளங்கும் வீரமா தேவியை மெல்ல அணைத்தவாறு, நடுக் கூடத்தை அடைந்தார். அஞ்சாநெஞ்சத் தோடு போர்க் களத்தில் சமர் புரியும் அவர் கரங்கள் ஏன் நடுங்குகின்றன?


"இளவரசரே! நான் நேற்று ஒன்று சொன்னேனே நினைவிருக்கிறதா?" என்று வீரமாதேவி அவர் மார்பில் முகம் புதைத்தவாறு கேட்டாள்.

"நேற்று நீ கூறியது ஒன்றா இரண்டா?" இராசேந்திரன் அவளை இறுக அணைக்க முயன்றார்.

மெல்ல அவர் பிடியினின்று விடுபட்டு, "கனவு ஒன்று கண்டதாகக் கூறினேனே அதை மறந்துவிட்டீர்களா? தங்கள் பெருமை சூரிய சந்திரர் உள்ளமட்டும் அழியாது இருக்கும் என்று சொன்னேனே, அதற்குள் மறந்துவிட்டீர்களா?"

'ஆம்' என்பதற்கு அடையாளமாகத் தலை யசைத்தார் இராசேந்திரன்.

இந்த அழகு மங்கையின் இதயத்தில் இப்படி ஓர் ஆசையா? என் புகழும் பெருமையும் காலாகாலத்திற்கு நின்று நிலவவேண்டும் என்பதில் இவளுக்கென்ன இவ்வளவு ஆசை? வீரமாதேவியின்



ஆர்வத்தை எண்ணி வியப்படைந்த இராசேந்திரன் அவளுடைய உற்சாகத்தைக் குறைக்க விரும்பாதவராய், "ஆகா; அப்படியே செய்து விடுவோம். என் இலட்சியமும், கனவும் அதுதான்" என்றார்.

"உங்கள் தந்தையை உலகம் போற்றுகிறது என்பதன் காரணம் இப்போது புரிகிறது. நாட்டிய நாடகம் அவர் வாழ்க்கையை விவரிக்கிறது. பெரிய கோயிலில் உள்ள சித்திரமும், சிற்பமும் அவர் புகழை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு உலகுக்கு நினைவுபடுத்தியவாறிருக்கும். என் ஆருயிரே! அவை போன்று நீங்களும் ஓவியக் கூடம் அமைக்க வேண்டும். நடனக் கலையின் சிறப்பை விளக்கச் சிற்பங்கள் படைக்க வேண்டும். அப்படியொரு மகத்தான கலைக்கோயிலை நீங்கள் உருவாக்குவதாக நான் கனவு கண்டேன். இன்று இராசராச நாடகத்தைப் பார்த்தவுடன் என் எண்ணத்திற்கு மேலும் உறுதி ஏற்பட்டது".

சிறு குழந்தைபோல் அவள் கரம் கொட்டிக் குதித்து, "என் கனவு நனவாகப் போகிறது. அதற்காக சகல தியாகங்களும் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றாள் வீரமாதேவி. அவள் விழிகளில் மின்னிய ஆர்வ ஒளியைக் கண்ட இராசேந்திரன், "என் அன்பிற்கினியவளே! எந்த நிகழ்ச்சியை நாம் சித்திரமாக வரைவது? சிற்பமாக எதை வடிப்பது?" என்று கேட்டார். தொடர்ந்து, "வீரமாதேவி! பெரியகோயில் என் தந்தையின் பரந்த மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டு. அவர் போர்க்களத்தில் கழித்த நேரத்தைவிடக்கலைக்கூடத்தில் சிந்தித்து வாழ்ந்த நேரமே அதிகம். அவரைச் சுற்றி எப்போதும் ஓவியர்கள், சிற்பிகள், நடன மாதர்கள், நடன ஆசிரியர்கள், அவருக்கு உறுதுணையாக இருந்து யோசனை கூறுவார்கள். நானும் அவரருகே இருந்து கவனித்த காலமுண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக என் தந்தை செய்த முன்பிறப்பு புண்ணியம் நம்பியாண்டார் நம்பியும், கருவூர்த் தேவரும் அவர்கள் வழிகாட்டுதல்களால் அவர் பக்தியையும், கலையையும் வளர்த்தார்" என்றார்.

வீரமாதேவி இப்போது தன் அழகிய விழிகளை மூடிக்கொண்டாள். மூடிய விழிகள் தாமரை மொட்டுகள்போல் காட்சியளித்தன. மதி வரக் கண்டு மூடிய தாமரையின் உள்ளே கருவிழிகள் சிக்கியதுபோல் அவை காட்சியளித்தன.

மதியின் உதயம் கண்டு மூடிய தாமரைக் குள்ளே சிக்கிய கருவண்டுகள்போல் மூடிய இமைக்குள்ளே கருவிழிகள் இருப்பதை அவர் கற்பனை செய்து கொண்டார். இராசேந்திரன் மெல்ல "ஆஹா..." என்று பரவசப்பட்டுக் கூறினார்.

அவள் விழிகளைத் திறக்காமலே, "எதைக் கண்டு ரசித்துப் பாராட்டுகிறீர்கள்?"

"விழிகள் மூடியிருக்கின்றன. அதன் வடிவம் என்னைக் கவிபாட வைத்துவிடும் போல் தோன்றுகிறது. செவ்விதழ்கள் ஏதோ முணுமுணுக்கின்றன. என்ன நினைக்கிறாய் வீரமாதேவி?"

"கருவறையின் திருச்சுற்றிலே நான் பல அரிய காட்சிகளைக் கண்டேன். அந்தச் சித்திரங்கள் எதை உணர்த்துகின்றன என்று எனக்கு விளங்கவில்லை என்றாலும், ஆகா! அந்த உயிர்ச் சித்திரங்களின் வடிவழகைப் புகழ்வதா? வண்ண நேர்த்தியை எண்ணி வியப்பதா?

"மிகக் குறுகிய இடத்தில், ஓவியங்களை எவ்வாறு அமைத்து சுவர்க்க புரியை அங்கே படைத்தார்கள்? நான்கு தந்தங்களுள்ள யானையின் கம்பீரத்தைப் புகழ்வதற்கு வார்த்தைகள் இல்லை. அந்த யானைமீது போர்த்தப்பட்டிருக்கும் துகிலின் வேலைப்பாட்டைப் புகழ்வதா? அந்த யானையின் மீது ஓர் ஆடவர் கையிலுள்ள தாளத்தினால் தாளம் போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கிறார். பாடிக் கொண்டிருக்கிறார். அவர் யார்? அவர் அருகே குதிரை மீது அமர்ந்து ஒருவர் விரைகிறார். வான் உச்சியில் கந்தர்வர்கள் கூட்டங் கூட்டமாக விரைந்து வருகிறார்கள். சிலர் இசைக் கருவிகளை மீட்டுகிறார்கள். ஏன் அப்படிச் செய்கிறார்கள்?"

"ஒவ்வொரு சித்திரத் தொகுதியும் கதையொன்றைச் சொல்லுகின்றன. நீ இப்போது விவரித்தது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருச்சரிதத்தில் ஒரு பகுதி. அவர் சிவபெருமானைக் காண, கயிலை நோக்கி வெள்ளை யானை மீது செல்கிறார். அவர்

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

லிப்கோவின்
மகத்தான வெளியீடுகள்!

கீர்த்தனாசார்ய ஸ்ரீ உ.வே.
C.R. ஸ்ரீநிவாஸய்யங்கார்
அவர்களின்



ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

தமிழ் வசனம் ◆ ஐந்தாம் பதிப்பு

பாலகாண்டம் முதல் யுத்த காண்டம் முடிய இரண்டு பாகங்களில் மொத்தம் 1800 பக்கங்கள்

2 பாகங்களும் சேர்ந்து ரூ. 150

சலுகை விலை ரூ. 125; தபாலில் பெற விரும்புவோர் ரூ. 144 (M.O. அல்லது டிராஃப்ட்) அனுப்புக.
ஆங்கில வசனம் : 2 பாகங்களும் சேர்ந்து ரூ. 250. சலுகை விலை ரூ. 200; தபாலில் ரூ. 220.

லிப்கோ வெளியீடுகளில் மேலும் சில :

1. ஸ்ரீராகவ - யாதவீயம்	ரூ. 6
2. ரகுவம்ச மஹாகாவ்யம்	ரூ. 75
3. கம்ப ராமாயணம் - வசனம்	ரூ. 18
4. ஸ்ரீ C.R.S. ஸுந்தரகாண்டம் - வசனம்	ரூ. 27
5. ஸகல காரிய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் - ஸ்தோத்ரமாலையுடன்	ரூ. 20
6. தசா புக்திகளும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் - தசை ஒவ்வொன்றும்	ரூ. 2
7. ஸ்ரீரங்க மாஹாத்ம்யம்	ரூ. 8
8. நாலாயிர திவ்வியப் பிரபந்தம் - 2 பாகங்களில் 1670 பக்கங்கள்	ரூ. 90
9. ஸ்ரீமத் பகவத்கீதை - தமிழில் மூலமும், உரையும்	ரூ. 16
10. விரத பூஜா விதானம்	ரூ. 15
11. குடும்ப ஜோதிடம்	ரூ. 15
12. ஸ்ரீ மஹா பக்த விஜயம்	ரூ. 20
13. நவக்ரஹ க்ஷேத்ர புராணம்	ரூ. 9
14. அபயாம்பிகை சதகம்	ரூ. 8
15. ஷட்பதீ ஸ்தோத்ரம்	ரூ. 2
16. நூற்றெட்டு ஸ்ரீ வைஷ்ணவ திவ்யதேச வைபவம்	ரூ. 8
17. ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ - உரையுடன்	ரூ. 5
18. Chitra - Ramayanam	Rs. 20
19. Bhagavan Ramanuja	Rs.2.50

★ 63 ஆம் ஆண்டு பொன்னான சேவை! ★

லிப்கோவின் இலவச முழு விலைப்பட்டியலுக்கு எழுதுக :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி
ரங்கநாதன் தெரு, தி.நகர்.
சென்னை - 600 017 போன் : 441538

அருகே அவருடைய உயரிய நண்பர் சேர அரசர் சேரமான் பெருமாள். அவர்களை மலர் தூவி கயிலையில் வாழும் கந்தர் வர்கள் வரவேற்கிறார்கள்.''

"அந்தக் கந்தர்வர்களுள் ஒருவர் என்னை மிகவும் கவர்ந்து விட்டார்".

"யாரவர்?"

"உங்களைப் போன்று மீசை வைத்திருக் கிறார், தலை முடியை அள்ளிச் செருகி யிருக்கிறது. அதில் பூச்சரம் தொங்கு கிறது".

இருவரும் இப்போது பெரிதாகச் சிரிக்கிறார்கள். இரவு வேளையில் சிரிப் பொலி அரைத் தூக்கத்தில் இருந்த காவலர்களைத் திடுக்கிட்டு விழித்தெழச் செய்கிறது. அருகிலிருந்த மரங்களிலிருந்து பறவைகள் சிறகடித்துப் பறந்து சென்று, பொழுது புலராததைக் கண்டு மீண்டும் கூட்டில் வந்தமர்கின்றன.

"உனக்கு ஒரு நாள் நம்பியாரூரார் என்று அழைக்கப்படும் சுந்தரர் கதையைச் சொல்கிறேன்".

"எனக்குத் தெரியும். திருவாரூரிலே அவருக்கு ஒரு காதலி. உங்களுக்கும் ஒருத்தியிருந்ததாகச் சொல்கிறார்களே!"

இராசேந்திரர் மெல்லச் சிரித்து, "என்னைப் பற்றி எல்லாச் செய்திகளையும் தொகுத்தறிந்திருக்கிறாயா?"

"என் தோழி மிகுந்த அறிவாளி. அவள் எச்சரித்தாள். உன் தலைவரிடம் பல பெண்கள் மயங்கியிருக்கிறார்கள். அவர் களுள் நீயும் ஒருத்தி என்று என்னைச் சீண்டியிருக்கிறாள். நான் அப்போதே அவளிடம் சொன்னேன், "அவர்கள் என் தலைவரின் உடலழகைக் கண்டு மையல் கொண்டார்கள். நான் அவர் உள்ளத் தடாகத்துத் தாமரையாக மலர விரும்பு கிறவள்" என்று.''

இராசேந்திரர் விழிகள் கலங்கின. நிலவொளியில் விழிக் கோளத்து நீர்த்துளி பளபளத்தது. அதைக் கண்ட வீரமாதேவி, தன் மெல்லிய விரல்களால் துடைத்தாள். முந்தானையால் அவர் மேனியில் மெல்ல அரும்பியிருந்த வியர்வையைத் துடைத் தாள்.

"நாழிகை போவது தெரியாமல் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறோமே, இதில் ஏற்படும் இன்பம் உடல் தருமா?" என்று வீரமாதேவி கேட்டாள்.

"ஓ! நான் பண்டித சோழன். என்னை விடப் பலமடங்குஅறிவாற்றல் மிக்க நீ மகா பண்டிதை! சுந்தரர் வரலாறுபோல் சிறந்த ஒன்று இல்லை. அதனால்தான் என் தந்தை,அவரது வரலாற்றைத் தேர்ந்தெடுத் தார். நான் விரும்பிப் பாடி மகிழும் பதங்களை இயற்றியவர் சுந்தரர். சுந்தரர் தேவாரங்கள் கற்றதுண்டா?"

வீரமாதேவி சொன்னாள்:"சுந்தரரின் தேவாரப் பாடல்கள் சில அறிவேன் பாடிப் பரவசமடையவும், ஆடி மகிழவும் ஏற்ற பாடல்கள். சதங்கை ஒலிக்க, கரங்கள் நெளிய, இடை துவள, விழிகள் ஆயிரம் பொருள்களை விளக்க ஏற்ற பாடல்கள்" என்று கூறி வீரமாதேவி ஒரு பாடலைப் பாடினாள்.

'கங்கை தங்கிய சடை உடைக் கரும்பே கட்டியே
பலர்க் குங்களை கண்ணே
அங்கை நெல்லியின் பழத்திடை அமுதே அத்தா
என் இடர் ஆர்க் கெடுத்து உரைக்கேன்...'

என்று பாடும்போது குறுக்கிட்ட இராசேந்திரன், 'என்னிடம் தான் உரைக்க வேண்டும்' என அவளைக் குறிப்பால் உணர்த்தி, "உனக்கு என்ன இடர் வீரமா தேவி?" எனக் கேட்டார். வீரமாதேவி மறு மொழி கூறவில்லை.

"சிவபெருமானைப் புகழ்ந்து பாடும் போதெல்லாம் கங்கையை இணைக்காமல் பாடுவதில்லையே ஏன்?" என்று கேட்டாள்.

"எனக்குக் கங்கையென்ற சொல் மிகவும் பிடிக்கும். கங்கை நதிக்கரைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் உண்டு. இந்த மண்ணுலகத்திற்குக் கங்கையைக் கொண்டு வந்த வரலாற்றைப் பலமுறை கேட்டு மகிழ்வேன்" என்றார்.

"இங்கே உங்களிடமிருந்து நான் வேறு படுகிறேன். எனக்கு முதலில் உங்களைத் தான் பிடிக்கும். பிறகுதான் கங்கையை!" என்று கூறவும் இருவரும் நகைத்தனர்.

"இன்னொரு பாட்டு" என்றார் இராசேந்திரன். வீரமாதேவி இனிய குரலெடுத்துப் பாடினாள்.

'பொன்னவன் பொன்னவன் பொன்னைத் தந்து
என்னைப் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தின் உட்
பொருளாகிய
அன்னவன் அன்னவன் ஆமாத்தூர் ஐயனை
ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என்மனத்து இன்புற்றிருப்பனே'

பாதங்கள் தரையில் தாளமிட, தானே ஆடுவதுபோல் உடல் மெல்ல ஆட அவள் பாடினாள். பாடி முடித்தவுடன் இராசேந்திரன் அவளைப் பாராட்டி, "எங்கே மற்றொரு முறை பாடு" என்றார்.

அவள் பாடினாள். இராசேந்திரர் பாட்டின் பொருளுக்கு ஏற்ப ஆடத் தொடங்கினார்.

வீரமாதேவி வியப்புடன் நோக்கினாள். சகல கலைகளிலும் வல்லவர். இவர் என்னவர் என்னவர் என்று அவள் உள்மனத்தில் ஒலி எழுந்தது.

அவளும் ஆடினாள். மேடையில் பாலும் பழமும், சுவையான உணவும் தம்மை அவர்கள் எப்போது கவனிப்பார்கள் என்று ஏங்கின. ஆடாது அசையாது சுடர் விளக்கு சிறிது நேரம் நின்றது.

கதிரவன் வருகைக்குக் கீழ்வானம் கட்டியம் கூறத் தொடங்கிவிட்டது. புள்ளினங்கள் கலகலவென ஒலியெழுப்பிப் பறந்தன.

அந்த மாளிகையின் வெளியே வீரர்கள் இருவர் வந்து மிக்க மரியாதையுடன் நின்றனர். மாளிகை அதிகாரியிடம் மரியாதையுடன் செய்தி ஒன்றைத் தெரிவித்தனர்.

அதிகாரி பரபரப்படைந்தார். மேல் மாடத்தில் இளவரசர் உறங்காது பாடியும் ஆடியும் களிப்புடனிருக்கிறார் என்பது அவருக்குத் தெரியாது.

மேல்மாடத்துக் கூடத்து வாயிலருகே வந்து கைகட்டி வாய் பொத்தி நின்று, இளவரசரிடம் காவலர்கள் கொண்டு வந்த செய்தியைத் தெரிவித்தனர்.

ஒருகணம் இராசேந்திரன் திடுக்கிட்டார். ஆனால் அதைப் புலப்படுத்திக் கொள்ளாமல், "வீரமாதேவி! மிக முக்கியமான அலுவல். சென்று வருகிறேன். நாளை நாம் ஒரு சிறு கிராமத்திற்குச் செல்கிறோம்" என்றார்.

மீண்டும் வரவிருக்கிற அன்றைய இரவையும், அதற்கு மறுநாள் பயணத்தையும் எதிர்பார்த்துக் காத்திருந்தாள் வீரமாதேவி.

தொடரும்...

தர்மராஜருக்கு உச்சிஷ்ட கணபதி யந்திரம்

● புவனேச்வரிதாசன் ●

டெல்லியில் முனிர்காவில் இருப்பவர் தர்மராஜ அய்யர். முபது வயது. சிறந்த ஜோதிடர். வாக்குப்பலிதம் உண்டு. பாரிஜாதம், சாராவளி போன்ற ஜோதிட நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். எல்லாரிடமும் சுமுகமாகப் பழகும் தன்மை உண்டு. எனவே எல்லாரையும் ஈர்க்கும் சக்தி இவரிடம் அமைந்திருப்பதில் வியப்பில்லை. கொஞ்சம்கூடக் கர்வமில்லை. குழந்தை சுபாவம் கொண்ட இவருக்கு வாழ்வில் ஒரு குறையும் இல்லை என்று சொல்லலாம். ஜோதிடப் பலன் சொல்வதற்கு யாரிடமும் பணம் கேட்க மாட்டார். அவர்களாக இஷ்டப்பட்டுக் கொடுத்தால் அதைப் பெற்றுக்கொள்வார்.

சிறுகுடும்பமாக இருப்பதால் அதற்கேற்ற எளிமையும், பண்பும் தர்மராஜ அய்யரிடமும் அவரது மனைவியிடமும் அமைந்திருந்தன. பெரிய அரசு அதிகாரிகள், பெரிய வியாபாரம் நடத்துபவர்கள் யாவரும் தர்மராஜ அய்யரிடம் நாள் குறித்துக் கொண்டு தங்களது அலுவல்களைத் தொடங்குவார்கள். ஜோதிடர் தர்மராஜய்யருக்கு, தனக்கு வாரிசாய் ஜோதிடத் துறையில் யாராவது வரவேண்டும் என்ற தணியாத அவல் இருந்தது. அதற்கேற்றாற்போல் ஏர் இந்தியா நிறுவனத்தில் பணிபுரியும் திருமதி பிரேமா சந்திரசேகரன் அவர்களுக்கு ஜோதிடத்தில் ஆர்வம் இருந்ததால் அவருக்கு ஜோதிடம் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்து, வாரிசு இல்லாத குறையையும் போக்கிக் கொண்டார்.

தர்மராஜ அய்யரின் ஜோதிடத்திறனைப் பாராட்டி சிருங்கேரி மகா சந்நிதானம், ஸ்ரீ அபிநவ வித்யா தீர்த்த ஸ்வாமிகள் சால்வை போர்த்தி 'ஜோதிட பூஷணம்' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளதை அவர் இன்றும் பெருமிதத்தோடு, எண்ணி எண்ணிக் கண்ணீர் வடிப்பார்.

தர்மராஜ அய்யருக்கு ஒரே ஒரு குறை. ஜோதிடம் சொல்வதற்கு உபாசனை தெய்வம் உச்சிஷ்ட கணபதி. உச்சிஷ்ட கணபதி யந்திரம் வைத்து, தினமும் அதற்குப்பூஜை செய்து, பின் ஜோதிடம் சொல்வது ஜோதிடர்களின் இயல்பு. தர்மராஜ அய்யருக்கு உச்சிஷ்ட கணபதி யந்திரம் யார் தருவார்கள்? இவரும் யாரிடமும் கேட்க மாட்டார். திருவருள் இருந்தால் தமக்குக் கிடைக்கும் என்று நம்பிக்கை கொண்டிருந்தார்.

டெல்லி ரயில்வே காலனியில், திருவல்லிக்கேணி பரமஹம்ஸ ஸ்ரீமத்புவனேஸ்வரி ஸ்வாமிகள் யாகம் நடத்த இருக்கிறார் என்ற அழைப்பிதழை யாகம் ஏற்பாடு செய்த சங்கத்தினர் திருமதி பிரேமா சந்திரசேகரன் அவர்களுக்கு அனுப்பி இருந்தனர். தமது கணவரோடு பிரேமா சந்திரசேகரன் யாகம் நடக்கும் இடத்திற்கு ஜோதிடர் தர்மராஜ அய்யரையும் அழைத்துச் சென்றிருந்தார். யாகம் முடிந்தவுடன் ஸ்ரீ ஸ்வாமிகள் தீர்த்தப் பிரசாதம் தரும்போது, தமது கிருஹத்தில் பூஜை நடத்திட வேண்டுமென்று சந்திரசேகரன் தம்பதி வேண்டிக் கொண்டனர். வெள்ளிக்கிழமை பூஜை ஏற்பாடு ஆயிற்று. ஸ்வாமிகள் வந்தவுடன் பாத பூஜை செய்து அவரது திருவடிகளில் சந்திரசேகரன் தம்பதியர் குழந்தையாய்க் கிடந்தனர்.

அம்பிகைக்கு ஆராதனை, அபிஷேகம், வண்ண மலர்களால் அர்ச்சனை மூன்று மணிநேரம் தேவியின் மந்திரங்கள் ரீங்காரமிட்டு அன்னையின் திருவடித் தாமரைகளில் புஷ்பக் குன்றுகள். கண்களை மூடிக் கொண்டு ஸ்வாமிகளையும், அம்பிகையையும் தியானம் செய்து கொண்டிருந்தார் தர்மராஜ அய்யர்.

பூஜை நிறைவுற்றது. அன்னைக்கு ஆரத்தி எடுக்கப் பட்டது. ஸ்வாமிகள் பூஜை செய்த மலர்களை சந்திரசேகரன் தம்பதிக்குக் கொடுத்தார். ஸ்வாமிகள் தர்மராஜ அய்யர் வர வேண்டியது என்று அழைத்தார். தர்மராஜ அய்யர் பூஜையின் ஆனந்தத்திலிருந்து மீளவே இல்லை. தர்மராஜ அய்யருக்குப் புஷ்பப் பிரசாதம் கொடுத்ததோடு உச்சிஷ்ட கணபதி யந்திரத்தையும் ஸ்ரீ ஸ்வாமிகள் தந்தருளினார். யந்திரம் கையில் கனக்கவே தன் கையில் இருந்த யந்திரத்தைப் பார்த்தார்.

அது இவ்வளவு நாள்கள் தான் எதிர்பார்த்த உச்சிஷ்ட கணபதி யந்திரம். எதற்காக இவ்வளவு நாள் காத்திருந்தோமோ அந்த யந்திரம்! உடல் புல்லரித்தது. மேனி வியர்த்தது. கண்ணீர் மல்க, திருவடியில் நெடுஞ்சாண்கிடையாய் விழுந்தார்.

ஸ்வாமிகள் தர்மராஜ அய்யரைப் பார்த்து, ஜோதிட சேவையை எல்லாருக்கும் செய்யவேண்டுமென அருளினார். பிரேமா சந்திரசேகரனுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. தர்மராஜ அய்யர் பிரேமாவிடம் தம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டு ஸ்ரீஸ்வாமிகளின் நினைவிலிருந்து மீளாமல் தேவியின் ஸஹஸ்ரநாமமான ஸ்ரீமாதா, ஸ்ரீமகராக்ஞி, ஸ்ரீமத் ஸிம்மாஸனேச்வரீ என்ற லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தை மனனம் செய்தார், ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டே. ஃ



அவன் நல்ல கறுப்பு. தொட்டு மை இட்டுக் கொண்டு விடலாம். அந்த அளவிற்குக் கறுப்பு. அவன் பிறந்த உடனே நர்ஸ் குழந்தையாகக் கொண்டு வந்து வெளியில் காட்டியபோதே அவனது பாட்டி – அப்பாவின் அம்மா – நம்ப மறுத்து விட்டார்களாம்.

"இது யார் குழந்தையோ... நம்ப குழந்தை இல்லை..." என்றார்களாம். "வேணும்னே குழந்தையை மாத்திக் காட்டறியாடியம்மா? இரு... இரு... டாக்டர் வரட்டும் சொல்றேன். எதுல விளையாடறதுன்னு வரைமுறையில்லாமல் போச்சு..." எனக் குழந்தையைக் காட்டிய நர்ஸிடம் சத்தம் போட்டார்களாம். அந்த நர்ஸ் சொல்லி, டாக்டர் வெளியில் வந்து சொல்லி,

"உங்க பேரன்தான் பாட்டி... சாட்சாத் உங்க மருமகள் பெற்றெடுத்த குழந்தை..." என்றெல்லாம் சத்தியம் செய்தபின்புகூடப் பாட்டி மறுகிக் கொண்டிருந்தார்களாம்.

"இது என்னடா வீரராகவா, உன் பிள்ளையாடா இது? தொட்டால் சிவந்து போற மாதிரி என்ன நிறம் நீ! உன் பெண்டாட்டி தங்கக் குத்துவிளக்கு மாதிரி எப்படி இருக்கா! உங்களுக்கா கன்னங்கரேல்னு இப்படி ஒரு குழந்தை வந்து பிறந்திருக்கு? நம்ம ஆத்துல யாரும் கறுப்பு இல்லையேடா? ஒரு வேளை அவ வீட்ல தாத்தாவுக்குத் தாத்தான்னு யாராவது கறுப்பா இருந்தாளோ...?" என்றெல்லாம் மன்றாடிக் கடைசியில் குழந்தையின் கறுப்பு நிறத்திற்கான பூர்வோத்திரத்தைக் கண்டுபிடித்தார்களாம்.

"அவளோட தாத்தாவுக்குக் கூடப் பொறந்த தங்கை ஒருத்தி இப்படித்தான் கன்னங்கரேல்னு இருந்தாளாம். அந்த மாதிரி கறுப்பு குடும்பத்திலேயே இல்லையாம்... உன் பிள்ளை அந்தத் தங்கையோட நிறத்தைக் கொண்டு வந்திருக்குபோல இருக்குமாடா வீரராகவா..." என்று சமாதானப் படுத்திக் கொண்டார்களாம். ஆனாலும் உயிரோடு இருந்தவரை கடைசி நிமிடம்கூட அவன் கறுப்பு என்கிற குறையுடனே கண்களை மூடினார்களாம்.

அப்படிப்பட்ட கறுப்பு அவன். கறுப்புதானே தவிர முகம் நல்ல லட்சணம். கண்களும், மூக்கும செதுக்கின மாதிரியான அழகு. உயரமும், அதற்கேற்ற பருமனுமாக மூலவர் விக்கிரகம் மாதிரி இருந்தான். தனியார் துறை நிறுவனம் ஒன்றில் பொறியியல் நிபுணராகச் சேர்ந்து தற்போது அந்த நிறுவனத்தின் மானேஜராகப் பதவி உயர்வு பெற்றிருக்கிறான். நல்ல சம்பளம். வீடு, கார், தொலைபேசி எல்லாமே அந்த நிறுவனத்தின் செலவு. வாரம் தவறாமல் டெல்லி, கல்கத்தா என்று விமானத்தில் பறக்கிறான்.

இத்தனை இருந்தும், பத்மினி – அவனது அத்தை பெண் – அப்பாவின் தங்கை பெற்ற பெண் – அவனைக் கல்யாணம் செய்துகொள்ள மறுத்துவிட்டாள்.

"ஐய... என்னம்மா நீ தெ
ராமனைக் கல்யாணம் செய்துக்
சொல்ற? அவனும் நானும் பக்
துல நின்னால் எள்ளும், பச்சா
யுமா இல்ல இருக்கும்" என்
சிரித்தாள்.

அவளது அம்மாவிற்கு அ
யாராவது கேட்டுவிடப் போ
றார்களே என்கிற பயம் வந்த
அண்ணாவின் காதில் பட்டா
என்ன நினைப்பான் என்று தோ
றியது. அப்பா இன்றி அந்த வ
டில் வளர்ந்த – அவர்கள் தயவ
படித்துமுடித்து தற்போது வே
தேடிக் கொண்டிருக்கிற – பெ
ணின் பேச்சு பிடிக்கவில்லை. த
அண்ணா, மன்னியின் ஆதர
இல்லாது போனால் இன்று இ
நிலைமையில் நிற்க முடிந்திரு
குமா என்கிற நன்றி உணர்
மேலிட்டது.

இவளை ஒரு வயதுக் குழந்
யாக இருந்தபோது நிராதரவா
விட்டுச் சென்ற கணவன்
நினைவு வந்தது. அன்றிலிருந்
இன்றுவரை எங்கு போனா
என்பதே தெரியவில்லை. அ
ஒரு வயதுக் குழந்தை இப்போ
இருபது வயதுப் பெண்ணா
நிற்கிறது என்றால் அதற்குக் கா
ணம் தன் அண்ணாவும், மன்னிய
அவர்களது ஒரே பையனை
கறுப்பு என்ற காரணம் காட்டி
கல்யாணம் செய்துகொள்
மறுப்பது நன்றியற்ற செயலாக
பட்டது. உள்ளுக்குள் கோப
வந்தது. அது பேச்சில் வெ
பட, சற்று அழுத்தமான குரல
கேட்டாள் அந்த அம்மாள்.

"கறுப்புன்னா என்னடி? தெ
ராமன் அழகா இல்லையா?"

"கறுப்பே அழகு. காந்த
ருசின்னு சொல்ல வரியாம்மா
என்னிக்காவது நான் காந்தலை
போட்டுச் சாப்பிட்டுப் பார்த்தி
கியாம்மா?"

"காந்தல் பிடிக்காது இல்
பின்ன எதுக்கு அவன்கிட்ட சி
சுப் பேசற? பழகற? வேணாம்ன
தூர ஒதுங்கிப் போக வேண்டி
தானே?"

91 தீபாவளி மலரில் வெளிவந்த சிறுகதை. மலர் படிக்காத அன்பர்களுக்காக மீண்டும் அளிக்கிறோம்.

"ஐயோ... சிரிச்சுப் பேசறது ஒரு தப்பாம்மா? சிரிச்சுப் பேசறவனையெல்லாம் கல்யாணம் செய்துக்க முடியுமாம்மா? எந்தக் காலத்துல இருக்கே நீ? ஒரு நல்ல ஃப்ரெண்டா நான் பழகறேம்மா".

"ஆனால் அவன் அப்படி நினைக்கலியேடி"

"அது என் தப்பு இல்லம்மா. வேற மாதிரி நினைக்கிறபடி நான் என்னிக்காவது பேசியிருக்கேனா, பழகியிருக்கேனான்னு நீ உன் அண்ணா பிள்ளைகிட்டயே வேணுமானா கேட்டுப் பாரு".

"இப்ப நீ என்னதாண்டி சொல்ற?"

"அம்மா! என் அழகுக்கு ஏற்ற மாதிரி வெள்ளை வெளேர்னு லட்சணமானவனா வரணும்னு நினைக்கிறேன். ஜெயராமனைப் போல் அத்தனை படிப்பு, பணம், வசதி இதெல்லாம் இல்லாமப் போனால்கூடப் பரவாயில்லை. ஆனால் கண்ணுக்கு நிறைஞ்சவனா, மனசுக்குப் பிடிச்சவனா இருக்கணும்னு நான் ஆசைப் படறதில் என்ன தப்பு சொல்லும்மா?"

அந்த அம்மாளால் பதில் சொல்ல முடியவில்லை. கடைசியாக அவள் கேட்ட கேள்வியின் நியாயம் மனதைத் தொடப் பேசாமல் போய்விட்டாள்.

நாலைந்து நாள்கள் சென்றபின் மெதுவாக அண்ணனிடம் சொல்லி, மன்னியிடம் சொல்லிக் கடைசியாக பத்மினியின் மறுப்பு ஜெயராமனையும் எட்டிற்று.

அதிர்ந்து போனான் அவன். மற்றவர்களைப்போல் சுலபமாக எடுத்துக்கொண்டுவிட முடியாதவனானான். அந்த அளவிற்கு பத்மினியை அவன் நேசித்தான். மனைவியாக மனதிற்குள் நிறுத்திப் பார்த்து சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தான். அவள் தன்னை மறுக்கக்கூடும் என்ற எண்ணம்கூட ஏற்படாததால் அவளது மறுப்பு பலமான அடியாக நெஞ்சில் விழுந்தது. வலியையும், வேதனையையும் ஏற்படுத்திற்று. நம்பமுடியாததாயிற்று. அதிலும் தன் நிறத்தைக் காரணம்காட்டி அவள் மறுத்தது அதிகக் கஷ்டம் கொடுத்தது. ஆனாலும் அந்த மறுப்பை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லாமற் போக அவன் தன்னை அமைதிப்படுத்திக் கொள்ள முயன்றான்.

பத்மினிக்கு வேறு இடங்களில் மாப்பிள்ளை பார்க்கிற செய்தி அவனுக்கும் தெரியவந்தது. இரண்டு மூன்று பேர் வந்து பெண் பார்த்து விட்டுப் போனதையும் அவன் பார்த்தான். ஆனாலும் எந்த இடமும் நிச்சயமாகவில்லை. கிட்டத்தட்ட முப்பது, நாற்பது ஜாதகங்கள் பார்த்து, பொருத்தமாக இருந்த பத்துப் பதினைந்து பேருக்குக் கடிதம் எழுதியதில் –

'பெண்ணின் அப்பா எங்கே இருக்கிறார்?' என்ற கேள்வியில் எல்லாம்அடிபட்டது.

"சின்ன வயசிலேயே, பெண்ணுக்கு ஒரு வயசாக இருந்த போதே எங்கோ போயிட்டார்".

"ஓடிப்போயிட்டாரா? ஏன் ஓடிப்போனார்? காரணம்?"

என்ன காரணம் என்பது யாருக்குத் தெரியும்? யாரால் சொல்லமுடியும்?

வீரராகவன் கோபப்பட்டு ஒருவரிடம் கத்திவிட்டார்.

"காரணம் என்னன்னு ஓடிப் போனவனைத் தேடிப் பிடிச்சு நீங்களே கேட்டுக்கோங்க".

வந்தவர் எழுந்து நின்றார்.

வீரராகவனை முறைத்துப் பார்த்தார்.

"அது எங்க வேலை இல்லை" – பட்டென்று சொல்லிவிட்டு வெளியேறினார்.

ஒவ்வொரு வரனும் இந்தக் காரணத்தினாலேயே தவறிப் போனது. கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஓடிப்போயிற்று. பத்மினியின் அம்மா அழுதழுது ஓய்ந்து போனாள். நெஞ்சுக்குள் இருந்த வெறுப்பையும், வேதனையையும் மகளிடம் கொட்டினாள்.

"பார்த்தியாடி, இதுக்குத்தான் அன்னிக்கே சொன்னேன். ஒழுங்கா ஜெயராமனைக் கல்யாணம் செய்துக்க சம்மதிச்சிருந்தால் இப்படிப்பட்ட பேச்செல்லாம் கேட்டுண்டிருக்க வேணாம். கண்டவாகிட்ட அவமானப் பட்டிருக்க வேணாம். இன்னும் யார் யார் கிட்டேயெல்லாம் பேச்சுக் கேட்டுக்கணும், அவமானப்படணும்னு என் தலைல எழுதி இருக்கோ தெரியலை".

அப்போதுதான் சட்டென்று அவள் ஒரு முடிவிற்கு வந்தாள்.

"இல்லம்மா, இனிமேல் நீ யார் கிட்டேயும் பேச்சுக் கேட்டுக்க வேணாம். அவமானப்பட வேணாம். நான் ஒரு முடிவுக்கு வந்துட்டேம்மா. ஜெயராமனையே கல்யாணம் செய்துக்கறேம்மா. நானே இதை அவர்கிட்ட சொல்றேன்".

மறுநாள் அவள் வந்து சொன்னபோது அவன் மீண்டும் அதிர்ந்தான். ஒரு வினாடி அமைதியாக நின்றவன் பின்பு நிதானமான குரலில் மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

"இதப்பாரு பத்மினி! உணர்ச்சிவசப்பட்டு இந்த மாதிரி முடிவெல்லாம் எடுக்காதே. ஏதோ ஒரு வெறுப்பிலும், விரக்தியிலும் எடுக்கப்படற எந்த முடிவும் சரியானதாக இருக்காது. ஆரம்ப முதலே என்னைக் கல்யாணம் செய்துக்க விருப்பப்படாத நீ – ஒரு நல்ல நண்பனாக – சிநேகிதனாக மட்டுமே நேசிச்ச நீ, இப்போ எதுக்காக என்னைக் கல்யாணம் செய்துக்க சம்மதிக்கற? வேற வழி இல்லாமல்தானே? உன் அம்மாவோட நிர்ப்பந்தத்துனாலதானே? மனது தளர்ந்துபோய்த்தானே இப்படிப்பட்ட முடிவுக்கு வந்தே? உன்னைப் பெண் பார்க்க வந்தவங்க கேட்ட கேள்விகள்தானே உன்னை இந்த அளவிற்கு விரட்டி இருக்கு? பிடிக்காதவனை, அதாவது கல்யாணம் பண்ணின்டு, கணவனாக ஏத்துக்க முடியாதுன்னு நினைச்சவன்கிட்டேயே வந்து, கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம்னு சொல்ல வச்சிருக்கு இல்ல பத்மினி. இதுக்குச் சரின்னு தலையாட்ட என்னால் முடியாது. ஒரு பொண்ணு எதுல வேணா காம்ப்ரமைஸ் பண்ணலாம். ஆனால் இதுல பண்ணக்கூடாது. இதுல பண்ற காம்ப்ரமைஸ், எல்லாத்துலயும் காம்ப்ரமைஸ் பண்ணவச்சிடும். இது மனசுக்குப் பிடிச்ச விதமா திருப்தியா அமைஞ்சு போயிடுத்துன்னு வச்சுக்கோ. வேற எந்தக் குறையும் பெரிசாப்படாது, தெரியாது.

ஆனால் இதுவே குறையா அமைஞ்சு போயிடுத்துன்னா வாழ்க்கை அர்த்தமற்றதா, சுவாரஸ்யமற்றதா மாறிடும். அந்த



மாதிரி உன் வாழ்க்கை மாறிடக் கூடாது. எந்த நிர்ப்பந்தத்திற்காகவும் நீ இந்த முடிவுக்கு வரக்கூடாது. சமூகத்தோட இந்தச் சின்னச் சலசலப்பிற்குப் பயந்து போயிடக் கூடாது. உன்அப்பா பற்றின உண்மையை நாம் சொல்றோம். இப்போ வந்த பத்துப்பேர் அதை நம்பாமல் கேள்வி கேட்டிருக்கலாம். ஆனால் நம்பற ஒரு நல்ல மனுஷன் நிச்சயமா இருப்பான். அவன் எங்கே இருக்கான்னு தேடிப்பிடிக்க வேண்டியது நம் கடமை. தேடிப் பிடிச்சவன் உன் மனசுக்குப் பிடிச்சவனா அமையணும் என்பது வேற கவலை.

இந்தக்கவலை, கடமை ஆகிய இரண்டிற்கும் இனிமேல் நான் பொறுப்பு ஏத்துக்கறேன். என் நண்பர்களில் உன் நிறத்திற்கும், அழகுக்கும் பொருத்தமா எத்தனையோ பேர் இருக்காங்க. நல்ல மனசுடையவங்க இருக்காங்க. அவங்ககிட்டே சொல்லித் தகுதி வாய்ந்த ஒரு மாபபிள்ளையை நானே உனக்குத் தேடித் தரேன். நீ சொன்ன மாதிரி ஒரு நல்ல நண்பனா - சினேகிதனா நடந்து காட்டறேன். கவலைப்பட்டு, அவரசப்பட்டு இந்த மாதிரி அசட்டுத்தனமான முடிவுக்கெல்லாம் வராமல் தைரியமானவளாக இரு. நீ - நீயாகவே இரு. என்ன?"

சொல்லிவிட்டு அவன் போய் விட்டான். இவள் தாங்க முடியாதவளாகக் கண்களை மூடிக் கொண்டாள். அதுவரை அவனை நண்பனாகப் பார்த்தவள், இப்போது ஒரு ஞானியாக உணர்ந்தாள். அவனது நிலைமையில் வேறு ஒருவனாக இருந்திருந்தால் என்ன செய்திருப்பான் என்பதை யோசித்துப் பார்த்தாள். தான் சரி என்றதும் உடனே சந்தோஷப்பட்டிருப்பான். ஆசைப்பட்டதை அடைய முடிகிற ஆனந்தத்தில் மிதந்திருப்பான். அப்பா, அம்மாவிடம் சொல்லி அடுத்த முகூர்த்தத்திற்கே நாள் பார்த்திருப்பான்.

ஆனால் இவன்?

ஞானம் என்பது மனைவி மக்களைத் துறந்து காஷாயம் தரிப்பது மட்டுமல்ல; காட்டிற்குப் போய்த் தவம் செய்வது மட்டுமல்ல; சரியான முடிவை, சரியான தருணத்தில், சரியான விதத்தில் எடுப்பதும்கூட ஒருவகை ஞானம் தான் என்பது முதல்முறையாகப் பிடிபட அப்படியே நின்று கொண்டிருந்தாள் அவள்.

மஸாஜ் செய்யும் முறை

லீலா பத்மநாபன்



முகத்தின் எழிலை அதி
க்க மஸாஜ் செய்து கொள்
து ஒரு சிறந்த வழி. அதைச்
ய்யவேண்டிய முறைப்படிச்
ய்தால்தான் சதை தொய்
டையாமல் இருக்கும்.

1. முதலில் முன் நெற்றிக்
சம் முகத்தின் மீது படி
தபடி ஸ்கார்ப் கட்டிவிட
ண்டும்.

2. கேடில் கிளன்சிங் மில்க்
காண்டு முகத்தைச் சுத்தம்
ய்யவேண்டும்.

3. பின்னர் சார்ம்ஸ் ஆல்
பஸ் கோல்டு கிரீம் அல்லது
லிவ் ஆயில் கை நிறைய
டுத்துக்கொண்டு படத்தில்
ம்புக்குறியிட்டுள்ள திசைப்
ஆரம்பித்து முடிக்க
ண்டும்.

4. கட்டை விரல்கள் நீங்க
க மற்ற விரல்களை
ன்மையாக உபயோகிக்க
ண்டும்.

நெஞ்சிலிருந்து ஆரம்பித்து
ல் தாடையை நோக்கி மஸாஜ் செய்ய வேண்டும். தாடையின் ஓரத்திற்கு வந்ததும் கைகளை நீக்கிவிட வேண்டும்.

தோள் பட்டையிலிருந்து ஆரம்பித்துத்தாடைவரை மஸாஜ் செய்யலாம்.

பிறகு தாடையின் நுனியிலிருந்து ஓரமாகச் சென்று காது மடல்கள் வரை சென்று வட்டமாகச் சுழன்றபடி கன்னக் கதுப்புகள் வரை மஸாஜ் செய்ய வேண்டும்.

உள் கண் ஓரத்தில் இருந்து மூக்கின் அடிப்பக்கம் வரை வந்து பின்னர் கன்னக்கதுப்பு வழியாகப் பொட்டுக்குச் சென்று இறுதியில் வட்ட வடிவமாகச் சென்று முடிக்க வேண்டும்.

பின் உதட்டின் மேல்பாகத்தில் நடுவில் ஆரம்பித்துக் கீழ்க் கன்னத்தின் வழியாகக் காதின் அடிப்பாகம் வரை செய்ய வேண்டும்.

நடு நெற்றியில் ஆரம்பித்துப் புருவங்கள் மேல் வழியாகச் சென்று பொட்டுவரை மஸாஜ் செய்ய வேண்டும்.

புருவங்கள் மீதிருந்து மேற்பறமாய் நெற்றியின் இறுதி வரை கொண்டு செல்ல வேண்டும்.

கண்கள் மூடிய நிலையில் கண் இமைகள் மீது கூட மஸாஜ் செய்ய வேண்டும். இது கண்களுக்கு ஓய்வைக் கொடுத்துப் புத்துணர்ச்சியை ஊட்டும்.

இவரைத் தெரிந்து கொள்ளுங்கள்

திருமதி சுனந்தா

சந்திப்பு : லீலா



இல்லறத்தில் இருந்து
காண்டே வேதாந்தம் கற்றுத்
தேறி. தான் பெற்ற ஆனந்
த்தை இவ்வையமும் பெற
வேண்டும் என்ற சீரிய நோக்
கோடு செயல்பட்டு வருகிறார்
ருமதி சுனந்தா. பம்பாயில்
ட்டப்படிப்புக் கற்றுத் தேறிய
வர் கிட்டத்தட்டப் பதினைந்து
ருடங்கள், வேதாந்தியான
னது தந்தை திரு. ஏ. பார்த்த
ரதி அவர்களது அறிவுரை
ன் பேரில் ஆசிரமம் ஒன்றில்
வதாந்தம் பயின்று தேறி
னார்.

வேதங்கள் என்பவை அறி
ன் எல்லைக் கோடுகள் என
ாம். இவற்றைக் கற்பவர்கள்
டையும் இன்பத்தை வார்த்தைகளால் உரைக்க இயலாது. அவ்வின்பத்தை நாமும் பெற வேண்டும் என்றால் இவர் நடத்தும் வகுப்புகளுக்குச் சென்று அமர்ந்தாலே போதும். தேனினும் இனிமையான குரலில் பகவத் கீதையில் சுலோகங்களுக்கு ஆணித்தரமாக இவர் கூறும் விளக்கங்கள் நம் நெஞ்சில் பசுமரத்தாணி போல் பதிந்து விடுகின்றன.

உலகத்தின் அனைத்து நாடுகளுக்கும் தந்தையுடன் சென்று உரையாற்றியுள்ள இவர், பல கருத்தரங்குகளையும் நடத்தி உள்ளார். மன உளைச்சல்களைக் குறைக்கவும், தங்களை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும், செயல்திறனை அதிகப்படுத்தி உற்பத்தியைப் பெருக்கவும் இக்கருத்தரங்குகளுக்குப் பல நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் ஏற்பாடு செய்து பயன் பெற்றுள்ளனர்.